கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை

262

ஆடி
01.07.2025

100/-

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்

சந்திரிக்கா தர்மரத்தினம்

ஐங்கரன் விக்கினேஸ்வரா

பேராசிரியர் சபா.ஜெயராசா

கோகிலா மகேந்திரன்

தீபிகா

மா.சிவசோதி

மலரன்னை

ஜலீலா முஸம்மில்

கார்த்திகா கணேசர்

கலாநிதி ஜீவகுமாரன்

எஸ்.ஏ.கப்பார்

அனுசியா சுந்தரலிங்கம்

இ.சு.முரளிதரன்

சூரன் ஏ.ரவிவர்மா

தமிழ்க்கவி

சோ.ப

தமிழ்க்கீரன்

கனிவுமதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

கலை இலக்கிய மாத சஞ்சிகை

2025 - ஆடி (01.07.2025)

# பொருளடக்கம்

**சிறுகதைகள்**

மா.சிவசோதி - 07

மலரன்னை - 12

எஸ்.ஏ.கப்பார் - 24

**கவிதைகள்**

தீபிகா - 06

கலாநிதி ஜீவகுமாரன் - 09

ஜலீலா முஸம்மில்- 15

சூரன் ஏ.ரவிவர்மா- 31

சோ.ப - 32

தமிழ்க்கீரன்- 40

**கொமிக்ஸ் தொடர்**

இ.சு.முரளிதரன் - 20



**நேர்காணல்**

அனுசியா சுந்தரலிங்கம்- 27



**தொடர் நாவல்**

தமிழ்க்கவி - 36

**உள் ஓவியங்கள்**

கனிவுமதி

**கட்டுரைகள்**

**நாடக ஆளுமை - பராக்கிரம நிரியல்ல**

சந்திரிகா தர்மரட்ணம் - 03



பருவ வெளியீட்டுப்பகுதி
பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

**நவீன ரஷ்ய இலக்கிய சிருஷ்டி:**
**பெருங்கவி அலெக்சாண்டர் புஷ்கின்**

ஜங்கரன் விக்கினேஸ்வரா - 10



**திரைப்பட உளவியல்**

பேராசிரியர் சபா.ஜெயராசா – 16

**போர்**

நாட்டிகலாநிதி கார்த்திகா கணேசர் – 18

**ஆளுமையின் ஆட்சி, அகற்சியும் ஆழமும் - 02**

கோகிலா மகேந்திரன் – 33

PL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவநதி

**2025 ஆடி இதழ் – 262**

**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**ஆசிர்வதிப்பவர்**
கலாநிதி த.கலாமணி



**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.



**ஆலோசகர் :**
திரு.கி.நடராஜா
தில்லைநாதன் கோபிநாத்



**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.



## ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி – 100/= ஆண்டுச்சந்தா – 3000/=
வெளிநாடு – $ 100U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY



# ஜீவநதி

**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**


அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
– பாரதிதாசன்–

## எதிர்காலத்தில் நாவல்???

ஈழத்து நாவல் இலக்கியத்தின் எதிர்கால நிலை பற்றிச் சிந்திக்கின்ற போது மிகுந்த கவலை ஏற்படுகின்றது. உண்மையில் ஒரு எழுத்தாளனுக்கு பூரணத்தைக் கொடுப்பது நாவல் என்பார்கள். ஈழத்தில் பல அருமையான நாவல்கள் வெளி வந்துள்ளன. காலத்துக்கு ஏற்ற வகையில் வெளியான நாவல்கள் பல இன்றும் கொண்டாட்டத்திற்கு உரியனவாக இருக்கின்றன. குறித்த சில எழுத்தாளர்களை நாவலாசிரியர்களாகவே இனம் கண்டு இன்று வரை கொண்டாடி வருகின்றோம். காலத்தால் நிலைத்து நிற்கக் கூடிய பல நாவல்களை ஈழத்து எழுத்தாளர்கள் பலர் தந்துள்ளர்கள். குறித்த சில தமிழ் நாவல் பிரதிகள் ஈழத்தில் பல்லாயிரக்கணக்கில் விற்பனை செய்யப்பட்டுள்ளன. ஈழத்து நாவல்களை ஆவலுடன் வாசிப்பதற்கென மிகப்பெரியதொரு வாசகர் கூட்டம் ஒன்று ஈழத்தில் இருந்தது. செங்கை ஆழியான், செ.கணேசலிங்கன், எஸ்.பொ. போன்றவர்களின் பல நாவல் பிரதிகள் பல பதிப்புகளைக் கண்டது.

அண்மைக்காலமாக வெளி வந்த பல நாவல்கள் ஈழப் போரை மையமாகக் கொண்டு, போரின் அவலத்தையும், போரின் வடுக்களையும் பேசின. அவற்றுள் சிறந்த பல நாவல்களும் இருக்கின்றன. சில நாவல்கள் வியா பார நோக்கில் எழுதப்பட்டவையாகவும் வெளியாகியுள்ளமையும் குறிப்பிடத் தக்கது. சில புலம்பெயர்ந்தவர்களும் சிறந்த சில நாவல்களை தந்து இருக்கிறார்கள்.

இன்று நாவலாசிரியர்கள் என்று குறிப்பிடக்கூடியவர்களாக சிலரே காணப்படுகிறார்கள். பலர் நாவல் எழுத முற்படுவதில்லை. மிகச் சிலரே நாவல் இலக்கியத்தை எழுதிக் கொண்டு இருக்கிறார்கள். மனதில் நின்று நிலைக்கக் கூடிய நாவல்கள் மிகச் சிலவே வெளியாகி கொண்டு இருக்கின்றன. புதியவர்கள் பலர் கவிதையை மாத்திரமே அதிகமாக எழுதி வருகின்றார்கள். பெண்களிலும் மிகச் சிலரே நாவல் எழுதுகிறார்கள். வாசகர்களும் அதிக பக்கங்களைக் கொண்ட நாவல்களை வாசிக்க அக்கறை காட்டாமையும், அதிக பக்கங்களில் நாவல்களை அச்சு செய்து விற்பனையில் படும் இடர்பாடும் கூட சிலர் ஆர்வங்காட்டாமைக்கு காரணமாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது. அண்மைக் காலமாக ஒவ்வொரு வருடத்திலும் தேறக்கூடிய நாவல்கள் என 5-10 இற்குள் தான் குறிப்பிட முடியும். தற்போதும் மூத்த தலைமுறையினரே நாவல் இலக்கியத்தை படைத்து வருகின்றார்கள். இளம் படைப்பாளிகள் நாவல்களைப் படைக்க வேண்டும். எமது இலக்கியம் மேலும் வளம் பெற வேண்டும்.

– க.பரணீதரன்


ஜீவநதி கிடைக்கும் இடங்கள் / விற்பனையில்உதவும் நல்லுள்ளங்கள்
பரணீ புத்தகக்கூடம் - நெல்லியடி
புத்தகக் கூடம் - திருநெல்வேலி
பூபாலசிங்கம் - யாழ்ப்பாணம்
பூபாலசிங்கம் - செட்டித்தெரு, கொழும்பு
அ.யேசுராசா, நா.நவராஜ், சி.ரமேஷ், கந்தர்மடம் அ.அஜந்தன்,
புத்தகப்பண்பாட்டுப் பேரவை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரிகா தர்மரட்ணம்

# நாடக ஆளுமை பராக்கிரம நிரியல்ல



**அறிமுகம்**

இலங்கையின் நவீன நாடக ஆளுமைகளில் பராக்கிரம நிரியல்லவும் ஒருவர். இவரது நாடகங்கள் பலரால் பாராட்டப்படுபவையாகக் காணப்படுவதுடன் பல விருதுகளையும் பெற்றுள்ளன. 2024 ஆண்டு கொழும்பு பல்கலைக்கழகத்தின் கட்புல அரங்க ஆற்றுகை பிரிவு கௌரவ கலாநிதிப்பட்டம் வழங்கி கௌரவித்தது. இவருடைய படைப்புக்கள் யாவும் மனிதாபிமானத்தை வலியுறுத்துபவையாகவும், மனிதருக்கும் இயற்கைக்கும் இடையேயுள்ள இறப்புப் பற்றி விவாதிப்பவையாகவும் காணப்படுகின்றன. இவரது கலை சேவை அரங்கத்தில் மாத்திரமன்றி தொலைக்காட்சி, சினிமா வரை வியாபித்திருப்பதுடன், என்றும் மனிதத்துவத்திற்கு எதிராக பொருள் தேடல் படைப்புக்களாக மாறாமல் இருப்பது உயர் பண்பாகும். தமிழ் சிங்கள ஐக்கியத்தினை செய்முறை ரீதியாக சாதித்துக் காட்டிய நாடக திரைப்பட தயாரிப்பாளராவர். இவரது நாடகக் குழுவில் தமிழ், சிங்கள, இஸ்லாமிய கலைஞர்கள் பங்கு கொள்வதும் அவரது நாடகங்கள் தமிழ் சிங்கள மொழியில் மேடையேற்றப்படுவதும் குறிப்பிடத்தக்கது. பல்லின உறுப்பினர்களால் உருவாக்கப்பட்ட நாடகக் குழு என்பதும், மக்கள் களரியை ஆரம்பிப்பதில் ஆரம்ப இலக்காகவும் நிபந்தனையாகவும் இருந்தது. 1949.04.18 ஆம் திகதி இரத்தினபுரியில் நிரியல்ல என்னும் இடத்தில் ஜயசிங்க பண்டார நிரியல்ல அமராவதி தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார். சிறுவயதில் தாயாரை இழந்தார்.

**பூர்வீகம்**

இவரது இயற்பெயர் கிரிஸ்ணதாச நாராயண பண்டாரநாயக்க பிரமச்சாரி முதியான்சேலாகே பராக்கிரம பண்டார நிரியல்ல என்பதாகும். இவரது பூர்வீகம் பற்றி நோக்கும் போது கிருஸ்ணதாஸ் நாராயணன் பண்டாரநாயகம் பிரமச்சாரி முதலியார், இலங்கைக்கு இந்தியாவிலிருந்த வந்த குறித்த குடும்பத்தில் முதலாவது பரம்பரையின் தலைவனாக 1593 இல் சீதவாக்க என்னும் பிரதேசத்தில் இராஜ சிங்கன் என்னும் மன்னனின் மாணிக்கக்கல் தொழிலை மேற்பார்வை செய்வதற்காக வந்தார். இவரது தொழில் நேர்மைக்காக, சீதவாக்க இராஜசிங்கன் நிரியல்ல என்னும் கிராமத்தை இவருக்கு எழுதிக் கொடுத்ததற்கான சான்றாதாரங்கள் இன்னும் தமது கைகளில் இருப்பதாகக் பராக்கிரம நிரியல்ல கூறுவதுடன், கிருஸ்ணதாஸ் நாராயணன் பண்டாரநாயகம் பிரமச்சாரி முதலியார் என்னும் இந்திய நாமமே இன்று கிருஸ்ணதாஸ் நாராயண பண்டார நாயக்க முதியான்சே என்று மாற்றமடைந்துள்ளது என்பதற்கு சான்றா தாரங்கள் இன்றும் எம்மவர் மத்தியில் காணப்படுகிறது என்கிறார்.

**கல்வி**

இவர் ஞனுமுல்ல மத்திய கல்லூரியில் கல்வி கற்றார். நாடகத்திலிருந்த ஆர்வம் காரணமாக கொழும்பு லயனஸ் வென்ற் ஞாபகார்த்த கலை மையத்தில் நாடகமும் அரங்கியலும் பாடத்தைக் கற்றார். 1971 இல் தம்ம ஜாகொட "நடிப்புக்கலை அரங்கினை" ஆரம்பித்தார். அது இந்நாட்டில் பயிற்சிப் பட்டறைகள் நடத்தும் மற்றும் நடிப்புக் கலையைப் பயின்று கொள்ளும் கேந்திரிய ஸ்தானமாகியது. பராக்கிரம நிரியல்ல 1974 இல் இங்கு இணைந்து கொண்டார். தம்ம ஜாகொட, எதிரிவீர சரத்சந்திர, சுசரித்த கமலத், காமினி ஹத் தொட்டுவேகம, பந்துல ஜயவர்தன, சுனந்த மஹேந்திர போன்ற நாடகக் கலைஞர்கள், அறிஞர்கள் இங்கு விரிவுரைகள், மற்றும் செய்முறைப் பயிற்சிகளை அளித்தார்கள். மேலும் இவருக்கு, தம்ம ஜாகொட "மனமே" நாடகத்தை இரண்டாவது முறை தயாரிக்கும் போது ஆரம்பத்திலிருந்தே பார்க்கும் வாய்ப்பும் கிடைத்தது. இவை இவரது வாழ்வில் அவர் பெற்ற முதலாவது சிறப்பான நாடகப்பயிற்சி அனுபவ மாக அமைந்தது.

**தெருவெளி அரங்கின் அறிமுகம்**

நடிப்புக்கலை அரங்கின் ஏற்பாட்டில் 1975 இல் விசாகை முழுமதித் தினத்தன்று அநுராதபுரம் புகையிரத விளையாட்டு மைதானத்தில் அமைக்கப்பட்ட திறந்த வெளி அரங்கில் நாடகத்தை மேடையேற்றுவதற்கு திட்டமிடப்பட்டாலும் இவர்கள் எதிர்பார்த்த வெற்றி கிட்டவில்லை. மறுநாள் புகையிரத நிலையத்தில் கொழும்பிற்குச் செல்லும் கூட்டத்தினைக் கண்டபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவரே தெரிவித்த யோசனைப்படி புகையிரத மேடையில் ஹத்தொட்டுவேகம "எல்லிலா மெரண்ட பெரித" நாடகத்தினை அரங்கேற்றினார். அப்போது எதிர் பார்த்தளவு பார்வையாளர்களின் ஈர்ப்புக் கிட்டியது. இதுவே இலங்கை வீதி நாடகம் தொடர்பான இலக்கி யத்தில் முதலாவது தெருவெளி நாடகக் காட்சி என இனங்காணப்பட்டது.

நடிப்புக்கலை அரங்கின் கலைஞர்கள் தொடர்ந்தும் அவ்வாண்டிலேயே எசல முழுமதித் தினத்தன்று கண்டி வாவியின் அருகில் நாடகங்களை மேடையேற்றினர். அதன்பின் பராக்கிரம நிரியல்ல தெரு நாடகக் குழுவின் பிரதான அமைப்பாளராக நியமிக்கப் பட்டார். நடிகனும் பார்வையாளனும் சந்திக்கும் எந்த வொரு இடமாயினும் நடிப்புக்களமாகும் என்பதை இனம் கண்ட இவர்கள் பௌத்த விகாரைகள், வயல்வெளிகள், தொழிற்சாலைகள், மைதானங்கள், தெருக்கள், மரக்கறிச் சந்தைகள், பஸ்நிலையங்கள் போன்ற பல இடங்களில் நாடகங்களை அரங்கேற்றினார்கள்.

இந்தியாவில் செயலமர்வினை முடித்து இலங்கை திரும்பிய பராக்கிரம நிரியல்ல "திறந்த கலை வட்டம்" என்ற பெயரில் தெருநாடகக் குழுவை ஸ்தாபித் தார். 1983 இல் முதலாவது நீண்ட நாடகமான பேட்டோல் பிரெஜ்டின் "கலிலியே" நாடகத்தினை நீல் ஸ்ரீ விஜேயதுங்க மொழிபெயர்க்க பராக்கிரம நிரியல்ல தயாரித்தார்.

**இந்திய கலைப்பயணம்**

இதுவரை இவர் பெற்றுக் கொண்ட அனுபவங் களின் அடிப்படையில் அவரது முதலாவது நாடகத் தயாரிப்பான "செக்கு" (செக்குவ) நாடகத்தை 1975 இல் தயாரித்தார். இந்தியாவில் ராய்பூரில் நடைபெறவிருந்த பிரஜைகள் அபிவிருத்திக்காக நடிப்புக்கலையினைப் பயன்படுத்திய குழு ஒன்றின் சார்பாக, நடிப்புக்கலை பயிற்சிப்பட்டறை ஒன்றுக்கு இலங்கையின் நாடகக் கலைஞர்கள் சிலரைத் தெரிவு செய்வதற்காக 1977 இல் "ஹபீப் தன்வீர்" இலங்கை வந்த போது செக்குவ நாடகத்தைப் பார்த்து மகிழ்ந்த அவர் நடிப்புக்கலை பயிற்சிப் பட்டறைக்கு பராக்கிரம நிரியல்லவைத் தெரிவு செய்தார். இவருடன் சோமலதா சுபசிங்க, சிரில விக்ரமகே, கே. எஸ். பெனாண்டோ ஆகியோருக்கும் இவ்வாய்ப்புக் கிடைத்தது.

ஹபீப் தன்வீரின் நடிப்புப்பாணிகளை பராக்கிர நிரியல்லவால் புரிந்து கொள்ள முடிந்தது. ஹத்தொட்டு வேகமவின் வீதிநாடகங்களில் கண்ட குறைபாடுகளை ஹபீப் தன்வீரின் நடிப்பு முறையில் இவர் காணவில்லை. நகரத்திலிருந்து கிராமத்துக்கு செல்லும் போது நாடகத் தின் பண்புசார்தன்மை குறைக்கப்படாத நடிப்புமுறை ஒன்றினை தன்வீர் பயன்படுத்தியமையை அவதானித் தார். அத்துடன் "Black Tent Theatre Group" என அழைக்கப் பட்ட ஜப்பானிய நாடகக்குழுவொன்றை பராக்கிரம நிரியல்ல சந்தித்தார். புரோசீனியம் முறையில் அமைக்கப்பட்ட அரங்கமொன்றில் சுமார் 250 பார்வை யாளர்கள் இருந்து பார்க்கக் கூடிய நடமாடும் அரங்க மொன்று அவர்களிடமிருந்தது. அது பெருமளவில் சர்க்கஸ் கூடாரங்களைப் போன்றதாகும். அவர்கள் நடமாடும் மேடையுடன் ஜப்பானில் மட்டுமல்லாது ஏனைய நாடுகளிலும் நாடகங்களை நடத்தி வந்தர்கள். இதையெல்லாம் பராக்கிரம நிரியல்ல அவதானித்து தன் அரங்கமைப்பு எவ்வாறு இருக்க வேண்டும் என்று திட்டமிட இவை காரணமாக அமைந்தது.

**எதிர் கொண்ட சவால்கள்**

இவருடைய மக்கள் களரி (சிங்களத்தில் ஜன கரலிய) 2004 ஆம் ஆண்டு ஆரம்பமானது. மக்கள் களரி ஆரம்பிப்பதற்கு பல சவால்களை சந்தித்தார். யாரும் இவருக்கு உதவ முன்வரவில்லை. இறுதியாக நடமாடும் அரங்கம் பற்றிய கனவை எந்த அரசும் ஆதரவளிக்காத போது சமகால பெண்கலைஞரான அனோலி பெரேராவின் தலையீட்டினால், நெதர்லாந்து நாட்டின் Institutional For Corpation With Developing Countries எனும் அரசுசாரா நிறுவனத்திடம் இருந்து நிதி பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந் நிறுவனம் மக்கள் களரி ஆரம்பிப்பதற்கு ஒரு இலட்சம் யூரோ நிதியைப் பெற்றுக் கொடுத்தது. இரண்டு வருடத்திற்கு அந்நிதி போதுமானதாக இருந்தது. பின்னர் USAID (United States Agency for International Development) நிறுவனம் மக்கள் களரி நடிப்புக் களத்தை நிர்மானிப்ப தற்காக நிதியை பெற்றுக் கொடுத்தது. மத்திய பொறியியல் அதிகார சபையினால் அதன் வரைபடம் தயாரிக்கப்பட்டது. இவ்வாறான அமைப்புக்களின் பங்களிப்புடன் இன்றுவரை மக்கள் களரி நாடுபூராகவும் சஞ்சரித்து வருகிறது.

**நாடகச் செயற்பாடுகள்**

**1.மேடை நாடகங்கள்**

பராக்கிரம நிரியல்ல சரண்தாஸ், சீதாம்பரபட்ட / அந்தரமல், செக்குவா செக்கு, மாயப்பட்டாடை / எருக் கலம்பூ, மகராக்ஷயா, சொரு எவில்லா / சிங்கித்தி சிஹினய, அஹங்கார கிரிப்பி / சொகலட் யோதயா, ரூகடயோ, மெட்டி கரத்தய / களிமண் வண்டி, வெண கட்டி வட்டம்/ ஹூணுவட்டையா, அன்பு அமுதூறும் அயலார், தித்த கஹட்ட மற /கசப்புச் சாயம், அண்டுரா சக எலிய / இருட்டும் வெளிச்சமும், எந்தையும் தாயும் / ஹூரு நோநேகை, பயணிகள், பொறிசதையா, கொட்டம் (2024) போன்ற பல நாடகங்களையும், நாடகப் பட்டறை களையும், செயலமர்வுகளையும் 2004 ஆம் ஆண்டி லிருந்து இன்றுவரை மக்கள் களரியூடாக இலங்கை யின் பலபாகங்களிலும் தமிழிலும் சிங்களத்திலும் நிகழ்த்தி வருகிறார். அந்தரமல் / சீதம்பரபட்டா, மாயப் பட்டாடை / எருக்கலம் பூ ஆகிய நாடகங்கள் இரு மொழியிலும் 2000 தடவைகளுக்கு மேல் மேடையேற்றப் பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

**A. சரண்தாஸ்**

இந்தியாவின் தேசிய நாடகக் கலைஞரான ஹபீப் தன்வீரின் "சரண்தாஸ் சேர்" நாடகத்தினை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'சரண்தாஸ்' நாடகத்தில் ஒரு காட்சி

தமிழிலும் சிங்களத்திலும் மொழி பெயர்த்தனர். சரோஜினி அருணாசலம் தமிழில் மொழிபெயர்த்தார். சரண்தாஸ் ராஜஸ்தான் மாநிலத்தில் பின்தங்கிய இந்தியக் கிராமம் ஒன்றில் வாய்மொழிக்கதையாக மக்களால் வழங்கப் பட்டு வந்த ஒரு கிராமியக் கதை. நேர்மையும் உண்மையும் கொண்ட ஒரு திருடனைப் பற்றி மக்கள் வைத்த அபிப்பிராயமே அக்கிராமியக் கதை எழக்காரணமாயிற்று. சரண்தாஸ் நேர்மையும் வாய்மையும் தொழில் திறமையும் கொண்ட திருடன். பொய் சொல்லமாட்டேன் என்று ஒரு குருவுக்குக் கொடுத்த வாக்கை மீறாத உத்தமன். அவனது இந்த கொள்கைப் பிடிப்பு அவனது உயிரை பறிக்கும் வரை சென்ற போதும் கூட அவன் பொய் உரைக்கவில்லை.

"இலங்கையின் நவீன சிங்கள நாடக ஆளுமைகளில் ஒருவரான பராக்கிரம நிரியல்ல அவர்கள் இனப்பூசல் கொழுந்து விட்டு எரியும் இன்றைய சூழலில் தமிழ் கலைஞர்களையும் சிங்கள கலைஞர்களையும் இணைந்து 200 க்கு மேற்பட்ட தடவைகள் இலங்கை பூராகவும் "சரஸ்தாஸ்" நாடகத்தை மக்கள் மத்தியில் மேடையேற்றியுள்ளார் என்பது யாரும் நம்ப முடியாத செய்தி. ஆனால் அது நடந்தேறியிருக்கிறது என்பது தான் உண்மை. அண்மைக்காலத்தில் மேடையேறிய மிகவும் தரம்மிக்க தமிழ் மேடை நாடகமாக "சரஸ்தாஸ்" நாடகத்தினை பராக்ரம நிரியெல்ல நெறிப்படுத்தி யுள்ளார்" என்று கூறுகிறார் பேராசிரியர் சி. மௌனகுரு (07.12.2007). பேராசிரியர் சி. மௌனகுருவின் பார்வையில் பராக்ரம நிரியெல்ல மிக உயர்ந்த ஸ்தானத்தில் இருக்கிறார் என்பதற்கு சான்றாக இப்பதிவு அமைகிறது.



'வெண்கட்டி வட்டம்' நாடகத்தின் ஒரு காட்சி

**B. வெண்கட்டி வட்டம்**

வெண்கட்டி வட்டம் பேட்டோல் பிரெஜ்ட்டின் The Caucasian Chalk Circle நாடகத்தினை தமிழில் குழந்தை ம. சண்முகலிங்கம் மொழிபெயர்த்தார். இதில் வடக்கின் நடிகர்களும் இணைந்து நடித்தார்கள். இந்நாடகத்தை பராக்கிரம நிரியல்ல மற்றும் கலாநிதி கதிரேசு ரதிதரன் ஆகியோர் நெறியாள்கை செய்தார்கள். இந்நாடகத்தை ஹென்றி ஜயசேன தயாரித்த ஹூனு வட்டயே கதாவ என்னும் பெயரில் 2014 இல் மக்கள்களரி சிங்கள மொழியில் தயாரித்தது.

**C. மிருட்ஷகடிகம்**

சமஸ்கிருத நாடகப் படைப்பாளர் சுதரகவின் "மிருட்ஷகடிகம்" நாடகம் தமிழிலும், சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டது. கிழக்குப் பல்கலைக்கழக விபுலாநந்த அழகியற் கற்கைகள் நிறுவனத்துடன் இணைந்து மக்கள் களரி தமிழில் தயாரித்தது. மிருட்ஷகடிகம், சாகுந்தலம் போன்று மேற்கத்தைய மேடைகளில் பிரபலமான இந்திய நாடகமாகும். இருபதாம் நூற்றாண்டின் முன்னரைக் காலப் பகுதியிலிருந்தே அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் பல்வேறு நடிப்பு நிறுவனங்களால் தயாரிக்கப்பட்டது.



'மிருச்சகடிகம்' மேடை [illegible] தமிழ்த் தயாரிப்பு அரங்கேற்றப்படுகின்றது

**2.தொலைக்காட்சி நாடகங்கள்**

1980 பதுகளில் தம்ம ஜாகொட ரூபவாகினி கூட்டுஸ்தாபனத்தின் நாடகப் பிரிவின் தலைவராகக் கடமையேற்றார். அங்கும் தம்ம ஜாகொடவின் தலையீட்டினால் பராக்கிரம நிரியல்ல லாஹிரு தஹசக் (1984), சாசர சயூரன் (1984), கடஇம (1985), யசோராவய (1985), சண்டகிரி ப்வா (1993), சுடோ சுது (1999), மிகிமடலா கினிவடி (2000) போன்ற தொலைக்காட்சித் தயாரிப்புக்களுடன் ஈடுபட்டார்.

**3.சினிமா**

த வெஸ்ட் அன்ட் லாஸ்ட் (குறும்படம் - 1980), சிறி மெதுரா(1989), அயோமா(1995), சிஹிநாயகி தீப நெகி (2025) ஆகிய திரைப்படங்களையும் தயாரித்துள்ளார்

**மக்கள் களரி அரங்க வடிவமைப்பு**

மக்கள் களரி அரங்கானது பரந்த மைதானத்தில் அமைக்கப்படும். அது 85 அடி நீளமான உத்தரம். அதன் இரு பக்கமும் விரிந்த 50 அடி அகலம் கொண்ட கொட்டகையாகும். முன்பக்கமும் பின்பக்கமும் உத்தரத்திற்கு ஓரளவு கீழே சுமார் 30 அடி தூரத்திற்கு பரந்துள்ள இன்னொரு வட்டமான கொட்டகைக்கு சம்பந்தப்படுத்தப் பட்டுள்ளது. ஒரு பகுதியில் ஓய்வறைகள் இரண்டு அமைக்கப்பட்டுள்ளது. அதுவும் 16×6 அளவான பகுதியாகும். ஒளி மற்றும் ஒலி நிர்வாகச் செயற்பாடுகளுக்கு மறு பக்கத்தில் வேறு இரு அறைகள் ஒதுக்கப் பட்டுள்ளன. ஓய்வு அறைகளில் எழுத்து வேலைகளுக்கு அனுகூலமான ஒளியமைப்பு உள்ளது. நடிப்புக்கான மேடை 12×8 அளவினதாகும். நான்கு பக்கமும் பார்வையாளர்கள் இருக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. நடிப்புக் களத்துள் பிரவேசிப்பதற்கும் வெளியேறுவதற்கும் நான்கு வாயில்கள் உண்டு. நடமாடும் மேடைக்கு ஒதுக்கப்பட்ட இரண்டு கழிவறைகள் உண்டு. அனைத்து நடவடிக்கைகளுக்கும் 60 AMP மின்சாரம் பயன்படுத்தப் படுகிறது. அத்துடன் மின்தாங்கி இயந்திரத்தையும் கைவசம் கொண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழைக்கு முகங்கொடுக்கக் கூடிய வடிகாலமைப்பை மைதானத்தில் அமைப்பார்கள். நாடக விழாக்கள் இல்லாத போது அரங்கப் பொருட்களைக் கண்டெயினரில் அடுக்கி வைப்பார்கள்.

**ஆற்றுகை முறைமை**

மக்கள் களரி நடிப்புக்களத்தில் இன்னொரு தனித்துவம் வட்டமேடையைப் போன்று நான்கு பக்கமும் நடித்துக் காட்டுவது. அப்போது எல்லா இடங்களிலுமிருக்கும் பார்வையாளர்களுடன் தொடர்புகள் உருவாகும். மேலும் நடிப்புக் களத்தினுள் இன்னொரு தனித்துவமானது பார்வையாளர்கள் பார்வையாளர்களுடன் ஏற்படும் தொடர்பு. அதாவது இருட்டாக்கப் படாத ஒளியுடனான அரங்காகும். பார்வையாளர் இடங்கள் குஷன் நாற்காலிகளோ வாங்குகளோ அல்ல. இரும்புக் குழாய் மீது போடப்பட்ட பலகை மாத்திரமே போடப்பட்டிருக்கும்.

**மக்கள் களரி போட்டிகளில் பங்கு கொண்டு பெற்ற விருதுகள்**

ஆசிய பசுபிக் பிராந்திய அமைப்பின் கீழ் 10 நாடுகளான இந்தியா சீனா, ஜப்பான், இந்தோனேசியா, இலங்கை, பிலிப்பைன்ஸ், நேபால், கொரியா, வியட்நாம் ஆகிய நாடுகள் இன்றுவரை இயங்கி வருகின்றன. இவ்வமைப்பில் வருடா வருடம் மக்கள் களரி பங்கு கொண்டு பல விருதுகளை பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது. உதாரணமாக சில நாடகங்களை நோக்குவோம்.

1. செக்குவா செக்கு – 1976 இல் சிங்களப்பதிப்பு சிறந்தநாடக எழுத்துரு உட்பட 7 மாநில விருதுகள் கிடைத்தது. 2015 இல் கொழும்பிலும் இந்தியாவில் மேடையேற்றப்பட்டது, 2017இல் மைசூரில் நடந்த சர்வேதேச நாடக விழாவில் மேடையேற்றப்பட்டது.
2. சரண்தாஸ் – 2006 இல் சிறந்த நாடகம் மற்றும் நெறியாள்கைக்கான விருது உட்பட 9 மாநில விருதுகள் கிடைத்தது. 2008 இல் நியூடெல்கியில் மேடை யேற்றப்பட்டது.
3. மெட்டிகரத்தையா / மிருச்சகடிகம் – 2010 இல் 5 மாநில விருதுகள் கிடைத்தது.
4. வெண்கட்டி வட்டம் / ஹுணுவட்டையா 2014 இல் சிறந்த நாடகம் சிறந்த நெறியாள்கை உட்பட 5 மாநில விருதுகள் கிடைத்தது. 2014 இல் கொழும்பு சர்வதேச நாடக விழாவிலும், கேரளாவிலும் மேடை யேற்றப்பட்டது.
5. பயணிகள்– 2011 இல் சிறந்த நாடகம், சிறந்த நெறியாள்கை உட்பட 7 ,ளைஞர் விருதுகளையும் பெற்றுக் கொண்டது. 2012 இல் கொழும்பு சர்வதேச நாடக விழாவிலும், நியூடெல்கியிலும் மேடை யேற்றப்பட்டது. 2011 இல் கிறிஸ்தானிலும், 2015 இல் கொல்கத்தாவிலும், 2016 இல் அசாமிலும் மேடை யேற்றப்பட்டது.
6. பொறிசதையா– 2012 இல் சிறந்த நாடகம், சிறந்த நெறியாள்கை உட்பட 5 இளைஞர் விருதுகளைப் பெற்றுக் கொண்டது. 2015 இல் கொல்கத்தா சர்வதேச நாடக விழா மேடையேற்றப்பட்டது.
7. பறையன் – 2015 இல் சிறந்த தயாரிப்பு 2 ஆம் ,டம் உட்பட 5 மாநில விருது 5 இளைஞர் விருதுகளைப் பெற்றுக் கொண்டது.
8. இரும்பிய பொருத்திய இதயம் – 2015 இல் சிறந்த தயாரிப்பு 1ஆம் இடம் உட்பட 7 விருதுகளைப் பெற்றுக் கொண்டது.
9. ஆண்டுற சக எலிய / இருட்டும் வெளிச்சமும் – 2011 இல் 2 மாநில விருதுகளைப் பெற்றுக் கொண்டது.
10. வகுப்பு 2016இல் 4 மாநில விருதுகளைப் பெற்றுக் கொண்டது.
11. மாயக்கல்வி 2015 இல் 7 மாநில விருதுகளைப் பெற்றுக் கொண்ட சிறுவர் நாடகம்.
12. எலிப்பொறியில் பூனை 2014 ,ல் 9 மாநில விருதுகளைப் பெற்றுக் கொண்ட சிறுவர் நாடகம்.

---

## தாயிறைஞ்சும் எலும்புகள்

பெற்ற மகவுக்கூட்டிய மார்பு
துடித்துக் கொதிக்கத் தகிக்கிறேன்.
கருவில் காலுதைத்த சிற்றுருத் தாண்டி
அரும்பிப் பூத்தவென் அருஞ்சாயலனை
பறிகொடுத்தலையும் வெடித்த பாதங்களின் வலி
தேங்கித் தேம்பிக் கிடக்கிறது.
இருபத்து ஒன்பது வருடங்கள் தாண்டிய கண்ணீர்
கொப்பளங்கள் பொங்கி காய்த்திருக்கிறது.
கடவுள்கள் சொல்லாதவென் பிள்ளையின் கதை
எந்தப் புதைகுழிக்குள் உறங்குகிறது?
ஆந்தைகளலறிய இரவுகளின் சாட்சியை
யாரெனக்குச் சொல்லித் தீர்ப்பர்?
குயில்கள் பாடமறுத்த பச்சைப் பகலில்
இருண்டவென் உலகம் எந்த நிலத்தில்
எலும்புக்கூடாகக் கிடக்கிறது?
மீளும் மண்டையோடுகளில் எதுவென்
குஞ்சினுடையது?
நெத்தித் தழும்பும், தெத்திப் பல்லும்
கழுத்து மச்சமும், கடைசியாய் போட்டிருந்த
கட்டைக்கை பெட்டி பெட்டி சேர்ட்டோடும்
கண்ணுக்குள் நிற்கிறான் என் மகராசன்.
எங்கே குழிகளே? எங்கே?
எலும்பாயாயினும் தந்தருள்க என் பிள்ளையை.
ஒருமுறை தொட்டுத் தடவிப் பார்த்துவிட்டு
கண் மூடட்டும் என் நடைப்பிணம்.

- தீபிகா
27.06.2025



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மா. சிவசோதி

# தவிப்பு



என்ன உது... காலையில இருந்து உந்த அணிலயே பார்த்துக் கொண்டிருக்கிறது. இஞ்சரப்பா... இஞ்சரப்பா... உங்களத்தான். இதென்ன ஆக்கின காது கீது செவிடாப் போச்சுப் போல.....

அது வரை அணிலின் செய்கையில மெய் மறந்து போயிருந்த நான் மனைவியின் சஞ்தடி கேட்டு நினைவுக்கு வருகின்றேன்.

இஞ்ச கொஞ்சம் பொறும்... என்ன அலுவல் உனக்கு இப்ப... என்று கொஞ்சம் கோபத்துடன் கூறிவிட்டு மெல்ல மறுபடியும் அணிலைப் பார்க்கிறேன்.

என் மகள் நேற்றுத்தான் ... என்னிடம் "அப்பா உந்த அணில் எங்கட விறாந்த வளையுக்கை சுத்துது... கூடு கட்டப் போது போல கிடக்கு"

ம்...ம் பார்ப்பம் பிள்ளை. என்ன செய்யிறா ரெண்டு என்று சொல்லிக் கொண்டு கதிரையை போட்டுக் கொண்டு அதையே பார்த்துக் கொண்டிருக்றோம். ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு தும்புகளையும் எடுத்து வந்து வளையில் வைத்துக் கொண்டிருந்தது.

அப்பருக்கும் மேளுக்கும் வாறன்... உது உதுக்க கூடு கட்டி. உள்ள தும்புகளையெல்லாம் சேர்த்து கொட்டப் போது அத அடிச்சுக் கிடிச்சுக் கலைக்காம... இதென்ன...

உனக்கெங்க... உதெல்லாம் விளங்கப் போது அது எவ்வளவு கரைச்சல்பட்டு கொண்டு. வந்து தன்ர வீட்டக் கட்டிது. நீ என்னட வெண்டால் இந்த மனுச ஜென்மங்கள் இப்பிடித்தான் தங்கட சுவாத்தியத் துக்கும்... பவுசுக்குமா உள்ளதுகள எல்லாம் அழிச்சு தொலைக்குதுகள். அது போலத் தான் நீயும்.

என்று சொன்ன போது மனுஷியின்ர முகம் சற்று மாறித்தான் போனது. என்மகள் தன்னை மறந்து அதன் செய்கைகளை விழுங்கிக் கொண்டிருந்தாள்.

அந்த நாளுக்குப் பிறகு சில நாட்கள் நான் அந்த அணிலின் வீடு கட்டும் முயற்சியை மறந்து போயிருந்தேன். காலையில் மனைவி வீட்டை சுத்தம் செய்யும் போது ஆங்காங்கு சில தும்புகளும் தென்னம் பன்னாடை, கரும் நிலத்தில் சிதறுண்டு கிடக்கும்.

"இந்த இழவு விழுந்த அணிலால.... ஒண்டும் செய்யேலாதப்பா ஒரே கஞ்சலப் போடுது இருக்கட்டும் ஒரு நாளைக்கு உத தட்டி எடுத்துக் கொண்டு போய் அடுப்புக்க வைச்சுவிடுறன்" என்று முணு முணுத்துக் கொண்டிருந்தாள்.

அவள் சங்கற்பம் அன்றோடு முடிந்து விட்டது அதற்குப் பின் அவள் அதன் பக்கம் திருப்பிப் பார்ப்பதில்லை சில வேளை பார்த்தாலும் என் மகள் அவளை தடுப்பது போல விலத்தி விடுவாள்.

"தம்பி... தம்பி..." என்று வீட்டு வாசலில் நின்றபடி என் அயல் வீட்டு கமலம் அக்கா அழைத்தார். நான் எழுந்து சென்று கதவைத் திறந்தும் அரக்கப் பரக்க "தம்பி இதில ஏதோ காணாமல் போனவைய பற்றி எழுதியிருக்காம் என்ணெண்டு ஒருக்கா பாருங்கோ..." என்று அன்றைய செய்தித் தாளை நீட்டினாள்.

அவள் முகம் வியர்வையினால் தோய்ந்திருந்தது சீலைத் தலைப்பை எடுத்துத் துடைத்துக் கொண்டாள். நான் பத்திரிகையை வாங்கி மேய்தேன். பத்திரிகையின் கீழ்ப்பகுதியில் " காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விபரம்" பதிவுகள் மேற்கொள்ளவும் என்று கட்டமிட்டு அந்தச் செய்தி இருந்தது. நான் வாசித்து முடித்து விட்டு

"இஞ்சரன... காணாமல் ஆக்கப்பட்டவர் களின்ர பெயர் விபரம் பதியச் சொல்லி இருக்கு உங்கட மகனின்ர பேரயும் பதியுங்கோ ஜனாதிபதி விரைவில தகவல் தருவதா கூறினாராம்" என்ற போது ஒருவாறு முகம் சலித்துக் கொண்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எத்தின தரம் பதிஞ்சாஞ்சாச்சு. இவங்கள் எல்லாம் கள்ளர் ஆளயால் மாத்தி சும்மா கதைச்சிக் கொண்டு இருக்கிறானுகள்" என்று கண்கள் பனிக்க கூறினாள்.

"ஓமன என்ன செய்யிறது ஒருக்கா பதிந்சுவிடன்" என்று கூறிவிட்டு நான் மனதளவில் ஆறுதலடைகிறேன்.

"சரி மேன. எங்கயாம் பதியுறது. அதப்பத்தி ஏதேனும் போட்டிருக்கோ" என்று மறுபடியும் படபடத்தாள்

"வவுனியாவில கொண்டந்து பதிய வேணுமாம்" நீங்கள் ஒருக்க பதியுங்கோ"

என்று சாவதானமாக நான் கூறி முடிக்க, எடே தம்பி இவள் ஜானகி கூப்பிடுறாள் போல நான் போயிட்டு பிறகு வாறன். என்று சொல்லிக் கொண்டே நடக்கத் தொடங்கினாள்

சுதந்திரன் என்னிலும் இளையவனில்லை. இரண்டு வயதுகள் மூத்தவன் ஆனாலும் நானும் அவனும் ஒன்றாகப் படித்தோம்... என்னிலும் அவன் கெட்டித் தனம் மிகுந்தவன். அவனைப் பார்த்தே நாங்களும் அநேக நாங்கள் கணிதசேரிடம் அடிவாங்காமல் தப்பியிருக் கிறோம்.

"உவன் வலு குழப்படிக்காரன். விட்டால் படிப் பெல்லாம் குழப்பிப் போடுவான். டே ஒழுங்காப்படி... வியாழனுக்கு அர்ச்சினை செய், வியாழனில் மச்சம் சாப் பிடாதே" என்று ஆழ்வார் சாத்திரி கையப் பார்த்துவிட்டு கூறியது இப்போதும் எனக்குள் ஊர்ந்து கொண்டிருந்தது.

சுதந்திரன் எப்போதும் எண்ணை வைத்து வாரி தலை இழுத்திருப்பான் வகுப்பில் எப்போதும் ஆசிரியர்கள் தனியான விருப்பம் அவன் மீது உண்டு. எப்போதும் முதல் மூன்று நிலைகளுக்குள வந்து விடுவான். நல்ல கெட்டிக்காரன். அதனால் தானோ என்னவோ. பெட்டைகள் அவனுடன் அடிக்கடி எதை எதையோ கேட்டு சிரித்துக் கதைப்பார்கள். எங்களில் சிலர் பின் வாங்கில் இருப்பவர்கள் கொஞ்சம் மக்குத்தான். இராத்திரியெல்லாம் படம் பார்த்து விட்டு அதை வகுப்பில் அளந்து கொட்டுவதில் முண்டி யடித்துக் கொண்டு நிற்போம்.

"டேய்... டேய் அங்க பாருடா... என்று எங்கள் நண்பர்கள் அவன் பெட்டைகளுடன் கதைப்பதை காட்டுவார்கள். எங்களுக்குள் ஒரு ஏக்கம். எங்களுடன் கதைக்கமாட்டார்களா என்று நாங்கள் ஏதாவது கொப்பி கேட்டாலும் இல்லை... குடுத்துவிட்டேன்" என்று சாக்குப் போக்கு சொல்லுவார்கள் அவர்கள் தாறதற்கும் காரணம் உண்டு. எங்களின் அசண்டையினம் தான் என்று எமக்குப் புரியாமலில்லை.

சுதந்திரன் படிப்பிலும் சரி, விளையாட்டிலும் சரி மிகக் கெட்டிக்காரனாகத்தான் இருந்தான். ஓ.எல் பரீட்சையில் நான் பின் தங்கிய போது அவன் சித்தியடைந்து உயர்தரத்திற்கு சென்றதும் எமக்குள் சற்று இடைவெளி அதிகரித்தது. இரண்டு வருடங்கள் கடந்து நான் உயர்தரம் கற்கத் தொடங்கும் போது அவன் உயர்தர பரீட்சை எழுத தயாராகிக் கொண்டிருந்தான்.

பரீட்சை எழுதி முடித்ததும் ஒரு நாள் என்னிடம் வந்தவன்.

"மச்சான் நான் அப்பாட ஊரில இருக்கிற வீட்ட கொஞ்ச காலம் தங்கி இருந்துவிட்டு வருவதாக கூறி சென்றவன். கல்வியற் கல்லூரி முடித்து அடுத்த வருடம் ஊருக்குத் திரும்பி நான். முதல் வேலையாக என்னை சந்திக்க வந்தான். நீண்ட நாட்களுக்குப் பிறகு அவனைக் கண்டதில் ஆனந்தம் நீண்ட நேரம் பேசினோம்.

"டேய் மச்சான் உனக்கு இப்ப எத்தினயாவது வருசம் எப்ப முடியுது."

"என்று கேட்ட போது ம்...ம் இன்னும் இரண்டு வருசம் கிடக்கு, எனக்கும் ஒரு ரீச்சர வர வேணும் எண்டு தான் விருப்பம் பார்ப்பமடா"

ம்.... நீங்கள் எல்லாம் எழுதி வரலாம் தானே"

"ஓமடா நானும் அத தான் எதிர்பார்க்கிறன்"

"சரி மச்சான் வேற என்னடா... பிறகு சந்திப்பம்"

நான் நாளைக்கு வீட்ட போயிடுவன் பிறகு பார்ப்பம்"

என்று விட்டு புறப்பிட்டுப் போனான் மறுபடி யும் அவன் திருமணத்தில் அவனை சந்தித்தேன் அப்போது அவன் பிரபல பாடசாலையில் ஆசாரியாக சேர்ந்திருந்தான்.

"இனி என்ன மச்சான் உன்ன புடிக்கேலா" என்று நான் சொன்ன போது. ஒரு புன்னகையுடன் முகத்தை திருப்பி தன் மனைவியின் உறவினர் ஏதோ கேட்க. அதற்குப் பதில் கூறத்தொடங்கினான் சற்று நேரம் பொறுத்து விட்டு.

"சரி மச்சான் நான் போயிட்டு பிறகு வாறன்" என்று சொல்லிக் கொண்டே கிளம்பினேன். அன்று எனக்கு தெரியாமல் போனது அதுதான் அவனை நான் சந்திக்கும் கடைசி நாளன்று.

சில நாட்கள் கழிந்த பின் நீண்ட நாட்கள் கதைக்கவில்லை என்ற ஆவலில் அவனுக்கு அழைப்பை எடுத்த போது. தொலைபேசி இயங்காமல் இருந்தது. மீண்டும் சில நாட்கள் கழித்து அழைப்பை எடுத்த போது அப்போதும் இந்த நம்பர் பாவனையில் இல்லை. என்றிருந்தது. சற்றே மனக்கலக்கத்துடன். அவனது வீட்டு நம்பரை டயரிக்குள் தேடுதல் செய்தேன். அது அவனது வீட்டு இலக்கம் என்று கூறியிருந்தான். மகிழ்ச்சி யோடு ஒரு முறை அழைப்பை எடுத்துபார்த்தேன். நீண்ட நேரம் றிங் பண்ணி ஓய்ந்தது.

"இஞ்சரப்பா உதில நிண்டு என்ன செய்யுறியள், கடையில போய் தூள் நெரிக்க குடுத்தனெல்லோ ஒருக்க எடுத்துக் கொண்டாங்கோ" என்று படபடத்தாள் மனைவி.

எனக்குள் சுதந்திரனைப் பற்றிய நினைவுகள் உட்புகுந்து ஏதோ உணர்வுகள் தெறித்துக் கொண்டி ருந்தது. "அவனுக்கு ஏதேனும்" அட ச்சீ அப்படி ஒன்றும் நடக்க வாய்ப்பில்லை அவன் யார் வம்பு தும்புக்கும் போறதில்லை தானே" என்று சைக்கிள் காப்பெற் வீதியில் ஊர்கிறது.

அன்றைக்குப் பிறகு இரண்டு மூன்று நாட்கள் நான் மறந்துவிட்டேன். மறதி மட்டும் மனிதனுக்கு இல்லை என்றால் சந்தோசம் எப்போதோ பிறந்துவிடும். சுகமோ, துக்கமோ எதிலும் நிரந்தரமாக இருந்துவிடப் போவதில்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னப்பா உங்கட சினேகிதனுக்கு அண்டைக்கு அடிச்சனீங்கள் கதைச்சவரா என்னவாம்" என்று கேட்டபோதுதான் எனக்கும் சட்டென்று நினைவில் வந்தது. மறுபடி நம்பரை எடுத்து அழைப்பை ஏற்படுத்துகிறேன்.

நீண்ட நேரத்தின் பின் "ஹலோ... நீங்கள் யார் கதைக்கிறது எதிரில் சுதந்திரனின் தாய் கமலம் அக்கா.

அது நான்...

"நானன்டா யார் நீங்கள். உங்களுக்கு ஆர் வேணும்" என்று கேட்டு" ஓமக்கா நான் சுதந்திர சினேகிதன் சிவன்"

"ஐயோ... தம்பி... எடே..." என்று கத்தினார். "என்னக்கா... சொல்லுங்கோ நான் கதைக்கிறது கேக்குதோ...? என்று கேட்கிறேன்.

கமலம் அக்கா வீரீட்டு அழுது கொண்டிருந்தாள் மருமகள் நின்றிருக்க வேண்டும்.

"மாமி... மாமி என்று கூப்பிடுவது கேட்கிறது" ஹலோ ... அண்ணா நீங்கள் பிறகு எடுங்கோ... இவர் காணாமல் போனதில இருந்து இப்படித்தான். மாமி ஒரே அழுகையும் புலம்பலும் தான்" என்று கூறிவிட்டு போனை வைத்துவிட்டான்.

"என் கையில் இருந்த ரிசீவர் நழுவி கீழே விழுகிறது. என் மனைவி "என்னப்பா என்ன.... என்ன நடந்தது." என்று கேட்கிறாள். நான் அப்படியே கதிரையில் விழுகிறேன்.

இந்தச் சம்பவத்தோடு அடிக்கடி அவன் வீட்டுக்கு யார் யாரோ வந்து எதை எதையோ விசாரித் தார்கள். "உந்த ஆக்கினயாள தான் என்ர மருமேளயும் பேரப்பிள்ளையையும் கொண்டு வந்திட்டன். என்று கமலமக்கா அன்றொரு நாள் சொன்னாள். என் வீட்டுக்கு அருகில் அவர்கள் குடியேறி பல ஆண்டுகள் முடிந்த பின்னும் அவள் தன் மகனைத் தேடி பதைபதைத்துக் கொண்டுதான் திரிகிறாள்.

இன்னும் நானும் என் மகளும் அணிலின் விளையாட்டில் மெய்மறந்த இருந்த போது கமலம் அக்கா வந்து செய்தியப் படித்து விட்டுப் போனாள்.

அன்று, மாலை சற்று மயங்கிச் கிடந்தது. பகலை இருள் விழுங்கத் தொடங்கியிருறந்தது. நான் மேசையில் இருந்த பத்திரிகையை புரட்டிக் கொண்டு இருக்கிறேன்.

"அப்பா... அப்பா ஓடி வாங்கோ" என்று மகள் என்னை அவசரப்படுத்தினான், விசயத்தின் தீவிரம் அறிந்து நானும் எழுந்து கோலுக்குள் வருகிறேன். தாய் அணில் அங்கும் இங்கும் பதறியடித்துக் கொண்டு கீச்சிட்டுக் கொண்டிருந்தது.

"அப்பா அதின்ர குஞ்சக் காணம் அப்பா" அது தான் இப்பிடித் திரியுது," என்றார்

நானும் கூட்டை சுற்றிப் பார்க்கிறேன் அணிலின் குஞ்சு காணாமல் தான் போயிருந்தது. அதன் தவிப்பும் வலியும் வீடெல்லாம் எதிரொலிக்கிறது.

இரவின் நிசப்தத்திலும் ஒரு தாயின் அழுகை என் மனதில் ஊர்ந்து கொண்டிருந்தது.

### ஈழத்துத் தமிழ் நூல் வெளியீடுகளை ஊக்குவித்தல்

கொழும்புத் தமிழ்ச் சங்கமானது, ஈழத்துத் தமிழ் வெளியீட்டினை ஊக்குவிக்கும் முகமாக, வெளியிடப்படும் நூலின் பிரதிகள் 02 (இரண்டினை) சம்மந்தப்பட்டோரிடம் இருந்து நேரடியாகப் பெற்றுக் கொள்ள முன்வந்துள்ளது. தங்களால் அனுப்பிவைக்கப்படும் வெளியீடுகள், சங்க நூலகத்தில் பேணப்படும் என்பதையும், வருட இறுதியில் நடாத்தப்படும் நூல் கணகாட்சியில் காட்சிப்படுத்தப்படும் என்பதனையும் அறியத்தருகிறது. இதற்கமைவாக 01.01.2025ம் திகதி தொடக்கம் தமிழில் ஈழத்தே வெளியிடப்படும் நூல் பிரதிகள் இரண்டினை

இணைப்பாளர்,
நூல் ஊக்குவிப்புத் திட்டம் - 2025
கொழும்புத் தமிழ்ச் சங்கம்,
இல. 07. சங்கம் ஒழுங்கை,
கொழும்பு 06.

எனும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைக்குமிடத்து அத்தகைய நூல்கள் பணம் கொடுத்துப் பெற்றுக் கொள்ளப்படும். அல்லது நூலின் பெறுமதி வங்கிக் கணக்குக்கு பண மாற்று செய்யப்படும்.

கலாநிதி ஜெ.தற்பரன்,
பொதுச்செயலாளர்
கொழும்புத் தமிழ்ச் சங்கம்

## கூகிளைக் கூப்பிடண்ணா

அம்மா அகப்பைக் காம்புடன் அருகிலிருந்தாள்.
"மொகலாயர்களுக்கு ராசபுத்திரர்கள் சம்பந்திகள்"
சரித்திர பாடத்தை உரத்து வாசித்தான் கோபி.
"சம்பந்தி என்றால் என்ன அண்ணா?"
கேள்வி கேட்டான் குட்டித்தம்பி பாபு.
"சம்பந்தி என்றால் எதிரி"
அப்பாப்பாட்டி டக்கென்று சொன்னாள்.
"சம்பந்தி என்றால் சண்டைக்காறர்"
அம்மாப்பாட்டி அடுத்துச் சொன்னாள்.
சம்பந்தி என்றவுடன் உடம்பு நடுங்குது"
அம்மா புலம்பினாள்.
"புதுசாக வரும் சொந்தம் சம்பந்தி"
அப்பா அமைதியாகச் சொன்னார்.
"கூடப் பிறக்காத சகோதரங்கள்"
அம்மாத் தாத்தா உரத்துச் சொன்னார்.
"அப்பிடிச் சொல்லுங்கோ சம்பந்தி"
அப்பாத்தாத்தா ஆமோதித்தார்.
இதில எது சரி? எது பிழை?
குழம்பிப் போனான் கோபி.
போனைக் கொண்டு ஓடிவந்தாள்
குட்டித்தங்கை நிலா.
"அண்ணா! நீ கூகிளைக் கூப்பிடு"
என்றவள் சொல்லி அகப்பைக் காம்புடன்
ஓடி மறைந்தாள்.

கலாநிதி ஜீவகுமாரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன ரஷ்ய இலக்கிய சிருஷ்டி: பெருங்கவி அலெக்சாண்டர் புஷ்கின் !

- ஐங்கரன் விக்கினேஸ்வரா -

(ரஷ்ய இலக்கிய சிருஷ்டி அலெக்சாண்டர் புஷ்கின் பிறந்த ஜூன் 06, 1799 இந்நாளையே "ரஷ்ய மொழி தினம்" என ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 06 ஆம் திகதி கிழக்கு ஐரோப்பாவிலும் ரஷ்யாவிலும் கொண்டாடப்படுகிறது)

ஆங்கில இலக்கிய மேதை ஷேக்ஸ்பியருக்கு ஒப்பானவராக கருதப்படுபவரே ரஷ்ய இலக்கிய சிருஷ்டி அலெக்சாண்டர் புஷ்கின்.

வையகம் புகழ் ரஷ்ய இலக்கிய சிருஷ்டி கர்த்தா அலெக்சாண்டர் புஷ்கின் பிறந்த ஜூன் 06, 1799 இந்நாளையே "ரஷ்ய மொழி தினம்" என ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 06 ஆம் திகதி கிழக்கு ஐரோப்பாவிலும், ரஷ்யாவிலும் கொண்டாடப்படுகிறது.

ரஷ்யக் கவிஞரும், காதல் கவிதைகள் யுகத்தின் சிறந்த படைப்பாளியுமான அலெக்ஸாண்டர் செர்ஜியேவிச் புஷ்கின் (Alexander Sergeyevich Pushkin) ரஷ்ய மொழியில் : Алекса... ндр Серге...евич Пу... шкинபிறந்த தினம் ஜீன் 6 ஆகும். ரஷ்யத் தலைநகர் மாஸ்கோவில் 1799 இல் பிறந்தவர். இளம் வயதிலேயே தனது நகர நூலகத்தில் பல புத்தகங்களைப் படித்தார். இந்த சூழல் இலக்கிய தாகத்தை ஊற்றெடுக்க வைத்தது.

பின்னர் செயின்ட் பீட்டர்ஸ்பர்கில் உள்ள பள்ளியில் பயின்றார். படிக்கும் போதே 15 வயதில் தனது முதல் கவிதையை எழுதி வெளியிட்டார்.

**ஜூன் 06 - ரஷ்ய மொழி தினம் :**

விரைவிலேயே இலக்கிய உலகில் அங்கீகாரம் பெற்றார். ரஷ்ய முன்னணி கவிஞரும், இலக்கிய சிருஷ்டியுமான அலெக்சாண்டர் புஷ்கின் பிறந்த ஜூன் ஆறாம் நாளை ரஷ்ய மொழி தினமாக ஒவ்வொரு வருடமும் அனுசரிக்கப்படுகிறது.

வையகம் புகழ் ரஷ்ய இலக்கிய சிருஷ்டி கர்த்தா அலெக்சாண்டர் புஷ்கின் ஜூன் 06,1979இல் பிறந்த இந்நாளையே "ரஷ்ய மொழி தினம்" என ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 06 ஆம் திகதி கிழக்கு ஐரோப்பாவிலும், ரஷ்யாவிலும் கொண்டாடப்படுகிறது.

அலெக்சாண்டர் புஷ்கின் தனது கவிதைகளிலும் நாடகங்களிலும் உரைநடையைக் கையாள்வதில் முன்னோடியாகவிருந்தார். அத்துடன் நவீன ரஷ்ய இலக்கியத்தில் ஒரு தனித்துவமான கதைசொல்லும் பாங்கையும் உருவாக்கியிருந்தார். இவை முன்னெப்போதுமில்லாத அளவில் பிற்கால ரஷ்ய எழுத்தாளர்களிடம் மிகுந்த தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தன.



**சர்வதேச இலக்கிய முன்னோடி :**

சர்வதேச இலக்கிய வானில் இவரது செல்வாக்கு என்றும் மேலோங்கி பறந்தது. கவிதை, நாடகங்கள், உரைநடைகளைக் கையாள்வதில் முன்னோடியாகவும் கதைசொல்லும் பாணியில் புஷ்கின் தனித்துவம் வாய்ந்தவராகவும் திகழ்ந்தார்.

அத்துடன் ரஷ்ய இசை அமைப்பாளர்களுக்கு இவரது கவிதைகள் உந்து சக்தியாக அமைந்தன. இவரது தி ஸ்டோன் கெஸ்ட், மொஷார்ட் அண்ட் ஸலியெரி ஆகிய நாடகங்கள் புகழ்பெற்றவை.

இவரது எழுத்தில் நிகோலாய் கராம்சின், பைரன் பிரபு ஆகியோரது தாக்கங்கள் காணப்பட்டன. கொண்டோர் ஃபியோடார் டாஸ்டோவ்ஸ்கி, விளாடிமிர் நபோகோவ், ஹென்றி ஜேம்ஸ் உள்ளிட்டோர் இவரது தாக்கத்தைப் பிரதிபலித்த பிரபல படைப்பாளிகள்.

புஷ்கின் எழுதிய நாவலான "யூஜின் ஆனிஜின்", ரஷ்ய வாழ்க்கையின் கலைக்களஞ்சியம் எனப்படுகிறது.

நெஞ்சுரம் கொண்ட புஷ்கின் "போரிஸ் குட்னவ்" என்ற தனது மிகவும் பிரபலமான நாடகத்தை எழுதினார். 1820ல் ரஸ்லன் அண்ட் லுட்மிலா என்ற தனது முதல் நீண்ட கவிதையை வெளியிட்டார். குறுகிய காலமே வாழ்ந்த இவர், உரைநடை கவிதை, கவிதை, நாவல், சிறுகதை, நாடகம், விமர்சனக் கட்டுரைகள், கடிதங்கள் என இலக்கியத்தின் அனைத்து களங்களிலும் முத்திரை பதித்தார்.

புஷ்கின் சமூக சீர்திருத்தங்களில் இவரது கவனம் என்றும் இருந்தது. தீவிர இலக்கியவாதிகளுக்கு ஆதரவாக குரல் கொடுத்தார். ஜார்அரசின் கோபத்துக்கு ஆளானதால், தலைநகரைவிட்டு வெளியேறினார். காகசஸ், கிரிமியா ஆகிய இடங்களுக்குச் சென்றார். 1823ல் பல காதல் காவியங்களைப் படைத்தார். இவரது படைப்புகள் பிற்கால ரஷ்ய எழுத்தாளர்களிடம் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தின என்பது உண்மையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"நீல வானத்தின் கீழ்'' கவிதை :**

புஷ்கினின் "நீல வானத்தின் கீழ்" எனும் கவிதை உலகப் பிரசித்தி பெற்றதாகும்.

அது அவரது தாயகத்தில்,
அந்த நீல வானத்தின் கீழ் இருந்தது
அவள், வாடிய ரோஜா ...
கடைசியில் அவர் இறந்தார்,
ஒரு மூச்சு நீங்கள்,
யாரும் தொடாத இளம் பருவ நிழல்
ஆனால் எங்களுக்கிடையில் ஒரு
கோடு இருக்கிறது,
அது ஒரு படுகுழி.
என் உணர்வைத் தூண்ட நான்
வீணாக முயற்சித்தேன்:
மரணம் உதடுகள் இருண்ட
சிடுமூஞ்சித்தனத்துடன்,
நான் அவளை அலட்சியமாக
கலந்துகொண்டேன்.
நான் யாரை ஒரு ஆத்மாவோடு
நேசித்தேன்,
யாருக்கு நான் என் அன்பை
அதிர்ச்சியாய் கொடுத்தேன்,
மிகவும் எல்லையற்ற, அன்பான
சோகத்துடன்,
அமைதியான தியாகத்துடன்,
மயக்கத்துடன்.
காதல் மற்றும் துக்கத்திற்கு என்ன
நடந்தது? ஓ என் ஆத்மாவில்
அப்பாவியாக, ஏழை நிழல்,
இழந்த நாட்களின் மகிழ்ச்சியான
நினைவாக,
எனக்கு கண்ணீர் இல்லை,
அவளுக்கு இசை சொல்லும்
இசை இல்லை.

சர்வதேச இலக்கிய வரலாற்றில் அலெக்சாண்டர் செர்ஜியேவிச் புஷ்கின் நிச்சயமாக மிகவும் பிரபலமான, மிகவும் போற்றப்பட்ட ரஷ்ய கவிஞரும், இலக்கிய சிருஷ்டியும் ஆவார். அத்துடன் அவர் ஒரு நாவலாசிரியர் மற்றும் நாடக ஆசிரியராகவும் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

**நவீன ரஷ்ய இலக்கிய தந்தை**

இதனாலேயே நவீன ரஷ்ய இலக்கியத்தின் தந்தையாக புஷ்கின் கருதப்படுகிறார். புஷ்கின் எந்த சூழலிலும் சுயமரியாதையை விடாமல் உழைக்கும் மக்களுக்காக குரல் கொடுத்தார். இதனால் அன்றைய ரஷ்யா முழுவதும் ஜார் மன்னரின் உளவாளிகள் தீவிரமாக புஷ்கினை கண்காணித்து வந்ததால் படைப்புகளை



வெளியிட முடியாத நிலை இருந்தது.

**காலத்தால் அழியாத காதல் கவிதை :**

புஷ்கினின் "நான் அவளை நேசித்தேன்" எனும் காதல் கவிதை பல யுகம் சென்றாலும், காலத்தால் அழியாத காதல் வர்ணங்களாக என்றும் காட்சியளிக் கின்றன.

நான் அவளை நேசித்தேன்,
அந்த காதல் இருக்கலாம்
அது இன்னும்
என் ஆத்மாவில்
இருக்கிறது,
அது என் மார்பை எரிக்கிறது.
ஆனால் அவளை மேலும்
குழப்பிக் கொள்ளுங்கள்,
நான் விரும்பவில்லை.
என்னுடைய இந்த அன்பு
உங்களுக்கு வேதனையைத் தரக்கூடாது.
நான் அவளை நேசித்தேன்.
நம்பிக்கை இல்லாமல்,
பைத்தியத்துடன்.
குரல் இல்லாத,
பொறாமையால் நுகரப்படும்
நான் அவளை நேசித்தேன்,
வஞ்சம் இல்லாமல்,
மென்மையுடன்,
கடவுள் அதை விரும்புகிறார்
என்று நான் நம்புகிறேன்,
மற்றொன்று,
அன்பு என்னுடையதைப் போன்றது.

தலைசிறந்த கவிஞரும் உலகப்புகழ் நாடகாசிரியருமான கருதப்படும் அலெக்சாண்டர் செர்ஜியேவிச் புஷ்கின் நவீன ரஷ்ய இலக்கியத்தின் பிதா மகனாகவே என்றும் தென்படு கின்றார். அத்துடன் புஷ்கினின் மிகச்சிறந்த படைப்புக்களான இயூஜின் ஒனேகின், காப்டனின் மகள், போரிசு கோதுனோவ், ருசுலானும் லுத்மீலாவும் ஆகிய நூல்கள் வரலாற்றுப் புகழ் வாய்ந்தவை.




புஷ்கினின் படைப்புகள் ஆங்கிலத்தில் மட்டுமன்றி, பல் வேறு மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு பல நாடுகளில் வெளிவந்தன.

நவீன ரஷ்ய இலக்கியத்தின் தந்தை என்று போற்றப்பட்ட புஷ்கின் 38 வயதில் (1837) மறைந்தார். இன்றும் ரஷ்யாவில் செயின்ட் பீட்டர்ஸ் பர்கில் கடைசியாக புஷ்கின் வாழ்ந்த வீடு தற்போது அருங் காட்சியகமாக மாற்றப் பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகம் பாவம்

மலரன்னை



காலை வேளை, நேரம் ஏழு மணியைத் தாண்டி யிந்தது. வேலைக்குப் புறப்பட்ட நிமலன், தனது உந்துருளியை தரிப்பிடத்திலிருந்து முற்றத்துக்கு உருட்டிக் கொண்டு வந்தான், அதனை இயக்க முற் பட்டான், அதனுடைய பற்றரி பலமிழந்து விட்டதால் தானியங்கி மூலம் அது இயங்க மறுத்துவிட்டது. சினம் மேலிட்டவனாய் காலினால் உதைத்து ஒருவாறு உந்துருளி இயங்கத் தொடங்கியதும் புறப்பட்டவன். உணவகம் ஒன்றின் முன்னால் நிறுத்தினான்.

இறங்கி உள்ளே நடந்து போனவன் மளமள வென்று இரண்டு வடைகளையும் சுடச்சுட ஒரு குவளை தேனீரையும் உள்ளே தள்ளிய பின்னர் தான் நிதான நிலைக்கு திரும்ப முடிந்தது. மனதில் மூண்ட கோபமும் சற்று தணிந்து.

அத்ததைய இமாலய கோபத்திற்கு காரணமாய் அமைந்தவள் வேறு யாருமல்ல, சாட்சாத் அவனது மனைவியேதான். அவன் மீது நிதர்சனில் காட்டும் அசட்டையான போக்கு அவனது ஆழ்மனதுள் புகுந்து அவனது தன்மானத்தை தட்டி உசுப்பத் தொடங்கி யிருந்தது இன்று காலை நடந்த சம்பவம் இதுதான்.

இன்று சனிக்கிழமையாதலால் ஆசிரியையான நிதர்சனிக்கு பாடசாலை விடுமுறை நாள்....ஆனால் நிமலனுக்கோ கந்தோருக்கு போகவேண்டும். அரைநேர வேலை செய்தேயாக வேண்டும். காலை ஆறுமணிக்கு விழிப்புற்ற நிமலன், மனைவியை எழுப்பினான்.

"நிது! ஆறு மணியாகீட்டு. எழும்பும் நான் வேலைக்குப் போகவேணுமெல்லே"

கணவனது அழைப்பு குரல் கேட்டு புரண்டு படுத்தவள், மெதுவாக அரற்றினாள்

"எனக்கு பஞ்சியாயிருக்குதுப்பா. எனக்கு இண்டைக்கு லீவுதானே. நீங்கள் தானே வேலைக்குப் போக வேணும். எலக்ரிக் கேத்தலில தண்ணியை சுட வைச்சு ஒரு ரீ போட்டுக் குடிச்சிட்டுப் போய் கடையில ஏதும் சாப்பிட்டு போங்கோ. நான் ஆறுதலாய் எழும்புறன்"

உச்சியில் கொட்டி விட்டாற் போல் கோபம் கொப்பளித்துக் கொண்டு வந்தது, நிமலனுக்கு சீற்றத் தைக் காட்டுவதற்கு இது சமயமல்ல எனக் கருதியவன் குளித்து விட்டு வேலைக்குப் புறப்பட்டு விட்டான் கணவனது நலனில் அக்கரையில்லாத மனைவியை தேர்ந்தெடுத்தவனே நான். மோகம் கொண்டு அலைந்த அந்தநாள் நினைவுகளை நோக்கித் தாவியது.

நிதர்சனியும் அவனும் பல்கலைகழத்தில் வெவ் வேறு பிரிவுகளில் ஒன்றாகப் படித்தவர்கள் அவன் நிதர்சனியை முதன் முதலில் சந்தித்தது வாசிகசாலையில் தான். நிதர்சனி தமிழ்ப்பாடத்தை பிரதானமாக கொண்டு படிக்கிறவள். அத்தோடு வாசிப்பு பிரியையும் கூட. அவள் அடிக்கடி வாசிகசாலைக்கு வந்து தனக்கேற்ற புத்தகங்களை எடுத்து வாசிப்பதை வழக்கமாக கொண்ட வளும் கூட. நிமலனோ அப்படியல்ல. தனக்கு பாடத்தில் ஏற்பட்ட சந்தேகத்தை போக்குவதற்கேற்ற புத்தகத்தை தேடிக் கொள்வதற்காக அன்றுதான் வாசியசாலைப் பக்கம் வந்தவன். வந்தவனது பார்வையில் அகப்பட்டது புத்தகமல்ல. அதற்கு பதிலாக நிதர்சினி தான் அவன் கண்முன் தோன்றியவள்.

பார்த்த மாத்திரத்தே தன்னை அந்தப் பாவை யிடம் பறிகொடுத்து நின்றான், நிமலன். அதற்கு காரணம் பாவையின் கவர்ச்சித் தோற்றமா அல்லது நிமலனது ஊழ் வினைப்பயனா... எதுவென்று சொல்வது. ஆரம்பத்தில் நிதர்சினி அவளைக் கண்டு கொள்ளவில்லை. அவளது மாற்றமும் வட்டமுகம், நீண்ட நாசியும், காந்த கண்களும் நிமலனது மனதில் பதிந்து போய்விட்டது. எப்படி யாவது அவளை அடைந்தே தீர வேண்டும் என அவனது ஆழ் மனம் அடம்பிடித்தது. அவளை தன் வசப்படுத்த அவன் எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியைத் தழுவின.

முயற்சி திருவினையாக்கும் என்பார்கள். அந்த முது மொழிக்கிணங்க ஒருவாறு நிசர்சனியை தன் வசப் படுத்தியே விட்டான். அத்தருணத்தில் நிமலன் அவளுக் காக எதையும் விட்டுக்கொடுக்கும் நிலையில் இருந் தான், அவளுடைய பிடிவாத குணமும் ஆணவப்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கும் அவனுக்கு ஒரு பொருட்டாக தோன்ற வில்லை. அவளது குணநடையே அதுதான் என்பனை அப்பாவியான நிமலனால் புரிந்து கொள்ள முடியாமற் போயிற்று.

காலப்போக்கில் உருள, நிமலனும் நிதர்சனாவும் தங்களது பல்கலைக் கல்வியை நிறைவு செய்து பட்ட தாரிகளாக வெளியேறினர். நிமலனுக்கு மின்சாரசபை யில் பொருத்தமான ஒரு வேலை கிடைத்தது. எனினும் ஒருவாறு நிசர்சனிக்கோ ஆசிரிய பதவி கிடைக்க சில காலம் பிடித்தது. வேலை கிடைத்த பிறகுதான் நிதர்சனி திருமணத்திற்கு இணங்கினாள் அவளுடைய பெற்றோர் களுக்கு பெரும் நிம்மதியை தந்தது. நிதர்சினியின் பிடிவாத குணம் ஆட்டிப்படைத்ததுதான் காரணம்.

ஒருவாறு நிமலன் நிதர்சனி திருமணம் நடந் தேறியது. அவளுக்கு சீதனமாகக் கொடுத்த புதிதாகக் கட்டிய வீட்டில் அவர்கள் இருவரையும் தனிக்குடித் தனம் நடத்துமாறு அமர்த்திவிட்டு பெற்றோர்கள் இரு வரும் மெதுவாக ஒதுங்கிக் கொண்டு விட்டனர். திரு மணம் நடந்து ஆறுமாதம் ஆகவில்லை, அவர் களிடையே தோன்றிய முதல் விரிசல் அதுவாத்தான் இருக்க வேண்டும். நாளுக்கு நாள் நிதர்சனியின் உதாசீனப் போக்கு நிமலனின் மனதை வெகுவாகப் பாதித்து எனினும் நிதர்சனி தனிப்பிள்ளையாக வளர்ந்த வள். அவளது குழந்தைத்தனமான போக்குத் தான் அவளை இப்படியெல்லாம் நடக்க வைக்கிறது என அவன் தனக்குத் தானே சமாதானம் சொல்லி மனதை தேற்றிக்கொண்டான்

காலையில் எழுந்து சமையல் செய்வதென்றா லும் நிமலனும் கூடவே நின்று உதவி செய்தாத்தான் உண்டு. அல்லது பகல் வேளைக்கு பசியாறுவதற்கு பார்சல் சாப்பாடுதான். போகப்போக எல்லாம் சரியாகி விடும் என நிமலன் நினைத்தது தவறாகப்போய்விட்டது. இருவரும் இணைந்து சமைத்தாலும் இடைநடுவில் அவள் விட்டு விடுவாள்.

"பாத்திரங்களை நீங்களே கழுவி வைச்சு விடுங்கோ. எனக்கு நேரம் போயிட்டுது. நான் குளிக்கப் போறன்"

சலிப்பினால் நிமலனும் உள்ளம் நெகிழ்ந்து போகும். அவளைக் கண்டுக்கவோ... தண்டிக்க முடியாத நிலையில் தவித்துப்போய் நிற்பான் அவன். லீவு நாட்க ளில் அவள் தனது துணிமணிகளை துவைப்பதற்காக "வோசிங் மெசினில்" போட்டு விட்டு போய் சாய்ந்திருந்த வாறே கதைப்புத்தகங்களில் மூழ்கிவிடுவாள். இடையில் அவளது குரல் ஓங்கி ஒலிக்கும்.

"வோசிங் மெசினில் உடுப்புக்களை போட்டிருக் கிறன். அது ஓவ்வானதும் துணிகளை எடுத்து உலர விட்டுவிடுங்கோ. என்ன....

அவனும் தன்னுடையதும் சேர்த்துதான் போட்டிருப்பாள் என்ற நம்பிக்கையுடன் அங்கு போய்ப் பார்த்தால்... அங்கு எல்லாமே அவளுடையவை தான் கிடக்கும். ஏன் என்னுடைய உடுப்புக்களையும் போட்டி ருக்கலாமே என அவன் வருத்தத்துடன் வார்த்தைகளை விட்டுவிட்டால் போதும். அவள் பெருங்குரலெடுத்து அவனை கண்டிக்கத் தொடங்கி விடுவாள்.

"உங்களுடைய துணிமணிகளை போட்டு எடுக்க வேண்டியது உங்கட பொறுப்பு இஞ்சை உங் களுக்கு வேறை என்ன வேலை இருக்குது. எந்த நேரமும் ரி.விக்கு முன்னால தானே பொழுது போகுது"

நிமலனுக்கு "சுடக்" கென்று கோபம் ஏறி விட்டது.

"நீர் எந்த நேரமும் கதைப்புத்தகத்தோட இருக்கிறீர். அதைக்கேக்க இஞ்சை ஆளில்லை என்ரை வீட்டில நான் ஆறுதலாய் இருந்து ரி.வி பார்க்கிறதை ஆர் கேக்கிறது?"

"என்ன என்ரை வீடு என்று அழுத்தமாய்ச் சொல்லுறியள். இது உங்கட வீடு யார் சொன்னது? நீங்கள் என்ன உழைச்சுக்கட்டின நீங்களே. இது நான் சீதனமாய்க் கொண்டு வந்த வீடு அதை ஞாபகத்தில வைச்சுக்கொள்ளுங்கோ"

அவளது வார்த்தைகளைக் கேட்டு கொதித்த உள்ளுணர்வுகளைக் கட்டுப்படுத்தமுடியாதவனாய் நிமலன் தவித்துப் போனான்.

உனக்கு இதுவும் வேணும். இன்னமும் வேணும்

மனதின் குமுறல் வார்த்தைகளால் உருவெடுத்து வாய்வரைவந்து அமிழ்ந்து போகும் இப்படியாகக் பல பூசல்கள் அவர்களிடையே தோன்றி மறைவது வழக்க மாகி விட்டது. அவளுக்கு ஏதாவது காரியம் ஆக வேண்டி இருந்தால் மட்டும் வலிய வந்து அவனுடன் வந்து ஒட்டிக் கொள்வாள். அவனும் தன் மன ஆதங்கத்தையெல்லாம் மறந்து அவளை அணைத்துக் கொள்ளுவான். மானிடப் பண்புகளில் இதுவும் ஒரு வகைதானே.

இப்படியாக அவர்களது வாழ்க்கைப் பயணம் பல மேடு பள்ளங்களினூடு போய்க் கொண்டிருந்தது. நிமலனோ சமதரையை நோக்கி முன்னேறுவதற்கு முயன்றாலும் நிதர்சனியோ தன் அகங்காரப் போக்கை கடைப்பிடித்து அதற்கு இடங் கொடுக்கமாட்டாள். அவளுடைய இயற்கையான சுபாவமே அதுதான் ஒரு வேளை பெற்றோர்கள் அவளை சிறுவயதிலேயே கண்டிக்கத் தவறி விட்டார்களோ என்று கூட சில சமயங் களில் நிமலன் எண்ணுவதுண்டு.

நிமனுடைய அம்மாவோ சகோதர்களோ அவர் களைத் தேடி அடிக்கடி வீட்டுக்கு வந்து போவதில்லை. ஆப்படி யாராவது வந்து விட்டால் போதும் அவர்களை கண்டு கொள்ளாதது போல் அறைக்குள் நுழைந்து கொண்டு புத்தகம் வாசிப்பது போல் பிகு பண்ணுவாள். ஆவளது மனப்போக்கினை நன்கு புரிந்து வைத்திருந்த நிமலனும் தானே முன்வந்து அவர்களை உபசரித்து அனுப்பிவைப்பான்.

அன்று ஒரு சனிக்கிழமை நிமலனுக்கு அம்மா வைப் போய் பார்த்து வரவேண்டும் என உந்தியது. நிதர்சனியும் நல்ல மனநிலையில் இருப்பதை குறிப்பி னால் புரிந்துகொண்டவனாய், அவளையும் அழைத் தான்.

"நிது! இண்டைக்கு நாங்கள் எங்கட வீட்டுக்கு போய் வருவமே "லஞ்ச்" சையும் அங்கையே எடுத்திட்டு, திரும்பி வரும்போது "பீச்"சுக்கும் போய்வரலாம்"

சர்வ சாதாரணமாகத்தான் அவன் வேண்டு கோளை முன் வைத்தான். ஆனால் புற்றிலிருந்த நாகம் போல அவள் சீறத்தொடங்கினாள்.

"நானும் என்னுடைய "பிரண்ட்ஸ்" ஸூம் இண்டைக்கு வீரசிங்கம் ஹோலில் ஏதொ "சேல்ஸ்" போட்டிருக்கினமாம். "சொப்பிங்" செய்துகொண்டு அப்படியே போய் "ரெஸ்றோரன்ற்" றில சாப்பிட்டிட்டு, பின்னேரமும் டவுன் எல்லாம் சுத்திப்போட்டு ஆறுதலாய்த்தான் வீட்டுக்கு வருவம் எந்த நாளும் வீட்டுச்சாப்பாடு சாப்பிட்டு "போர்" அடிக்குது."

"ஓ! அப்படியா சங்கதி"

ஏளனமாய் வார்த்தைகள் அவனையும் மீறி வாயிலிருந்து புறப்பட்டன. பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டல்லவா பொறுமையிழந்தவனாய் நகுலன் உடனேயே புறப்பட்டு விட்டான். அவனது உந்துருளி காங்கேசன்துறை வீதியால் பயணித்து தெல்லிப்பழைச் சந்தியினால் திரும்பி, மாவிட்டபுரத்தில் இருக்கும் அவனது அம்மா வீட்டின் முன் போய் நின்றது. பாசத்திற்காக ஏங்கித் தவித்து அந்த ஜீவனை வீட்டினுள்ளேயிருந்து ஓடி வந்த பாச உள்ளங்கள் சூழ்ந்து கொண்டன. அவனது உள்ளத்தில் ஒரு எண்ணத் துளி தோன்றி அவனை ஆக்கிரமித்துக் கொண்டது மட்டுமல்லாமல் திடமான ஒரு முடிவை எடுக்க வைத்தது.

இப்படியான பாசமலர்களுக்கு மத்தியில் வாழாமல் அங்கே... ஒரு முட்புதருக்குள் அல்லவா அகப்பட்டு கிடக்கிறன். நிச்சயமா நான் ஒரு தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டிய வேளை நெருங்கிவிட்டது.

மனப்போராட்டத்துடன் அவன் மாலையில் வீடு திரும்பவென புறப்பட்ட வேளையில் அம்மா பொதியுடன் வந்தாள்.

"தம்பி! இரவைக்கு இட்லிக்கு குழைச்சு வைச்சனான். இதில உங்கள் இரண்டு பேருக்கும் இட்லி இருக்குது. இரவைக்கு சாப்பிடுங்கோ"

தாய்ப் பாசத்தை எண்ணி வியந்தவாறு அவன் அம்மாவிடமிருந்து பொதியையும் வாங்கிக் கொண்டு விடைபெற்று புறப்பட்டான். அவன் வீடு வந்த சேர்ந்த போது நிதர்சனி முன்னரே வந்து விட்டு குளியலறைப் பக்கம் போனான்.

திரும்பி வந்த நிமலனிடம் நிதர்சனி கேட்டாள்

"சுடச்சுட ஒரு ரீ குடிச்சா நல்லாய் இருக்கும் போல இருக்குதப்பா. அப்பவும் யமுனாவிட்ட சொன்னான் "பீற்சா" வேண்டாமென்று. அவள் கேட்கயில்ல வீட்டை போனா இரவைக்கு புட்டுத்தான் சாப்பிட வேண்டி வரும். இஞ்சையே "ரெஸ்றோன்றன்ற்"றிலை "பீற்சா" சாப்பிட்டு போவமன்று ஒரே பிடியாய் நின்றாள். அதைச்சாப்பிட்டது மூச்சு விட ஏலாமல் கிடக்குது."

அவள் தன் பாட்டிற்கு அளந்து கொண்டே போனாள். நிமலன் மறு பேச்சின்றி வெந்நீரைக் கொதிக்க வைத்து ஒரு தேனீரை போட்டுக் கொடுத்தான். தவிச்ச முயலை கொல்ல நினைக்க கூடாது. அதுக்கு தண்ணீர் கொடுத்து காப்பாற்றுவதுதான் பண்பு மனதுள் நினைத்துக் கொண்டான்.

தேனீரை சுவைத்து குடித்தவள், போய் படுத்து விட்டாள் கணவனைப்பற்றிய சிந்தனை எதுவும் இருந்ததாகத் தோன்றவில்லை. நிமலன் தொலைக்காட்சிப் பெட்டியின் முன் அமர்ந்திருந்தானே தவிர சிந்தனை நாளை எந்த சட்டத்தரணியைப் போய் சந்திக்கலாம் என்பதிலேயே சுழன்று கொண்டு இருந்தது. இரவு உணவாக அவன் சாப்பிட்ட இட்லி, அம்மா தன்னை வரவேற்று அரவணைப்பது போன்றதோர் உணர்வை ஏற்படுத்தியது.

மாதங்கள் சில உருண்டன. நிமலன்- நிதர்சனி தம்பதியினருக்கு விவாகரத்து இலகுவாகக் கிடைத்தது. நிமலன் கேட்ட விவாகரத்துக்கு நிதர்சனி மறுபேச்சுமின்றி இணங்கியதற்கு காரணம் தன்மானம் தான் அம்மா, அப்பாவுக்கோ, கணவனுக்கோ கட்டுப்பட்டு வாழும் எண்ணம் அவளுக்கு அறவே கிடையாது. ஒரு சிட்டுக்குருவியைப் போல் சிறகடித்து வாழவேண்டும். அதுதான் அவளுக்கு பிடிக்கும்.

இப்போதெல்லாம் அந்த சிட்டுக்குருவிக்கு சிறகுகளிருந்தும் அவை இயங்க மறுத்து விட்டதால் ஏக்கத் தின் விளிம்பில் அவள் நொந்து போய்க்கிடக்கிறாள். பெற்றோர் வற்புறுத்திக்கேட்டபோதிலும் அவர்களுடன் போயிருக்க அவள் சம்மதிக்கவில்லை எப்போதாவது விருப்பமிருந்தால் அவள் தானாக சமைத்து சாப்பிடுவாள். அல்லது வெளியில எங்காவது ஓடர் பண்ணி எடுத்துக் கொள்ளுவாள் ஒருவனரினதும் நச்சரிப்போ... பிச்சல் பிடுங்கலோ இல்லாத சுதந்திர வாழ்க்கை. ஆயினும் நடைமுறையில் அந்த வாழ்க்கை அவளுக்கு கசந்தது நிமலனுக்காக அவளது இதயம் ஏங்கித்தவிப்பதை மெதுமெதுவாக அவளது உணர்வுகள் உணர்த்தியபோதுதான் பேதையால் விழிப்புற முடிந்தது. கொடிபடர கொழுகொம்பின் அவசியம் பற்றி காலம் கடந்த பின்னர்தான் உணர முற்பட்டாள். அதற்கான பரிகாரம் எதுவுமே செய்ய முடியாத நிலை அவளுடைய தாயிற்று.

தனிமையைப் போக்கலாமென நினைத்து வெளியில் எங்கு போனாலும் பிறர் அவள்மீது செலுத் தும் அகோரப்பார்வையை அவளால் சகிக்க முடியவில்லை எல்லோரும் அவளைக் குற்றவாளியாகவே பார்க்கிறார்கள் ஒருவரிலும் விழிக்க வேண்டாமே என்று வீட்டோடு கிடந்தால் தனிமை அவளைச்சுட்டெரிக்கிறது. இக்கட்டான அந்தச் சமயத்தில் தான் தன்மீது பிழை இருக்குமோ என மனச்சந்தேகம் வேறு எழுகிறது. நாளடைவில் அந்தச்சந்தேகம் சரியானதே என மனம் ஊர்ஜிதம் செய்துகொள்கிறது. விரக்தியுற்ற நிலையில் அவளை நித்திராதேவியும் அணைக்க மறுத்து கண்ணாமூச்சி காட்டுகிறாள்.

தற்செயலாக அன்று அவள் நிமலனை வங்கியில் வைத்து சந்திக்க முடிந்தது. அவனோ அவளைக் கண்டும் காணாததுபோல் செயற்படுகிறான். அவளுடைய ஆழ் மனமோ அவளை உந்தித்தள்ளுகிறது. போ.....போய் கதை எல்லாம் உன்னுடைய அகம்பாவத் தால் வந்த வினைதானே மனதின் உந்துதல் அவளது அகம்பாவத்தை உடைத்தெறிய... தன்மானத்தையோ வீரியமிழந்து பதுக்கிக் கொள்கிறது. அவனது அருகில் போய் "எப்படி இருக்கிறீங்க?" என விளிக்கிறாள். அந்த ஒரு நொடியில் நிமலன் உடைந்து போகிறான். ஏனினும் கர்வத்துடன் பதிலளிக்கிறான்.

"எப்படியோ இருக்கன்"

பதில் சொல்லியவாறே புறப்பட்டுப் போய் விடுகிறான். ஆளை கொஞ்சம் விட்டுப்பிடித்தால்தான் இறங்கி வருவா அவனுடைய மனதின் கணிப்பு அது காலத்தின் கணிப்பு என்னவோ?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹைக்கூ கவிதைகள்

திடீர் சுகவீனம்
மனங்கலங்கச் செய்கிறது
மருத்துவச்செலவு

எரிந்தாலும் அழியாமல்
மீண்டும் உருவாகிறது
மெழுகுக் கூம்பு

நடுச்சாமம்
நடுத்தெருவில்
சண்டையிடும் நாய்கள்

கலந்தது மாசு
கதிகலங்கியழுமோ?
காசினி சூழ் காற்று

யாரைப் பாராட்டவோ
கைதட்டிக்கொண்டே இருக்கிறது
கடற்கரையில் பென்குயின்

ஆயிரம் விசனங்கள்
அமைதியாக இருக்கிறது
ஆலயம்

தென்னந்தோப்பு
பேசத் தொடங்கும்
கீற்றோடு நிலவு

கனமழை
வெள்ளக்காடாக காட்சியளிக்கும்
அரேபியப்பாலைவனம்

கடினமான மலைகள்
காலஞ்செல்லச் செல்ல
கட்டிடங்களாய் மாற்றம்

வெந்து தணிந்த வனங்கள்
வளர்ந்து காணப்படும்
வரைபடத்தில்

எறும்பின் பயணம்
மிதக்கும் குளமாகிறது
நதியில் இலை

வட்டப்பாதை
சுற்றிச்சுற்றி வருகின்றன
தொட்டி மீன்கள்



பல விமர்சனங்கள்
பல்லாயிரம் விசனங்கள்
மௌனத்தில்

இரத்த உறவு
காலமெல்லாம் பகை
கடிக்கும் நுளம்புகள்

சவக்குழிதான்
சாப்பிடும் உயிர்களை
இந்த வயிறு

பால் பருகி
பசியாறுகிறதோ?
நிலாக்கோப்பையில் இரவு

உயிர் பெற்றதோ?
காய்ந்த நாடங்காய்க் கூடு
குடியேறும் குருவி

கொட்டிய கூழாங்கற்கள்
முற்றத்தில் சத்தம்
சலசலத்து ஓடும் நதி

சளைப்பதே இல்லை
வளர்த்துக்கொண்டே இருக்கிறாள்
பேரப்பிள்ளைகளை அம்மா

நதிக்கரை
துப்பரவுக்காக நீக்கப்படும்
ஏழைக் குடிசைகள்

நதியோடும் இலையின்
மிதக்கும் குளத்தில்
எறும்பின் பயணம்

வட்டப்பாதை
சுற்றிச்சுற்றி வருகின்றன
தொட்டி மீன்கள்

பல விமர்சனங்கள்
பல்லாயிரம் விசனங்கள்
மௌனத்தில்

இரத்த உறவு
காலமெல்லாம் பகை
கடிக்கும் நுளம்புகள்

சவக்குழிதான்
சாப்பிடும் உயிர்களை
இந்த வயிறு

பால் பருகி
பசியாறுகிறதோ?
நிலாக்கோப்பையில் இரவு

உயிர் பெற்றதோ?
காய்ந்த நாடங்காய்க் கூடு
குடியேறும் குருவி

கொட்டிய கூழாங்கற்கள்
முற்றத்தில் சத்தம்
சலசலத்து ஓடும் நதி

சளைப்பதே இல்லை
வளர்த்துக்கொண்டே இருக்கிறாள்
பேரப்பிள்ளைகளை அம்மா

நதிக்கரை
துப்பரவுக்காக நீக்கப்படும்
ஏழைக் குடிசைகள்

ஜலீலா முஸம்மில்
ஏறாவூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரைப்பட உளவியல்

பேராசிரியர் சபா.ஜெயராசா




"திரைப்பட உளவியல் என்ற துறை பெருமளவு ஆய்வுகளை அடியொற்றி எழுச்சி கொள்ளத் தொடங்கி யுள்ளது. திரைப்படம் என்பது உள்ளமைந்த பல்வேறு பிரிவுகளைக் கொண்டது. அவை ஒவ்வொன்றினதும் உளவியல் இயல்புகள் தனித் தனியாக ஆராயப்படு கின்றன.

வரலாற்றுத்திரைப் படம் ஆவணத் திரைப்படம், அரசியல் திரைப்படம், நகைச்சுவைத் திரைப்படம், நாடகப் பண்புடைய திரைப்படம், திகில் திரைப்படம், கலைத் திரைப்படம், அறிவியல் திரைப்படம், சிலிர்ப்பு-எழுகை (THRILL) திரைப்படம், துணிகைச் செயல் (ADVENTURE) திரைப்படம், இசைத் திரைப்படம், மர்மம் பொதிந்த திரைப்படம், காதற் களி நிலை (ROMANCE) திரைப்படம் சிறார் திரைப்படம், இருள்கைத் திரைப்படம் (FILM NOIR) இறையியல் திரைப்படம், இயக்க மூட்டல் (ANIMATED) திரைப்படம், சீர்மியத் திரைப்படம், அழி வெழுகை (DISATER) திரைப்படம், இனவரைபியல் திரைப்படம், என்றவாறு திரைப்படங்கள் தரம்பிரிக்கப் படுகின்றன.

திரைப்படம் தொடர்பான கூர்ந்த நோக்கை மார்க்சிய உளவியல் முன் வைக்கின்றது. கலையழகுடன் சமூக அநீதிக்கு எதிராகப் போராடி சமூகமாற்றத்தை வருவிக்கும் திரைப்படங்களை மார்க்சிய உளவியல் தனிப்பிரிவாக அடையாளப் படுத்துகின்றது. இலாப நோக்கிலும், வர்த்தக நோக்கிலும் பண்பாட்டுச் சீரழிவை ஏற்படுத்தும் திரைப்படங்கள் இன்னொரு பிரிவாக அடையாளப்படுத்தப்படுகின்றன.

புலக்காட்சி, அறிகை வளர்ச்சி, மனவெழுச்சி களின் வளர்ச்சி, கதையாடலை விளங்கும் திறனில் நிகழும் வளர்ச்சி முதலியவற்றில் திரைப்படங்கள் ஏற்படுத்தும் விளைவுகளை உளவியல் ஆழ்ந்து நோக்குகின்றது. "உளத் திரைப்பட எண்ணிமம்" (PSYCO CENEMATRICS) என்ற துறையும் வளர்ச்சி கொள்ளத் தொடங்கியுள்ளது. அறிகை நிலைக்கு உயிரியல் வளர்ச்சி நிலைக்கும் திரைப்படம் ஏற்படுத்தும் செல்வாக்குகள் பற்றி பரிசோதனை நிலை ஆய்வுகள் மேற் கொள்ளப்படுகின்றன.

திரைப்படங்கள் காண்பியத் தூண்டியையும் செவி வளித்தூண்டியையும் ஒன்றிணைத்து இயக்கு கின்றன. கதைத் திரைப்படங்களில் கதைக் கருவும் உரையாடலும் முன்னெடுப்புக்கு உரிய வகையில் ஒளிப்படப் பதிவும் கருவிகளும் அவற்றின் இட அசைவு களும், ஒளி நுட்பங்களும், செவ்வி தாக்கலும் நிகழ்த்தப் படுகின்றன. அவை புலக் காட்சியிலும் அறிகைக் கோலத்திலும் மனவெழுச்சி வரைபிலும் ஏற்படுத்தும் தாக்கங்களை உளவியலாளரும், நரம்பியல் விஞ்ஞானி களும், அறிகை விஞ்ஞானி களும் வரன் முறைப்பதிவு களுக்கும் உட்படுத்து கின்றனர்.

திரைப்படம் பார்க்கும் பொழுது நிகழும் கண் ணசைவுகளுடன் மூளை மேற்கொள்ளும் செயற்பாடுகளையும் துழாவிப் பதிவிடும் பொறிகளைப் பயன்படுத்தி ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. பார்ப்போரின் உளக் கோலமும், உணர்வுக் கோலமும் ஒளி நுட்பங்கள், ஒலி நுட்பங்கள், செவ்விதாக்கல் நுட்பம் முதலியவற்றின் தாக்கங்களுக்கு உட்படுதல் பொதுவாகக் கண்டறிப்பட்டுள்ளது.

செவ்விதாக்கப்பட்ட திரைப்படங்கள் செவ்வி தாக்கப்படாதவற்றைக் காட்டிலும் கூடுதலான தாக்கம் விளைவித்தல் கண்டறியப்பட்டுள்ளது.

திரைப்படம் பார்க்கும் பொழுது அவை படிமங் களாக மூளையிலே பதிவாக்கம் செய்யப்படுகின்றன. மனவெழுச்சியும் படிமங்களும் இணைந்து கொள் கின்றன. சிக்கலான புறத்தூண்டிகளை வரன்முறைப் படுத்தி ஒழுங்கமைக்கும் திறனை மூளை கொண்டுள் ளது. தேவை கருதி, அந்தப் பதிவுகள் இடமாற்றம் செய்யப்படுகின்றன அல்லது எடுத்தாளப்படுகின்றன. அறிகை உளவியல் இடமாற்றச் செயல்முறையில் (TRANSFER OF LEARNING) ஊன்றிய கவனம் செலுத்துகின்றது. சீர்மிய உளவியல் அந்த இடமாற்றத்தை மனச் சுகத்தோடு தொடர்புபடுத்தி நோக்குகின்றது.

நூல் வாசிப்பு என்பது இடமிருந்த வலம் நோக்கிய கண் அசைவை ஏற்படுத்துகிறது. ஒளிப்படக் கருவியை இயக்குவோரும் அந்தப் பழக்கத்துக்கே பெரு மளவில் உள்ளனர். அத்தகைய அசைவுப் படிமங்கள் வலம் இருந்து இடம் நோக்கிய அசைவுப் பழக்கம் உள்ளோர்க்கு மனப்பதிவு இடர்களை ஏற்படுத்துகின்றன.

திரைப்படத்தைக் கிரகித்து உள்வாங்கும் செயல் முறையில் ஒளி என்ற மாறியின் செயற்பாடு செல்வாக்குச் செலுத்துதல் அறிகை உளவியலாளரின் கவனத்தை ஈர்க்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரைப்படத் துறையில் நீடித்த செல்வாக்கு விளைவித்து வரும் உளவியற் கருத்தியலாக உளப் பகுப்பு உளவியல் விளங்குகின்றது.

நனவிலி மனம் என்ற ஆழ்மனத்தின் ஊக்கல் மனித நடத்தைகளை உருவாக்குவதிலே விசை கொண்டு தொழிற்படுவதை சிக்மன் பிராய்ட் விளக்கினார். பால் உந்தல் மனித செயற்பாடுகளில் செறிவு மிக்க செல்வாக்குச் செலுத்தலையும் அதனை நிறைவேற்ற முடியாத நிலையில் உருவாகும் அடக்கற் செயற்பாட்டையும் அதன் வழி எழும் பிறழ்வு நடத்தைக் கோலங்களையும் அவர் விபரித்தார். திரைப் படக்கலையாக்கத்தில் அவை பெருமளவு செல்வாக்கு விளைவித்து வருகின்றன.

ஒருவரது நிகழ்கால நடத்தைகள் நடந்து முடிந்த கால அனுபங்களின் விளைவாகவும் நீட்சியாகவும் அமைதல் உளப்பகுப்பியலின் அடிப்படை கனவுகளை ஆராய்தல் வாயிலாகவும், ஒரு வாத கட்டுப்பாடுகளும் அற்ற தடங்கலற்ற உரைத்துண்டங்களாலும் ஒருவர் தனிமையாய் இருக்கும் பொழுது மேற்கொள்ளும் செயல்களாலும் உரைகளாலும், ஆழ்மன அழுத்தங்களின் இயல்பை அறிந்து கொள்ள முடியும்.

ஆழ்மனத்தின் வெளிப்பாட்டை திரைப்படங்களிலே புனையும் சர்ரியலிச (அகநடப்பியல்) நுட்பவியலை அன்ரே பிறரன் அறிமுகம் செய்தார். திரைப் படத்தின் மெதுவோட்டம், காட்சியின் மேலமைந்த பதிவுகள் மங்கலான பதிவுகள், மாறு நிலைப் பிரதி பலிப்புக்கள் ஒளித்தெறிப்பு, ஒளிமுறிவு ஆகியவற்றுடன் இணைந்த சித்திரிப்புக்கள் வாயிலாகத் திரைப்படத்தில் ஆழ்மனக் கோலங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன.

உளப்பகுப்பு உளவியல் திரைப்படங்களில் நிகழ்திவரும் பிறிதொரு செல்வாக்கு விருகற்பனையை (FANTASY)ப் பொதிவு செய்தலாகும். நிறைவேறாத இச்சைகளை மனப்படிமங்களால் எறிவு செய்து கற்பனையை இயக்குதல் விடுகற்பனையாகும். விடுகற்பனைகளைப் பிரதி நிதித்துவம் செய்யும் வளமான காண்பியக் களமாக திரைப்படங்கள் இயங்குதல் சுட்டிக் காட்டப்படுகிறது.

உளப்பகுப்பு உளவியல் மனித ஆளுமை பற்றிய விளக்கத்தையும் தருகிறது. சிக்மன் பிராய்ட் மனித ஆளுமை தொடர்பான முப்பரிமாண விளக்கத்தை முன் வைத்தார். இப்என்ற மிருக இயல்பு, அதிலிருந்து வளர்ச்சி கொள்ளும் ஈகோ என்ற சமூகப் பண்புகளுடன் இணைந்த இயல்பு மேல்நிலை ஈகோ என்ற அறநெறி விழுமியங்கள் சார்ந்த இயல்பு என்றவாறு ஆளுமை மூன்று பரிமாணங்களைக் கொண்டது.

உயிர் மரபு வழியாகப் பெறப்பட்ட தேவைகளும், உணர்வுகளும், நனவிலியின் இருப்பாக அமைகின்றன. கட்டற்ற பாலியல் உந்தல் அதிலிருந்து மேலெழுகின்றது. சமூக இயல்பை மீறிச் செல்லும் பாலியல் நடத்தைகள் இட் என்பதிலிருந்தே மேலெழுவதாகக் குறிப்பிடப்படுகிறது. காண்பிய நிலையிலும் ஒளிச் செறிவு நிலையிலும், அசைவு எடுப்பின் வழியாகவும், இட்டின் இயல்புகள் வெளிப்படுத்தும் பொழுது மிருக உணர்வின் உச்சங்கள் நோக்கிய நகர்ச்சி திரைப்படங்களால் நிகழ்த்தப்படுகிறது.

மார்ச்சிய அறிவியலையும், உளப் பகுப்பு உளவியலையும் ஒன்றிணைக்கும் செயற்பாடுகளை உளவியலாளர் சிலர் முன்னெடுத்தனர் எரிக்புரோம் மற்றும் லகான் ஆகியோர் இத் துறையில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள்.

புரோம் முன் வைத்த வாழ்தல் விருப்பு (BIOPHILLIA) மற்றும் வாழ்தல் வெறுப்பு (NECROPHILIA) ஆகிய கருத்துக்கள் உளப் பகுப்பு உளவியலில் இருந்து பெறப்பட்டவை: வாழ்தல் வெறுப்பைத் திரைப்படங்களில் வெளிப் படுத்தல் நவீன வெகுசனப் பண்பாட்டின் எழுநிகராக இருத்தலை ஆய்வாளர் சுட்டிக்காட்டுகின்றனர். கூர்ப்பு அடைந்து வரும் சுரண்டல் வலையமைப்பும் அவற்றால் நிகழ்த்தப்படும் தனிமனித ஒடுக்கங்களும் இந்த நிலையைத் தோற்றுவித்து வருவதாக மார்க்சிய நோக்கில் அதற்கு விளக்கம் கொடுக்கப்படுகிறது.

அசையும் உருக்கள் வழியாக ஒருவரிடத்துத் தன்னிலையை உணர்த்தும் சாதனமாகத் திரைப்படம் விளங்குகின்றது.

தன்னிலை(SELF) உருவாக்கம் பற்றி விளக்கிய உளவியலாளருள் லகான் முக்கியமானவர் .அவர் முன் மொழிந்த கண்ணாடிப்பருவம்(MIRRORSTAGE) என்ற கருத்து முன்வைக்கப்படுகின்றது.

இந்த பருவம் குழந்தை பிறந்து ஆறு தொடக்கம் பதினெட்டு மாதங்களுக்கிடையில் நிகழ்கின்றது தனது உருவத்தைக் கண்ணாடியில் பார்ப்பதிலிருந்து “தான் யார்” என்ற தன்னிலை வளர்ச்சி கொள்ளத் தொடங்குகின்றது. ஆளுமை பற்றிய உற்றுணர்வை வளர்ப்பதற்குரிய அடிப்படைத் தளமாக அது அமைகின்றது.

உளப்பகுப்பை அடிப்படையாகக் கொண்டு திரைப்படக் கோட்பாட்டிலும், திறனாய்விலும் லகானை அடிப்படையாகக் கொண்ட திரைப்படக் கோட் பாட்டிலும், திறனாய்விலும் லகானை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறைகள் பரவலாக உள்ளன.

நனவில் மனம், மொழி போன்று கட்டமைப்புச் செய்யப்பட்டுள்ளதாக லகான் விபரித்துள்ளார். திரைப் படத்தின் உரையாடல் மொழியும் காட்சி மொழியும் பார்ப்போரின் நனவில் மொழிக் கோலத்தைத் தழுவிச் செல்லும் நிலைவரங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன.

திரைப்படப் படிமங்கள், ஒலி, ஒளிப்பரவல், கதையாடல் ஆகியவற்றுக்கிடையே நிகழும் இடைவினை நிகழ்த்துகை நனவிலி இணைப்பைத் தட்டியெழுப்பி விடுவதாக லகான் குறிப்பிடுகிறார்.

கண்ணாடிப் பருவத்தில் குழந்தை தனது உருவத்தைக் கண்ணாடியில் பார்த்து “தான் யார்” என்ற தற்படிமத்தை உருவாக்கிக் கொள்வது போல் திரைப் படத்தைப் பார்த்து ஒருவர் தற்படிமத்தை உருவாக்கிக் கொள்ளும் நிலை ஏற்படுகின்றது. அவ்வாறு தற் படிமத்தை உருவாக்கிக் கொள்வதற்குரிய தூண்டல் நிலையைத் திரைப்படம் ஏற்படுத்திவிடுகிறது.

திரைப்படங்களின் குறிகைச் செய்முறை (SIGNPROCESS) நனவிலி மனத்தின் குறிகைச் செயல்முறைக்குப் பெருமளவில் ஒப்பானதாக இருத்தல் குறிப்பிடத்தக்கது.

ஒடுக்கு முறைச் சமூகத்தில் வர்த்தக நோக்குடன் உருவாக்கப்படும் வெகுசனத் திரைப்படங்கள் கருத்தியல் நிலையில் மேலாதிக்கத் திணிப்புடன் செயற்படுவதை மார்க்சிய உளவியல் விரித்துரைக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்

நாட்டியகலாநிதி கார்த்திகா கணேசர்.



போரின் கொடுமைகளை அனுபவித்த சமுதாயமே நாம். ஒரு காலத்திலே சேர, சோழ, பாண்டியர்கள், வீரப்போர் புரிந்தார்கள். நாடுகளை கைப்பற்றினார்கள் என்பதை எல்லாம் பெருமையாக கருதினோம். ஆனால் போர் என்ற நாச சக்தியை உணரும்போது, எமது இரத்தம் உறைந்து விடுகிறது. இந்த போர் என்ற நாச சக்தியை தடுக்க முடியுமா? அவ்வாறானால் மனித சமுதாயத்தின் வரலாற்றையும்,அதன் படிமுறை வளர்ச்சியையும் நாம் சிறிது ஆராய வேண்டும்.

மனித சமுதாய ஆரம்ப காலத்திலே மனிதன் மிருகங்களுக்கு பயந்து கூட்டம் கூட்டமாக குகைகளிலே வாழ்ந்தான். இவ்வாறான கூட்டங்களில் மக்கள் தொகை அதிகரிக்க வெவ்வேறு குழுக்களாக பிரிகின்றன. வேறுபட்ட குழுக்கள் வேட்டையாடும் நிலத்தில் வேட்டை கிடைக்காதபோது மற்றவன் நிலத்தில் வேட்டையாட போகும்போது மோதிக்கொண்டனர். மாற்றானை விரட்டினார்கள், முடிந்தால் கொன்றும் தீர்த்தனர். அன்றாடம் வேட்டையாடி காய் கனிகளை சேகரித்து பசியை போக்கிய காலம் மாறியது. மனிதன் நிலத்தை உழுது பயிரிட கற்றுக்கொண்டான். உழுது பயிரிடும் போது பங்கீட்டு சண்டைகள், வளமான நிலத்தை அடைய சிறு சிறு சச்சரவுகள் சண்டைகளாக மாறின, இவற்றை எல்லாம் இன்று போல பெரிய போர் என கூறிவிட முடியாது. ஏதோ மனித கூட்டங்களின் மோதல் எனவே கூறி விடலாம்.

மனித நாகரீகத்தின் உன்னத வளர்ச்சியை எடுத்துக்காட்டுவது உலோகங்களில் இரும்பின் வருகையே. இரும்பின் வருகையால் உற்பத்தி பன்மடங்கானது. இரும்பாயிதத்தால் உழுது பயிரிட்ட மனித சமுதாயம் பல மாற்றங்களை கண்டறிந்தது. ஆனால் நிலத்தின் உரிமையோ ஒருசிலரிடமே இருந்தது. இவர்கள் பெரிய நிலப்பரப்பின் உரிமையாளர்களானார்கள். இந்த மாற்றத்தின் பின் தோன்றியதே அரசன், சக்கரவர்த்தி, பேரரசுகள் சிற்றரசுகள். ஒவ்வொரு அரசுக்கும் தன்னை காப்பாற்ற படைபலம் வேண்டி இருந்தது. அதன் மூலமே போர், புதிய பயிற்சிபெற்ற போர் வீரர்கள் என சமூகம் மாறியது.

இந்த படைபலமே குடிகளை அடக்கி ஆள்வதற்கும் உதவியது. ஆனால் அபரிமிதமான விளைச்சலால் மக்கள் பசியால் வாடவில்லை. அவர்களுக்கு போதிய ஓய்வு கிடைத்தது. இதன் பலனாக கலைகளும் இலக்கியமும் வளர வாய்ப்பு ஏற்பட்டது

இந்த காலகட்டத்து இலக்கியங்களோ போரையும் வீரத்தையும் பறைசாற்றின. எமது இரு பெரும் இதிகாசங்களான மகாபாரதம், இராமாயணம், போன்றவை போரையே மையமாக கொண்டு அமைந்தவை. மகாபாரதம் பாண்டவருக்கும் அவர்கள் உறவினரான துரியோதனாதிக்கும் இடையில் நடந்த போரை வர்ணிப்பது. இராமாயணமோ இராமனுக்கும் இராவணனுக்கும் நடந்த போரை விவரிப்பவை. பிற்காலத்தில் இந்த போரை பறைசாற்றும் நூல்களோ தெய்வீக நூல்களாகவும் கொள்ளப்பட்டன. இராமன் அவதார புருஷனாகிறான். பாண்டவருக்கும் கௌரவருக்கும் நடந்த போர்முனையில் கிருஷ்ணன் அர்ச்சுனனுக்கு செய்த உபதேசமே பகவத்கீதை, இது இன்று இந்துக்களின் தர்ம சாஸ்த்திரம். போரின் கொடுமைகளை மறைக்க இவற்றை தெய்வீகம் என்கிறார்களா?

போர் வெறி கொண்ட மன்னன் அசோக சக்கரவர்த்தியோ, பல நாடுகளை போரிலே வென்று சாம்ராட்சியம் அமைக்கிறான். தான் கட்டி எழுப்பிய சாம்ராட்சியத்திலே, மீண்டும் அரசுகள் தனக்கெதிராக கிளம்பாமல் இருப்பதற்காக பௌத்த மதத்தையும் அதன் அகிம்சா தத்துவத்தையும் பரப்புகிறான். கடல் கடந்த இலங்கை, இந்தோனேஷியா நாடுகளிலும் பௌத்த மதத்தை ஸ்தாபிக்கிறான்.

நமது தமிழ் மன்னர்கள் வாழ்வே போராகத்தான் இருந்ததுபோலும். எமது இலக்கியச் செல்வமான புறநானூறு, கலிங்கத்துப்பரணி, யாவும் போரையும் வீரத்தையும் வர்ணிப்பவையே! அரசனோ பேராசை கொண்டவனாக நாட்டை விரிவுபடுத்துவதற்கு போரில் ஈடுபடுவான். நாட்டை விரிவுபடுத்துவதன் மூலம் பெரும்

செல்வமும் பெருமையும் அடைவான். இதையே கிபி 6ம் நூற்றாண்டில் வாழ்ந்த அப்பர் சுவாமிகள் “ஆசைக்கோர் அளவில்லை அகிலம் எல்லாம் கட்டி ஆளினும் கடல் மீதே ஆணை செய்ய நினைப்பார்” என்கிறார் மன்னர் குலத்தைப்பார்த்து. நிலத்தை எல்லாம் கட்டி ஆண்டாலும் திருப்தி அடையார் கடல் மீதும் ஆணை செலுத்த விரும்புவார் என்றார்.

பாகம் 2

எம்மவர் பலர் புராண கதைகளை படித்துவிட்டு , மன்னர்களின் போர்கள் ஏதோ ஒரு ஒழுங்கு முறையில் குறிப்பிட்ட ஒரு நிலப்பரப்பில் போர் வீரர்களுக்கிடையே மட்டுமே நடந்ததாக கருதுகிறார்கள். அவ்வாறான போர்களால் பொது மக்கள் பாதிக்கப்படவில்லை எனவும் நம்பப்படுகிறது. இது உண்மைக்கு புறம்பானதே. படைஎடுத்துச் செல்லும் வீரர்களுக்கு போதுமான உணவை தலைநகரில் இருந்து எடுத்துச் செல்ல முடிவதில்லை . வழியில் போகும்போது விவசாயிகளிடம் இருந்து அவர்களின் தானியங்கள் பறிமுதல் செய்யப் படுகிறது. பெரிய எண்ணிக்கையில் போகும் போர் வீரர் களுக்கு வேண்டிய உணவு இவ்வாறே பெறப்படுகிறது. இதனால் விவசாயி அன்றைய போக தானியத்தை இழந்து பசி பட்டினியால் வாட நேரிட்டது.

அன்று மன்னர்கள் போரிட நேரிட்ட போது மக்கள் மன்னனை ஆதரித்தனர் என கூறிவிட முடியாது. இந்த நிலையே உலகம் பூராவும் நிகழ்ந்தது. தலை நகரில் இருந்து தொலைவில் வாழ்ந்து வருவது தெரிந் தால் மன்னனின் உத்தியோகத்தர் வரியை பெற வரு வார்கள், வரி செலுத்தாவிட்டால் அடியும் உதையுமே. இராஜராஜ சோழனது காலத்தில் கூட வரி செலுத்த முடியாமல் கோயில் முன் தனக்கு தானே தீ மூட்டிய தற்கும் சான்றுகள் உண்டு. இவற்றை எல்லாம் இலக்கி யம் கூறாது, அன்றைய புலவர்கள் அரசனுக்கு ஆக்கம் தேடிய கூலி படையே, இந்த கூலி பெற்ற புலவர்கள்” அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி” என கூறி வைத்தார்கள்.

அரசன் ஆண்ட அரசு சாம்ராட்சியம் எல்லாமே பழம் கதையாகின. மக்களின் தேசம் நாடு என நிலை மாறின, ஒரே கலாச்சாரத்தையும் மொழியையும் வர லாற்றையும் கொண்ட ஒரே நிலப்பரப்பு ஒரு தேசம் என கொள்ளப்பட்டது. இந்த அடிப்படையில் தோன்றிய தேசங்களே,. இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, இவை 19 நூற்றாண்டில் தோன்றியவை. அவற்றை அடுத்து தோன்றியவை சோவியத் யூனியன், இந்தியா, சுவிட்சர் சலாந்து இவையோ முன்போன்றவை அல்லாது வேறு பட்ட மொழி கலாசார மக்களை உள்ளடக்கியவையே,. இவர்களின் அரசியல் சித்தாந்தம் அதற்கமையவே இருந்தது.

இனி நாம் இன்று அதிமாக கேள்விப்படும் (guerrilla) கொரில்லா போர் முறையை பார்ப்போம்,. இந்தவகையான போர் தந்திரத்தை முதலிலே கையாண்டவர்கள் சீன, வியட்நாமிய மக்களே.

Guerra என்ற ஸ்பானிய சொல்லின் அர்த்தம் போரே. கொரில்லா போராளிகள் பயிற்றப்பட்ட போராளி கள் அல்ல, இவர்கள் சிறுசிறு தாக்குதலில் ஈடுபடுபவர் , பயிற்றப்பட்ட நாட்டின் போராளிகளில் இருந்து மாறு பட்டவர்கள், இவர்கள் தந்திரம் வேறுபட்ட இடங்களில், எதிர்பாராத சில இடங்களில் சிலதாக்குதல்களை கையாண்டு பீதி ஊட்டுவதே. இத்தகைய போராட்டம் 1809 முதல் 1813 வரை ஸ்பானியர், போத்துக்கேயரால் பிரெஞ்சு படையை வெளியேற்றக் கையாளப்பட்டது. ஆனால் இத்தகைய ஓர் போர்முறைபற்றி கி மு 4ம் நூற்றாண்டிலேயே சீனர் அறிந்திருந்தனர். சீன படை தளபதி Sun-Tzu என்பவர் “போர்கலை!” என்ற நூலில் மறைந்திருந்து திடீர் தாக்குதல், பீதி ஊட்டுதல் வெவ் வேறு இடங்களில் இருந்து, தாக்குதலை அரசுக் கெதிராக பொதுமக்களே நடத்துவது பற்றி விவரித்து எழுதி உள்ளார். இத்தகைய தாக்குதல் மிக பெரிய படை கொண்ட எதிரியையும் மிரட்ட வல்லது என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் இன்றும் போர் என்ற நாசகாரி புதிய புதிய கோலங்களில் தலைவிரித்தாடுகிறது. முன்பை விட மகா சக்தியுடன் தாக்கி நாசம் விளைவிக்கும் சக்தி வாய்ந்தது. வேகம் கொண்ட பயங்கர ஆயுதங்களின் நாசத்தை காண முடியும். இதற்கு எடுத்துக்காட்டாக இரண்டு மகா யுத்தங்களை கூறலாம். இதன் பலன் பலகோடி மக்கள் உலகம் பூராவும் மாண்டனர். அங்க ஈனர்கள் ஆயினர். அதுமட்டுமா அளவிட முடியாத பொருள் சேதம். இந்த போரில் பாதிக்கப்பட்ட சாதாரண மக்களின் எண்ணிக்கையே போர்வீரர்களின் எண்ணிக்கையிலும் அதிகமானது.

ஏன் இந்தப் போர், எதற்காக போர் மூண்டது. உலகநாடுக்குள் தம்முள் பங்குபோடுவதில் ஏற்பட்ட போட்டி, தாம் உற்பத்தி செய்த பொருட்களை சந்தைப் படுத்துவதில் ஏற்பட்ட போட்டி இவையே இந்த அழிவுக் குக்காரணம். பேராசைகளின் விளைவே இவை. ஆதிக்க பலத்தை நிலை நிறுத்துவது, அதன் பலன் தமது பொருட் களை விற்பதால் பெறும் செல்வம். இதுவே உலக யுத்தத்தின் பின்னணி. இவர்கள் பங்கு போடுவதோ மூன்றாவது மண்டல நாடுகள்.

உலக மகா யுத்தங்கள் முடிவடைந்து 75 ஆண்டுகள் ஆகிவிட்டது போர் என்ற நாச செயல் நிறுத்தப்பட்டதா? உலகின் எங்கோ ஒரு இடத்தில் போர் நடந்தவண்ணமே உள்ளது. கூறப்படும் காரணங்கள் மாறுபட்டவை. புதிய புதிய அதி வேகத்துடன் நாசம் விளைவிக்கக் கூடிய ஆயுதங்கள் தயாராகிய வண்ணமே உள்ளது. அதனால் பொதுமக்கள் அதிகமான கொடுமைக்குள்ளாவதை நாம் தொலைக் காட்சி நிகழ்ச்சிகளாக காண்கிறோம். மனித மனங்கள் மாறுமா? அமைதி அமைதி எனப்பேசுவதெல்லாம் வெறும் வாய்பேச்சா?

மனிதன் மனிதனாக வாழ்வதற்கு பல மத போதனைகளும் சித்தாந்தங்களும் உள்ளனதான். மத போதனைகளோ, சித்தாந்தங்களின் அறிவார்ந்த சிந்தனைகளோ போரை நிறுத்த முடியவில்லை. மனிதரின் பஞ்சமும் பசியும் போகவில்லை.

உலகளாவிய வணிகத்தை பெருக்கும் மனிதனால் மனிதனை மனிதனாக மதிக்க முடியவில்லை. பேராசையின் வாரிசா மனிதன், மனிதாபிமனம் எங்கே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாக்ரன்

கொமிக்ஸ் தொடர்

கதை - இ.சு.முரளிதரன்
வரைகலை - ஷாயினி வித்தி ஆனந்தன்
தரம் - 12 உயிரியல்
யா/ சுண்டிக்குளி மகளிர் கல்லூரி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமுறை மாற்றம்

- எஸ். ஏ. கப்பார்-



நிலோஜினியின் 37 ஆவது பிறந்த நாளன்று, அவளது ஒரே மகள் அனோஜாவுக்கும் 16 ஆவது பிறந்த நாள். சொல்லி வைத்தாற் போல் இருவரும் ஜனவரி ஒன்பதாம் திகதி பிறந்தவர்கள். அதனால் தாயும் மகளும் ஒரே தினத்தில் அவர்கள் வழக்கமாகச் செல்லும் ஹோட்டலுக்குச் சென்று ஒரு சில நண்பர்களுடன் தங்கள் பிறந்த தினத்தைக் கொண்டாடுவதுண்டு. அனோஜாவின் வயதைப் பார்த்தால், நிலோஜினி 20 அல்லது 21 இள வயதில் திருமணம் முடித்து ஓரிரு ஆண்டுகளில் அனோஜா பிறந்திருக்க வேண்டும்.

அனோஜாவின் அம்மா நிலோஜினி புகழ்பெற்ற நாகரிகமான ஒரு பணக்காரக் குடும்பத்தில் பிறந்து செல்வச் செழிப்புடன் வாழ்ந்தவள். சாதாரண தரத்துடன் தனது படிப்பை நிறுத்திக் கொண்டவள். அனோஜாவின் அப்பா கருணாகரன் பிரபல்யமான வர்த்தகர். தனியாக ஏற்றுமதி இறக்குமதிக் கம்பனி ஒன்றை சொந்தமாக நடத்திவருகிறார். அவருக்கு வயது 57. தோற்றத்தில் 47 வயது மதிக்கத்தக்கவர். திடகாத்திரமானவர். நன்றாகப் படித்தவர். மும்மொழிகளிலும் நன்கு தேர்ச்சி பெற்றவர். நிலோஜினியை இரண்டாந் தாரமாகக் கைப்பற்றியிருக்க வேண்டுமென நினைப்பவர்கள் அதிகம். சிலர் சொத்துக்காக நிலோஜினியை அவளது பெற்றோர்கள் வயது முதிர்ந்தவருக்குத் திருமணம் முடித்து வைத்து விட்டதாகக் கூறுவதுண்டு. இன்னும் சிலர் காதல் திருமணம் என்றும் வீட்டில் சொல்லிக்கொள்ளாமல் பெற்றோரை வெறுத்துக் கல்யாணம் பண்ணிக் கொண்டவர்கள் என்றும் சொல்வதுண்டு. ஆனால் உண்மை எதுவென யாருக்கும் தெரிந்திருக்கவில்லை.

நிலோஜினி பணக்காரக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தாலும் பண்பாகவும் நாகரிகமாகவும் நடப்பவள். மற்றவர்களின் உணர்வுகளை மதிப்பவள். கணவனுக்குக் கட்டுப்பட்டு நடப்பவள். மற்றவர்களைப் போல் தொலைக்காட்சித் தொடர் நாடகங்களிலோ அன்றி கைத்தொலைபேசியிலோ மூழ்கிக்கிடப்பவள் அல்ல. வீட்டில் வேலைக்காரி இருந்தாலும் தன்னுடைய சொந்த வேலைகளைத் தானே செய்வதோடு சமையல் வேலைகளிலும் வேலைக்காரிக்கு உதவி செய்வாள். எவருடனும் கடிந்து பேசமாட்டாள். இரக்க குணமுள்ளவள்.

ஆனால் மகள் அனோஜா நாகரிகத்தில் ஊறிப் போய் மற்றவர்களை மதிக்கும் பண்பு அற்றுப் போனவள். முன்கோபக்காரி. எடுத்தெறிந்து பேசுபவள். தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என வாதிடுபவள். நண்பர்களுடன் சகஜமாகப் பழகுபவள். ஆண் நண்பர்கள் அதிகம். முழு நேரமும் கைத்தொலைபேசியுடன் உறவாடுபவள். ஆனாலும் படிப்பில் நல்ல கெட்டிக்காரி. "ஒரே பிள்ளையென்று அளவுக்கதிகமாகச் செல்லம் கொடுத்தாலும் இப்படித்தான் பிள்ளைகள் வளர்வதுண்டு" என வருத்தப்பட்டுக் கொள்வாள் நிலோஜினி.

"மேடம். மேல் மாடி றூம் ஓகே மேடம்." - முதலாவது மாடியில் அமர்ந்திருந்த நிலோஜினியிடம் வெயிட்டர் வந்து பக்குவமாகக் கூறியதும், தனது பெண் நண்பிகளுடன் மேல் மாடி நோக்கிச் சென்றாள் நிலோஜினி. மேல் மாடியில் விசாலமான அறை ஒன்று பிறந்த நாள் கொண்டாட்டத்திற்கு ஏற்ற வகையில் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. தனது ஐந்தாறு நண்பிகளுக்கு மட்டுமே அழைப்பு விடுத்து, கேக் வெட்டி, மதிய உணவு வழங்கி பிறந்த நாளைக் கொண்டாடுவது வழக்கம். சில வேளைகளில் அவளது கணவர் கருணாகரனும் குறித்த நேரத்துக்கு வந்து உணவருந்திச் செல்வதுண்டு.

நிலோஜினி தனது கைத்தொலைபேசியை உயிர்ப்பித்து, "அனோஜா, மேலே நாங்க காத்திருக்கோம். உன் நண்பிகளை அழைத்துக்கொண்டு மேலே வா." என மகளை அழைத்தாள்.

"என்ன அம்மா. அவசரப்படுத்துற. நண்பிகள் எல்லாம் வந்துட்டாங்க. போய்ஸ்தான் இன்னும் வரல்ல. நீங்க ஆரம்பிங்க. இதோ வந்திடுவோம்." எனக் கூறித் தொடர்பைத் துண்டித்தாள். மீண்டும் அழைப்பை ஏற்படுத்தி "என்னடி விசர்க்கதை கதைக்கிற. எத்தனை தடவை சொல்லியிருக்கேன், போய்ஸைக் கூப்பிடாதே என்று. இன்று அப்பாவும் வருவதாகக் கூறியிருக்கார். எனக்குத்தான் பேசப் போறார்." எனக் கடிந்து கூறினாள்.

"அம்மா, அப்பாவை நான் எப்படியோ சமாளிச்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுக்குவேன். நீங்க உங்கட நண்பிகளைக் கவனியுங்க. வயது போன ஆட்கள். மயங்கிக்கியங்கி கீழே விழுந்து டப் போறாங்க." சிரித்தவாறே தொடர்பைத் துண்டித்தாள்.

சிறிது நேரத்தில் அனோஜாவின் நண்பர்களும் கலந்து கொள்ள வெவ்வேறாகக் கேக் வெட்டி கொண்டாட்டங்கள் ஆரம்பமாகி, மதிய உணவும் பரிமாறப்பட்டது. அனோஜாவின் அப்பா வருவதாகக் கூறியதால் என்னவோ அனோஜாவின் ஆண் நண்பர்கள் மிகவும் அமைதியாகவும் ஆர்ப்பாட்டங்களில்லாமலும் அமர்ந்திருந்து உணவருந்தி அனோஜாவை வாழ்த்தி விட்டு பிரிந்து சென்றனர். ஆனால் அலுவலக வேலைப் பழு எனக் கூறி அவளது அப்பா வரவில்லை. அப்பா வராதது அனோஜாவுக்குச் சிறிது ஏமாற்றமாகவும் அதே வேளை அவளது அம்மாவுக்கு நிம்மதியாகவும் இருந்தது.

வீடு வந்து சேர்ந்த நிலோஜினி நீண்ட நேரம் யோசித்தாள். தனது மகளின் எதிர்கால வாழ்க்கையை முன்னிட்டு இனிமேல் தனது பிறந்த நாட்களைக் ஹோட்டலிலோ அன்றி வீட்டிலோ கொண்டாடுவ தில்லை என்ற முடிவுக்கு வந்தாள். அவள் விரும்பியது போல் அனோஜாவின் பிறந்த நாள் கொண்டாட்டங்கள் மட்டும் வீட்டில் தொடர்ந்து நடைபெற்று வந்தன. பெரும்பாலும் அனோஜாவின் அப்பாவும் கலந்து கொண்டார். ஆரம்பத்தில் ஓரிரு கொண்டாட்டங் களுக்குச் சமுகமளித்த ஆண் நண்பர்கள் தொடர்ந்துவந்த பிறந்த நாள் கொண்டாட்டங்களில் கலந்துகொள்வதில் நின்றும் படிப்படியாகத் தவிர்த்துக் கொண்டனர்.

காலங் கடந்து சென்றது. அனோஜா நன்றாகப் படித்து வந்தாள். இம்முறை உயர்தரப் பரீட்சையில் நன்றாகச் சித்தியடைந்து தான் விரும்பியது போல் பல் கலைக் கழகம் சென்று ஒரு வைத்தியராக வரவேண்டு மென எண்ணியிருந்தாள். ஆனால் அவளொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைத்தது. பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகி இருந்த போதும் வைத்தியத் துறைக்குத் தெரிவாகவில்லை. மிகவும் மனமுடைந்து காணப்பட்டாள். தன் கனவுகள் நனவாகவில்லையே என எண்ணி அடிக்கடி அழுதாள்.

"அனோஜா, ஏன் மகள் இவ்வளவு கவலைப் படுற. இன்னும் இரண்டு தடவை எடுக்கலாம்தானே! உனக்கு சின்ன வயது தானே. இன்னுமொரு தடவை எடுத்துப் பாரு. அப்பா வந்ததும் சொல்லி டியூஷன் ஏற்பாடு ஏதாவது செய்து தொடர்ந்து படி." என ஆறுதல் கூறினாள், அம்மா.

வரவேற்பறை சாய்வு நாற்காலியில் அமர்ந் திருந்த அனோஜா அம்மாவின் ஆறுதல் வார்த்தை களுக்கு எதுவுமே கூறாது, எழுந்து சென்று தனது படுக்கையறைக் கட்டில் மீது சாய்ந்துகொண்டு தலையணையை முகத்தில் அழுத்தியவாறு அழுதாள்.

சில மணி நேரத்தில் அப்பா வந்ததும் எழுந்து வந்து "அப்பா! நான் வெளிநாடு சென்று படிக்கப் போறேன். ஏற்பாடு செய்யுங்க" - இரத்தினச் சுருக்கமாகக் கூறிவிட்டு உள்ளே சென்று விட்டாள். கேட்டுக் கொண்டிருந்த அம்மா அனோஜாவை நோக்கிச் சென்ற தும் அவளது விசும்பல் சத்தங் கேட்டு, எதுவுமே கூறாது வெளியே வந்துவிட்டாள்.

வைத்தியக் கல்வி கற்க கடல் கடந்து வெளிநாடு சென்று ஐந்து வருடங்கள் கடந்துவிட்டன. வருடத்தில் ஒரு முறை வீடு வந்து அப்பா அம்மாவுடன் ஒன்றரை அல்லது இரு மாதங்கள் தங்கியிருந்து மீண்டும் செல்வ துண்டு. வீட்டில் தங்கியிருக்கும் நாட்களில் முன்புபோல் அம்மாவுடன் அவ்வளவாக உரையாடுவதில்லை. தானும் தன் பாடும் என்பது போல் தனது படுக்கையறையிலேயே நேரத்தைக் கழிப்பாள். அப்பாவுடன் சில வேளை சிரித்துப் பேசுவாள்.

இம்முறை வீடு வந்த தனது மகளில் ஏற்பட்டி ருக்கும் விசித்திர மாற்றங்களைக் கடந்த ஒரு மாதமாகக் கண்டும் காணாதது போல் அவதானித்து வந்தாள் நிலோஜினி. பிந்திய இரவு நேரங்களில் நீண்ட நேரம் கைத்தொலைபேசியில் உரையாடுவாள். அம்மா நடமாடுவது தெரிந்தால் கதவை தாளிட்டுக்கொள்வாள். இது இறுதி வருடம் என்பதாலும் இறுதிப் பரீட்சை எழுதவேண்டி உள்ளதாலும் மகள் பதற்றமாக இருக் கிறாள் என நினைத்து ஆறுதல் அடைந்தாள். இருந்தும் பெற்ற தாயின் உள்ளம் கடந்த ஒரு மாதமாகப் பரிதவிப்பது தவிர்க்க முடியாததாக இருந்தது.

இன்று மீண்டும் பயணிக்கும் நாள். நேரம் நெருங்க நெருங்க பரபரப்பாகத் தொடங்கினாள் அனோஜா. ஓரிரு கைத்தொலைபேசி அழைப்புகளையும் தவறவிட்டிருந்தாள். அவள் வோஷ் றூம் சென்றபோது ஓர் அழைப்பு நீண்டு கொண்டு செல்லவே உள்ளே சென்று கைத்தொலைபேசியை எடுத்தாள், நிலோஜினி. அழைப்பு முடிவுற்ற போதும் திரையில் "மை லிட்டில் கார்ட்" என மிளிர்ந்தது.

அப்படியே வைத்துவிட்டு வெளியே வந்த நிலோஜினிக்கு "மை லிட்டில் கார்ட்" என்ற பெயர் சற்றுக் குழப்பத்தை ஏற்படுத்தியது. தனது மகள் யாரையாவது காதலிக்கிறாளா? அப்படியானால் "மை கார்ட்" என்றுதானே போட்டிருப்பாள். அது என்ன "மை லிட்டில் கார்ட்?". பயணம் புறப்படும் போது பிரச்சினைப் பட்டுக்கொள்ளக் கூடாது என எண்ணி பிறகு பார்ப்போம் என விட்டுவிட்டாள்.

விமான நிலையத்தை அடைந்து விடைபெறும் போது அம்மாவைக் கட்டியணைத்து முத்தமிடுவது வழக்கம். அன்றும் அவ்வாறுதான் அம்மாவை நோக்கி வந்து முத்தமிட்டாள், அனோஜா. ஆனாலும் அம்மா வின் கண்களை நேரடியாகப் பார்க்க முடியாமல் தடுமாறி னாள். இதனை அவதானித்த அவளது அம்மா "எங்கோ ஏதோ தப்பு நடக்கிறது என்பது மட்டும் தெளிவாத் தெரியுது" என எண்ணி வருந்தத் தொடங்கினாள்.

வீடு வந்து சேர்ந்த நிலோஜினி இரண்டு நாட்கள் இருப்புக் கொள்ளாது தவித்தாள். எதற்கும் தன் மகளுடன் படிக்கும் பக்கத்துக் கிராம வினோதினியின் அம்மாவைத் தொடர்பு கொண்டு வினோதியின் வட்ஸ்அப் இலக்கத்தைப் பெற்றுக் கொண்டாள். எப்படி யாவது தன் மகள் மீது ஏற்பட்ட சந்தேகத்தைத் துடைத் தெறிந்துவிட வேண்டுமெனத் துடியாய்த் துடித்தாள். அவசரப்பட்டு கணவனிடம் ஏதும் கூறிவிடக் கூடாது என்பதிலும் மிகக் கவனமாக இருந்தாள். தாமதியாது வினோதினியைத் தொடர்புகொண்டு தன் மகள் பற்றி விசாரிக்கவேண்டுமென எண்ணி அழைப்பை ஏற்படுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னாள். மூன்று முறை அழைத்தும் அழைப்புக்குப் பதில் கிடைக்கவில்லை. அழைப்பு இலக்கம் சரியா என ஒருமுறை பார்த்துவிட்டு மீண்டும் அழைத்தாள். நான்காவது முறையும் வெற்றி கிடைக்கவில்லை. ஏமாற்றத்தில் சோர்ந்து போய் சாய்வு நாற்காலியில் வந்து அமர்ந்தாள். கழுத்தில் தனது இடது புறங் கையை வைத்துப் பார்த்தாள். உடல் வேகமாகச் சூடாகிக் கொண்டிருப்பதை உணர முடிந்தது. உள்ளே சென்று இரண்டு பனடோல் மாத்திரைகளை வாயில் இட்டு நீரை அருந்திவிட்டு திரும்பியபோது கைத்தொலைபேசி அலறியது. கைகள் நடுங்க கைத்தொலைபேசியை எடுத்து ஹலோ என்றாள்.

"அன்ரி. நீங்க அனோஜாவோட அம்மாதானே. உங்கட நம்பர் எங்கிட்ட ஏற்கனவே இருக்கு. அவசரத் துக்குத் தேவை என்றா நல்லம் என்று அனோஜாதான் கொடுத்து வைச்சா. இப்ப எங்களுக்கு பாடம் நடக்கிற தாலே உடனே எடுக்க முடியல்ல" என்று கூறி என்ன விடயம் என வினவினாள்.

அனோஜா பற்றி நாசுக்காக வினவினாள் நிலோஜினி.

"சரிம்மா. பதற்றப்படாதீங்க. அனோஜா எனக்குப் பக்கத்தில்தான் இருக்கா. இப்ப பாடம் நடக்கிறதால கதைக்க முடியாது. அவ றூமுக்குச் சென்றதும் உங்களோட கதைக்கச் சொல்றேன். அனோ ஜாட விடயம் எல்லாம் உங்களுக்கு தெரியும் என்றுதான் நினைச்சேன். இதெல்லாம் இங்க சகஜம் அம்மா. சரிம்மா சரி. கவலப்படாதீங்க" - நமக்கேன் வீண் வம்பு என நினைத்து பட்டும் படாமலும் கூறிவிட்டு நழுவிக் கொண்டாள் வினோதினி.

அனோஜாவின் அழைப்பை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்த நிலோஜினிக்கு உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது. கடவுளே! நான் நினைப்பது போல் விபரீதமாக எதுவுமே நடந்துவிடக்கூடாது என எண்ணி இல்லாத தெய்வங்களை எல்லாம் வேண்டி நின்றாள். நா வறண்டது. சிறிது நீர் அருந்தினால் நலம் என எண்ணி எட்டிக் கால் வைத்தவளை கைத் தொலைபேசியின் அலறல் தடுத்து நிறுத்தியது.

விரைந்து சென்று, "அனோஜா, மகள் அனோஜா" என்றாள்.

"அம்மா, எப்படியாவது உன்னிட்ட சொல்லணும் என்றுதான் நினைத்து பல தடவை முயற்சி செய்தேன், ஆனா முடியல்ல, அம்மா. என்னை வெறுத் திடுவீங்க என்ற பயமா? அல்லது அப்பா என்மீது வைத் திருக்கிற பாசத்தின் வெளிப்பாடு நிலை குலைந்துவிடும் என்ற எண்ணமா? அல்லது உங்களப் போன்ற பழைய தலைமுறைக்கு இத எப்படிப் புரிய வைப்பது என்ற வருத்தமா? எனத் தெரியவில்ல. இந்த வருஷம் என் படிப்பு முடிஞ்சதும் லண்டனுக்குப் போகலாம் என்று எண்ணியிருக்கோம். ஏற்பாடு எல்லாவற்றையும் அவர் செய்திட்டிருக்கார். பிள்ளையக் கூட்டிச் செல்வதில்தான் சின்ன சிக்கல். இன்னும் அவக்குப் பிறப்புப் பதிவு வைக்கல்ல. எங்கட திருமணப் பதிவு கூட இன்னும் செய்யல்ல. எப்படியும் இம்முறை ஊருக்கு வரக் கிடைக்காது. அவரும் அவங்க அம்மா வீட்டுக்குப் போகமாட்டார். நாங்க நேரா லண்டன் போயிடுவோம்." - சர்வசாதாரணமாகச் சொல்லி முடித்தாள் அனோஜா.

அனோஜா சொல்லச் சொல்ல நிலோஜினிக்குக் குலை நடுக்கம் ஏற்பட்டது. அடி பாவி எங்களை ஏமாத்திப் போட்டியேடி என மனம் பதைபதைத்தவளாக தன் அடிவயிற்றை வலது கையால் அழுத்திப் பிடித்தவாறு தொடர்ந்தாள்.

"என்னடி சொல்ற. பெத்து வளத்து வெளி நாட்டுக்குப் படிக்க அனுப்பி நாட்டுக்குச் சேவை செய்ய ஒரு டொக்டரா வருவாய் என்று பார்த்தா, ரோஷம் மானம் மரியாதை எல்லாம் இழந்து யாரோ ஒரு தறுதலையை காதலிச்சு கல்யாணம் பண்ணினதும் இல்லாம குடும்பம் நடத்தி பிள்ளையும் பெத்துக் கிட்டியா? எப்பிடிடி உனக்கு இந்த மனசு வந்தது? நம்மட கலாச்சாரம் சம்பிரதாயங்கள் குடும்ப கௌரவம் எல்லாத் தையும் ஒரு நொடியில குழிதோண்டிப் புதைச்சிட்டயே. ஊரிலே எப்படி நாங்க தலைநிமிர்ந்து வாழுற? உங்க அப்பன் அறிஞ்சா உன்ன மட்டுமில்லடி என்னையும் ரெண்டு ரெண்டு துண்டா வெட்டிப் போட்டிட்டு அவரும் செத்திடுவார். யார் செய்த பாவமோ எங்கட தலையிலே மண்ணள்ளிப் போட்டிட்டயே. " - என செய்வதறியாது புலம்பினாள்.

"அம்மா! குடும்பம் நடத்தி பிள்ளை பெத்துக் கிறது என்பதெல்லாம் பழைய கதை. உங்களப் போல பழசுகள் எல்லாம் கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என்று அப்பா அம்மா காட்டுறவன் கட்டை என்றாலும் குட்டை என்றாலும் சொட்டை என்றாலும் கழுத்த நீட்டின காலம் மலை ஏறிப்போச்சு. இது நவீன காலம். நாங்க விரும்புறவனோடு கைகோர்த்துக் கொண்டு பழகி அவனைப் புரிந்து கொண்டு பிடிச்சா வாழ்ந்து பார்க்கிற காலம் இது. பிடிக்காட்டி இருவரும் டீசண்டா பிரிஞ்சிடுவோம். தப்பித் தவறி குழந்தை கிடைச்சாக் கூட அது தப்பில்லை. அப்படிப் பிறந்த குழந்தைகளை வளர்க்கிறதுக்கென்றே இங்கே நிறைய இடம் இருக்கு."

"இதைத்தான் அம்மா - லிவ் இன் ருகெதர் (Live in together) என்று சொல்வாங்க. சட்டபூர்வமாகத் திரு மணம் செய்துகொள்ளாமல் ஒன்றாக வாழ்வது. இரு வரும் தானாக முன்வந்து ஒன்றாக வாழ ஒப்புக் கொள்வது. இந்த உறவுகள் சட்ட அல்லது மத விதி முறை களால் நிர்வகிக்கப்படுவதில்லை. பரஸ்பர புரிதலை அடிப்படையாகக் கொண்டது. பெரும்பாலும் பொருந்தக்கூடிய தன்மையை ஆராய்வதற்கும் திருமணம் அல்லது நீண்டகால உறுதிப்பாட்டைத் தீர்மானிக்கு முன் ஆழமான தொடர்பை உருவாக்குவதற்கும் ஒரு வழியாகக் காணப்படுகிறது இந்த லிவ் இன் ருகெதர். விரும்பினா வாழ்ற இல்லாட்டி விட்டிட்டுப் போற"

அனோஜா கதைக்கக் கதைக்க நிலோஜினியில் தலை விறைக்கத் தொடங்கியது. கைகள் நடுங்கின. கால்கள் இருப்புக் கொள்ளாது தள்ளாடின. வியர்த்துக் கொட்டியது. கையிலிருந்த கைத்தொலைபேசி நழுவிக் கீழே விழுந்து வேறுவேறாகிய இரு பாகங்கள் எட்டாத தூரத்தே சிதறிக் கிடந்தன.

"அம்மா, அம்மா! டோன் வொறி. டேக் இட் ஈஸி" என்ற வார்த்தைகள் நிலோஜினியை விட்டும் தூர மாக, மிகத் தூரமாக விலகிச் சென்றுகொண்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்காணல்



அனுசியா சுந்தரலிங்கம்

சந்திப்பு - ஆர்.சுஜீவகுமார்

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து அயர்லாந்தில் உள்ள பெல்வாஸ்டில் வசிக்கும் அனுசியா சுந்தரலிங்கம் புலப்பெயர் தமிழ் கலைஞர் ஆவார். இவர் யாழ்ப்பாணத்தின் சுதுமலையில் 1967 இல் பிறந்தார். அனுசியா சுந்தரலிங்கம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியிலும், நுவரெலியா குட்ஸெப்பேட் கொன்வென்ரிலும் தனது பாடசாலைக் கல்வியை முடித்துள்ளார். தந்தையின் தொழில் காரணமாக நுவரெலியாவில் வசித்து வந்தவேளை 1983 இல் ஏற்பட்ட இனக்கலவரம் காரணமாக நுவரெலியாவிலிருந்து மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு திரும்பிய அவர் சிறிது காலம் சித்திரப் பாட ஆசிரியராகக் கடமையாற்றினார். பின்னர் 1989 இல் திருமணத் தொடர்பின் காரணமாக இலண்டனுக்கு நிரந்தரமாகப் புலம்பெயர்ந்தார். இளமைக் காலம் முழுவதும் சுய ஆர்வத்தின் பேரில் அம்பலவாணர் இராசையா, ராஜன் ஆசிரியர் ஆகியோரிடம் ஓவியம் கற்றுள்ள இவர் 1980களின் இறுதிப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் தனியாள், குழுக் கலைக் காட்சிகளில் தனது படைப்புகளைக் காட்சிப்படுத்தியுள்ளார். சுய ஆர்வத்தில் ஓவியத் துறையில் தொழிற்படத் தொடங்கிய இவர் புலம்பெயர்வின் பின்னர் முறை சார்ந்த ஓவியக் கல்வியை ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்திலும், உல்ஸ்ரர் பல்கலைக்கழகத்திலும் பெற்றுக்கொண்டார். தற்பொழுது லண்டனில் பல்வேறு பொது, தனியார் கலைக்கூடங்கள், கலைசார்ந்த அமைப்புகள் மற்றும் பல்வேறு செயற்றிட்டங்களுடனும் படைப்பாக்க ரீதியாக ஈடுபட்டுவருகிறார். முப்பது வருடத்துக்கு மேலாகக் கலை சார்ந்து துடிப்பாக இயங்கிவரும் அனுசியாவின் படைப்புகள் இயற்கை, புலப்பெயர்வு, இழந்த பண்பாடு மற்றும் அடையாளம் பற்றியதாகவே அமைகின்றன.

**1. உங்கள் கலைக்கு ஒரு ஆரம்ப புள்ளி என்று எதை கூறுவீர்கள்? எந்த சூழல்கள் அல்லது அனுபவங்கள் உங்களை ஒரு கலைஞராக மாறத் தூண்டின?**

நான் இலங்கையில் வாழ்ந்த காலகட்டங்களில் அதாவது என்னுடைய சிறுபராயத்தில் வரைதல் மற்றும் முப்பரிமான படைப்புக்களை உருவாக்குவதில் நான் கொண்ட ஆர்வமே என்னுடைய ஆரம்ப புள்ளியாக அமைந்தது. வெறுமனே வரைதலில் மட்டுமின்றி எதையும் ஆக்கபூர்வமாக செய்ய வேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வம் காட்டினேன். உதாரணமாக தையல், ஜவுளி, கைவினை, ஓவியங்கள் என்று அனைத்து விதமான கலையம்சங்களிலும் எனக்கு சிறுவயதிலிருந்தே ஆர்வமும் ஈடுபாடும் எவ்வித தூண்டலும் இன்றி இயற்கையாகவே காணப்பட்டது. பள்ளி பருவத்திலும் எனக்கு சித்திரம் மீதான ஆர்வம் குறைவுபடவில்லை. ஆகையால் தொடர்ச்சியாக வரைதல் பயிற்சியில் நேரம் கழித்தேன். இதனால் என்னுடைய சுயத்திறமையை அறிந்து பெற்றோரும் என்னை ஊக்குவித்தார்கள். இதனால் வாய்ப்புக்களும் சந்தர்ப்பங்களும் குறைவாக காணப்பட்ட கலாச்சார சூழலிலும் கூட என்னால் வாய்ப்பையும் அதனை அடையக்கூடிய சந்தர்ப்ப சூழ்நிலையும் உருவாக்கிக் கொள்ள முடிந்தது.

சாதாரண தரக் கல்வி நிறைவடைந்ததும் சித்திரம் கற்க ஆசைப்பட்டேன். எனினும் அக்கால சூழலில் நிலவிய அரசியல் ஸ்திரமற்ற தன்மையால் நான் ஒரு பெண் என்ற நிலையில் என்னால் சித்திரக் கல்வியை தொடர முடியவில்லை. பின்னர் என்னுடைய தந்தை உயர்தர கல்வியில் சித்திரத்தை ஒரு பாடமாக கற்கலாம் என்று வழிப்படுத்தினார். எனினும் அதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை. பின்பு பெற்றோர்களின் உதவியால் அம்பலவாணர் இராசையா, ராஜன் ஆசிரியர் போன்ற பயிற்றுவிப்பாளர்களுடன் இணைந்து பல சித்திரப் படங்களை வரைந்தேன். அவ்வாறு சேகரித்து என்னுடைய படைப்புக்களை கொண்டு 1988 ம் ஆண்டு சுண்டுக்குளி பெண்கள் கல்லூரியில் இடம்பெற்ற கண்காட்சியில் காட்சிப்படுத்தினேன். அது மிகவும் வெற்றிகரமாக அமைந்ததோடு எனக்கு மிகுந்த சாதகமான தன்மையை ஏற்படுத்தி மேலும் என்னை வலுவூட்டியது.

**2. அச்சுக்கலையில் தொடங்கி, கலப்பு ஊடகம், சிற்பம், ஸ்தாபனக்கலை என பல துறைகளுக்கு உங்கள் கலைப் பயணம் எப்படி விரிவடைந்தது? ஒரு கருத்தை வெளிப்படுத்த நீங்கள் ஒரு குறிப்பிட்ட ஊடகத்தை தேர்ந்தெடுப்பது எப்படி?**

என்னுடைய படைப்புக்களில் ஊடகம் மிகவும் முக்கியமானது. எனக்கு ஒரே ஊடகத்தை பயன்படுத்தி செயற்படுவதில் விருப்பமில்லை. காரணம் அது என் இயற்கை குணத்திற்கு முற்றிலும் பொருந்தாமையே ஆகும். சிறுவயதிலிருந்தே ஒரு படைப்பு பணிகளை செய்யும் போது வெவவேறு ஊடகங்களை பயன்படுத்துவது என்னுடைய வழக்கமாகும். நான் ஒரு விடயத்தை பல பார்வையில் நோக்குகிறேன். சில சமயங்களில் என்னுடைய படைப்புக்கள், இரு பரிமாணம், முப்பரிமாணம் என அமையும். தற்போது ஆற்றுகை செய்வதையும் ஆரம்பித்துள்ளேன். நான் இரு பரிமாணமாக செய்ய ஆரம்பிக்கும் பணிகளை பெரும்பாலும் என் முயற்சி இன்றியே முப்பரிமாணத்தில் நிறைவு செய்வேன். சில நேரம் ஒரு இடம் எவ்வாறான சூழ்நிலைக்கு உட்படும் எனவும் அதேசமயம் கண்காட்சிக்கு எவ்வாறு சூழ்நிலை பொருத்தமாக அமையும் என்பதையும் கவனத்தில் கொள்கிறேன். சில சமயங்களில் புகைப்படங்களை எடுத்து அவற்றை ஓவியங்களாக படைப்பதும் உண்டு. இவ்வாறான ஆக்கபூர்வமான திறமைகள் என்னுள் இயற்கையாகவே காணப்படுகின்றதாக நான் உணர்கின்றேன். நான் எதையும் இவ்வாறு தான் செய்ய வேண்டும் என்ற திட்டம் வகுத்து செய்வதில்லை எனினும் அவை இயற்கையாகவே கலைநயம் பெற்ற படைப்புக்களாகவே உருவாகின்றன. எங்களுடைய கலாச்சாரத்தில் கைவினை சார் கைத்தொழில்களில் அதிகமாக ஈடுபடுவதனை அவதானிக்கலாம். இவற்றின் செல்வாக்கு எனக்குள் இயங்குகிறது என நான் நினைக்கின்றேன். நான் சிறுவயதிலிருந்தே பனை ஓலையால் செய்யும் வேலைப்பாடுகளை பார்த்துள்ளேன். அவ் வேளை பாடுகளை செய்த அனுபவமும் எனக்கு உண்டு.

அதேவேளை யாழ்ப்பாணம், மலையகம் மற்றும் அயர்லாந்து என அனைத்து பிரதேசங்களுக்கும் உரித்தான கலாச்சாரம் என்னிடத்தில் செல்வாக்கு செலுத்துகின்றன. நான் அயர்லாந்தில் மூன்று பணிக்கூடங்களில் (Studio) வேலை செய்கின்றேன், வீட்டில் பல வேலைகளில் ஈடுபடுகின்றேன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளி சுற்றுப்புற சூழலில் பணிகளில் ஈடுபடுகின்றேன். இதன் போது அனைத்து இடங்களிலும் பல்வேறுபட்ட ஊடகங்களை சேகரிப்பதற்கு என்னால் இயலுமா கின்றது. நான் ஒரு படைப்பில் பணியாற்றும் போது இவ் ஊடகத்தை எங்கு பயன்படுத்தலாம் என சிந்திப்பேன். நான் இலங்கைக்கு வரும்போது இயற்கை ஊடகங் களை பயன்படுத்துவது முக்கியமானதாகும். ஏனென் றால் நான் பெரிய நிலப்பரப்பில் வாழ்ந்தேன் அதில் எத்தனையோ வேர் மரங்கள் காணப்படுகின்றன. அவ் வாறே இலங்கையில் வசிக்கும் போது பனை பொருட் கள், தென்னையோலையை பயன்படுத்தி செய்யும் படைப்புக்கள் போன்றவற்றை செய்திருக்கிறேன்.எனவே இவை அனைத்தையுமே தற்போது நான் செய்யும் வேலைகளுக்கு பயன்படுத்துகின்றேன். எனவே எனது எல்லா படைப்புக்களிலும் ஊடகத்தினை மிக முக்கிய மான விடயமாகவே நான் கருதுகின்றேன்.

**3. உங்கள் படைப்புக்கான வெவ்வேறு பொருட்களை தேர்ந் தெடுக்கும் போது அந்த பொருட்களின் பின்னணி, கலாச்சார முக்கியத்துவம் அல்லது குறியீட்டு அர்த்தங்கள் பற்றி நீங்கள் ஆய்வு செய்கிறீர்களா? அவை உங்களது படைப்போடு எவ்வாறு தொடர்புறுகின்றது?**

ஆம். நான் புடவைகளை எடுக்கும் போது எங்களுடைய கலாசாரம் சார்ந்த மக்களிடம் எமக்கான கலாசாரம் மற்றும் அடையாளம் சார்ந்த விடயங்களை கேட்பதுண்டு. நான் வாங்கியுள்ள ஒவ்வொரு புடவை களுக்கு பின்னாலும் எத்தனையோ கதைகள் உண்டு. ஒரு நண்பர் எனக்கு ஒரு புடவையை வழங்கி அதனை உங்களுடைய படைப்பிற்கு பயன்படுத்திக் கொள்ளு மாறு கூறினார். இவ்வாறான சேகரிப்புகளின் பிறகு தான் எங்களுடைய கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் வகையில் புடைவை செயல் திட்டம் ஒன்றை செய்தேன். தற் போது லினன் நார்களை பயன்படுத்தி பல வேலைகளையும் செய்கிறேன். சுமார் 15 வருடங்களுக்கு முன்பு பாட சாலை செயற்திட்டமொன்றில் நார்களை பயன்படுத்தி வேலைகளை செய்தேன். இதற்காக ஆய்வுகளை செய்ய வேண்டி இருந்தது. எனினும் எனது ஊரில் வேலைகளில் ஈடுபடும்போது ஆய்வுகளை செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படுவதில்லை. காரணம் அது எங்கள் பகுதியாகும். எங்களுடைய ஓலைநார், பனைநார், வாலைநார், மூங்கில் என்பவற்றை பயன்படுத்தி படைப்புகளை உரு வாக்கும் போது வலுவான ஊடகங்களை அதிகமாக பயன்படுத்துகின்றேன். அதாவது ஊடகத்திற்கு பின் னால் பொதிந்த கலாசாரம் மற்றும் அடையாளத் தின் முக்கியத்துவத்தை ஆராய்ந்து பின்னரே படைப்பினுள் பயன்படுத்துவேன். இது என்னுடைய படைப்பை மேலும் வலுப்படுத் தும் என்பதில் எனக்கு மிகுந்த நம்பிக்கை.

ஆலமரத்தின் வேர்களை பார்த்தோமானால், ஒருவகையில் தலைமயிர் போன்றும் மற்றும் ஒரு வகையில் வேர் போன்றும் காணப்படும். ஆலமரம் என்னுடைய படைப்புகளில் பிரதான விடயப் பொருளாக செயற்படுகின்றது. நான் ஒரு பத்து வருடத்திற்கு முன்பு ஆலமரத்தை வைத்து ஒரு வேலைபாட்டை செய்தேன். அது ஒரு அறையில் டெஸ்ட்லைன் பீஸாக செய்தேன். என்னுடைய படைப்புகளில் செல்வாக்கு செலுத்திய ஆலமரத்துக்கு பின்னால் சுவாரஸ்யமான கதைகள் பொதிந்து உள்ளது. நாங்கள் சிறுவயதில் வளரும் போது எங்களுடைய வீட்டில் ஒரு ஆலமரம் இருந்தது. நாங்கள் ஒவ்வொரு நாளும் பார்த்து வந்த ஆலமரம் அது. நேரடியாகவோ, மறைமுகமாகவோ அது என்னுடைய படைப்புகளில் செல்வாக்கு செலுத்துகிறது என நான் நினைக்கின்றேன். ஆனால் இப்போது அந்த ஆலமரம் இல்லை. என்னுடைய படைப்புகளில் ஆலமரம் மிகுந்த செல்வாக்கினை செலுத்தி உள்ளது எனவே நான் கருதுகிறேன்.

**4. இலங்கையிலிருந்து புலப்பெயர்வு உங்கள் கலைப் படைப்பு களில் என்ன வகையான மாற்றங்களை ஏற்படுத்தியது? இந்த புலப் பெயர்வு உங்கள் கலைக்கு ஒரு புதிய அத்தியாயத்தை திறந்ததா?**

நான் இலங்கையில் இருந்தபோது நிறை வேறாத ஆசை இடம்பெயர்வினால் நிறைவேறியது எனலாம். அதாவது சித்திரம் பயில இலங்கையில் இருந்த போது வாய்ப்பு கிடைக்கவில்லை எனினும் இடம் பெயர்வின் பின் எனக்கான களத்தை அமைத்துக் கொண்டேன். நான் இடம்பெயர்ந்தது கல்வி செயற்பாடு களை தொடர்வதற்கில்லை என்ற போதிலும் கல்வியில் ஈடுபட எனக்கு அமைந்த வாய்ப்பை அடித்தளமாக பயன் படுத்தி பட்டப்படிப்பை தொடர்ந்தேன். பட்டப்படிப்பை தொடரும்போதே அச்சகம்(அச்சு நிலையம்) ஒன்றில் இணைந்து செயல்பட்டதால் சொந்த ஆக்கபூர்வமான படைப்புக்களை உருவாக்குவதற்கான சுதந்திரம் எனக்கு கிடைத்தது. இதனால் என் ஆக்கப்படைப்புகளை மேலும் வளர்த்துக் கொண்டேன்.

அச்சமுகத்தோடு இணைந்து செயல்பாடுகளை மேற்கொண்டமையால் அனைத்து வயது பிரிவின ரோடும் இணைந்து செயல்படும் சந்தர்ப்பம் கிடைத்தது. இதனால் அவர்களுடைய செல்வாக்கு என்னிடமும் என்னுடைய செல்வாக்கு அவர்களிடமும் இணைந் ததை பார்க்கலாம். தொடர்ந்து நான் எனது தனி சிந்தனையின் அடிப்படையிலேயே செயல்பட்டேன். குறிப்பாக ஒருவகையான தலைப்புகளை மாத்திரம் தெரிவு செய்யவில்லை. ஒரு ஊடகத்தை மாத்திரம் பயன்படுத்தவில்லை. என்னுடைய படைப்பில் ஊடகம், கருப்பொருள் என்பவற்றை முக்கியமாக கொண்டு தொழில் பட்டேன். கருப்பொருளுக்கு உள்ள முக்கியத துவத்தால் “படகை” பார்த்து அதனை எவ்வாறு படைப்புக்குள் கொண்டு வரலாம் என சிந்திப்பேன். என்னுடைய படைப்பின் கருப்பொருளாக இயற்கை காணப்பட்டது. எனினும் “தப்பி ஓடு” என்ற படைப்பில் நான் இலங்கையில் வாழ்ந்த காலங்களில் உள்நாட்டு யுத்தத்தில் எவ்வாறு பாதிக்கப்பட்டோம், வீட்டை விட்டு எவ்வாறு ஓடினோம். போன்ற விடயங்களை கருப் பொருளாகக் கொண்டு படைத்திருந்தேன். வேறு இடத்தில் சென்று எமது கலாசாரம், அடையாளம் என்ப வற்றை வெளிப்படுத்த தொடங்கும் போது அது புது விதமான அடையாளத் தை பெறுகிறது.

எனது வாழ்வில் அடையாளம் என்றால் என்ன வென்று தெரியாத சூழ்நிலையில் உள்ளேன். இம்முறை நான் இலங் கைக்கு வந்த போது சிலர் என்னிடம் நீங்கள் எங்கிருந்து வந்துள்ளீர்கள்? என்று கேட்டனர். அக் கேள்விக்கு நான் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்திருக் கிறேன். என பதிலளித்தாலும் மீண்டும் நீங்கள் எந்த நாட்டிலிருந்து வந்திருக்கிறீர்கள்? என்ற கேள்வியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினவப்படுகிறது. அதேசமயம் நான் அயர்லாந்து சென்றால் அங்குள்ளவர்களும் இவர்களை போன்று நீங்கள் எந்த தேசத்து நபர்? என கேள்வி எழுப்புகின்றனர். என்னுடைய அடையாளம் எதுவென்று தெரியவில்லை. எனக்கான அடையாளத்தை நானே உருவாக்க வேண்டும். இடம் பெயர்ந்த நாடான அயர்லாந்தில் எமக்கான தனிப்பட்ட வாழ்க்கை முறையினை உருவாக்கியுள்ளோம். இதன் செல்வாக்கு என் படைப்பிலும் பல மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. குறிப்பாக புதியதோர் அத்தியாயத்தையே திறந்து வைத்தது என கூறினாலும் அது மிகையாகாது. என் புலம்பெயர்வுக்கான காரணத்தோடு எனக்கு நெருங்கிய தொடர்பு காணப்பட்ட போதிலும் அதனைப் பற்றி குறைவாகவே கதைத்துள்ளேன். எனினும் என்னுடைய அரசியல் நிலைமை குறிப்பாக உள்நாட்டு யுத்தம், எங்களுடைய கலாசாரம், இழந்த அடையாளம், இழந்த கலாசாரம் என்னுள் மாற்றத்தை ஏற்படுத்தியதோடு புதிய அத்தியாயத்தை நோக்கி நகர்த்தியது எனலாம். நான் உள்நாட்டு யுத்தத்தின் நடுப்பகுதியிலேயே நாட்டைவிட்டு இடம் பெயர்ந்து விட்டேன். அதன் பிறகு போர் மிகவும் கடுமையான சூழ்நிலையை நோக்கி நகர்ந்தது. நாங்கள் இலங்கையில் இருந்தபோது யுத்தத்தால் வீட்டை விட்டு ஓடியமை, சில நேரம் காட்டில் மறைந்து வாழ்ந்தது, போர் தற்காப்பு தளஞ்சியினுள் இருக்கும் போது குண்டு வெடிப்பின் சத்தம் கேட்டு பயந்து அழுதமை, இலங்கை ராணுவம் வரும்போது பயத்தில் வாழ்ந்தது, சோதனைச் சாவடி இவை அனைத்தும் எங்களுக்கு பயத்தை அளித்தது. இவ் அனைத்து அனுபவங்களையும் நான் புலம்பெயர்ந்ததன் பின் எவ்வாறு என் படைப்பினுள் உற்செழுத்தலாம் என சிந்தித்தேன். யுத்தத்தின் இடையில் வெளியேறிய ஒருவர் என்ற வகையில் எனது அனுபவத்தை எவ்வாறு வெளிப்படுத்துவது பொருத்தமாக அமையும் என்பது எனது அடுத்த கட்ட சிந்தனையாகும். அரசியல் நிலவரத்தை பற்றி பேச முடியாது என்பதே அப்பொழுது என்னுடைய எண்ணமாக இருந்தது. எனினும் நான் இப்போது என்னுடைய நிலைமையினையே படைப்புக்களில் வெளிப்படுத்துகின்றேன். இந்நிலைமை எனக்கானது மட்டுமல்ல, எங்கள் ஊர் மக்களுக்குமானது. இத்தோடு நின்று விடவில்லை இதே நிலைமை எங்களுடைய கலாச்சாரத்தை சேர்ந்த மக்களுக்கு உலகில் ஏதோ ஒரு மூலையில் ஏதோ ஒரு வகையில் இடம் பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றது. அந்த வகையில் நான் என் படைப்புகளில் ஏதோ ஒரு கருத்துள்ள கதையை சொல்கிறேன் என்பதில் உறுதி.

**5. அடையாளம், ஞாபகம், புலப்பெயர்வு, இடப்பெயர்வு போன்ற விடயங்கள் உங்கள் கலைப் பயணத்தின் தொடக்கத்தில் இருந்தே முக்கியத்துவம் வாய்ந்ததா? இந்த கருப்பொருள்களை நீங்கள் அணுகும் விதத்தில் காலப்போக்கில் என்ன மாற்றங்கள் வந்துள்ளன?**

காலப்போக்கில் வந்த மாற்றம் இப்போது என்னுள் கதைகளாக மாற்றமடைந்து செல்வாக்கு செலுத்தியமையால் அவற்றை படைப்புக்களாக வெளிப்படுத்துகின்றேன். நான் தற்போது அடையாளம், நினைவு, புலம்பெயர்வு, இடப்பெயர்வு போன்ற கருப்பொருட்களை அடிப்படையாகக் கொண்டேன் படைப்புக்களை படைக்கின்றேன். என்னுடைய முன்னைய படைப்புகள் அனைத்தும் ஒரு கண்காட்சியில் காட்சிப்படுத்துவதை நோக்கமாக கொண்டே படைக்கப்பட்டது. முன்னர் நான் அந்த வலியை அனுபவப்படவில்லையென்றே எண்ணினேன். ஆனால் இப்போது நினைத்துப் பார்க்கும்போது தான் நானும் ஏதோ ஒரு வகையில் அனுபவப்பட்டுள்ளேன் என்பதை உணர்கிறேன். தற்போது என்னுடைய படைப்புக்கள் அனைத்தும் என் வாழ்க்கை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டே உருவாக்குகின்றேன். உதாரணமாக கடந்த வருடம் மற்றும் இந்த வருடம் உருவாக்கப்பட்ட மற்றும் உருவாக்கப்படுகின்ற அனைத்து படைப்புக்களும் என் அனுபவங்களையும் வாழ்க்கை கதையினையும் வெளியுலகிற்கு கொண்டு வரும் நோக்கிலேயே படைக்கப்பட்டது. நான் ஆரம்பத்தில் செய்த படைப்புக்களும் தொடர்ந்தும் வளர்ச்சி அடைந்து கொண்டுதான் செல்கின்றது. அவற்றின் செல்வாக்கு இன்றும் காணப்படுகின்றது. என்னுடைய அனைத்து விதமான படைப்புகளில் இவற்றின் செல்வாக்கு இன்றியமையாததாக விளங்குகின்றது. நான் புதிதாக எதுவும் படைக்கவில்லை. இதுவரை படைத்த படைப்புகளின் பாணியை இப்போது வலுவாக கையாளுகின்றேன்.

**6. உங்கள் படைப்புக்களில் தப்பி ஓடு மற்றும் Rip it up and start again, வேர்களும் தடங்களும் புலப்பெயர்வூட்டும் ஞாபகத்தினூடும் ஓர் பயணம் போன்ற கண்காட்சிகள் மூலம், நீங்கள் இந்த கருப்பொருள்களை எப்படி மேலும் ஆழமாக ஆராய்ந்தீர்கள்?**

நான் இப்படைப்புகளை தனிப்பட்ட அனுபவக் கதையினை மாத்திரம் பயன்படுத்தி படைக்கவில்லை. உள்நாட்டு யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுடனும் அச் சுழலில் சிக்குண்டு தவித்த அனைவருடனும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டேன். அதனூடாக அவர்களுடன் இடம்பெற்ற தொடர்பாடலின் வழியில் பல்வேறு விடயங்களை என்னால் பெற்றுக்கொள்ள முடிந்தது. அவர்கள் அனைவரும் தங்களது அனுபவங்களையும், வலிகளையும் என்னுடன் பகிர்ந்து கொண்டார்கள். உதாரணமாக ஒருவர் தனது 8 வயதில் நடந்த சம்பவங்களையும் என்னிடம் தெரிவித்திருந்தார். மேலும் “தப்பி ஓடு” என்ற படைப்பினை உருவாக்கும் போது என்னுடைய சம வயதினரோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவர்களது அனுபவங்களை அறிந்து கொண்டேன். அவர்கள் கூறிய கதைகளிலும் அனுபவங்களிலும் அவற்றில் பொதிந்திருந்த உணர்வுகள் மற்றும் என்னுடைய வாழ்க்கை அனுபவம் இவை அனைத்தும் என் மனதில் நிலை கொண்டு விட்டது.

இவற்றை அடிப்படையாகக் கொண்டு “தப்பி ஓடு” என்றும் கருப்பொருளில் இரண்டு படைப்புக்களை செய்தேன். முதலாவது ஆற்றுகையும் இரண்டாவது ஸ்தாபனக் கலையாகவும் அமைந்தது. நான் இவை குறித்து யுத்தத்தால் பாதிக்கப்பட்ட உலகம் முழுவதும் வாழும் மக்களோடு தொடர்புகளை மேற்கொண்டது மட்டுமன்றி அவர்களுடைய கால்தடங்களை புகைப்படங்களாக அவர்களின் உதவியால் கேட்டுப் பெற்றுக் கொண்டேன். அவற்றை பிரதி செய்து அதனை ஸ்தாபனக்கலையாக உருவாக்கினேன். அதேசமயம் ஒரு ஆற்றுகை கலையாகவும் படைத்தேன். யுத்த காலங்களில் மக்கள் தமது நாட்டை விட்டும், சொந்த இடங்களை விட்டும் தப்பி சென்றபோது அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறு எவ்விதமான பொருட்களை சுமந்து சென்றார்கள் என்பதனை கொண்டு, ஒரு பயணப்பெட்டியினை சுமந்து நிலத்தின் மீது எவ் வாறு ஓடினார்கள் என்பதனை கால் தடங்கலை வைத்து உருவாக்கிக் காட்டினேன். நான் யாழ்ப்பாண பல்கலைக்கழகத் திற் கு வருகை தந்த போது இப்படைப்புகளில் இருந்தே படத்தொகுப்பு செய்வதற்கான சில படைப்புக்களை கொண்டு வந்தேன். எனவே ஒரு படைப்பை செய்து முடிப்பதோடு விட்டு விடாமல் அவற்றை மென்மேலும் எவ்வாறு பயனுள்ளதாக மாற்றலாம் என்ற ஆராய்ச்சியில் என் ஆர்வம் பெருகியது. மேலும் "வேர்களும் புலம்பெயர்வும்" என்றும் கண்காட்சியில் காட்சிப்படுத்திய படகுகளின் படைப்புக்களின் மூலம் தனி மற்றும் கூட்டு நினைவுகளின் பிணைப்பினை தெளிவாக வெளிப்படுத்தி உள்ளேன். அத்தோடு இயற்கையான ஊடகத்தை கொண்டு பனையோலையில் படைப்புக்களை செய்யும் போது என்னுடைய வேர், அடையாளம், அனுபவப்பட்ட அனைவரது சூழ்நிலையையும் கருத்தில் கொண்டே உருவாக்கியிருந்தேன்.



படம். 01 : Thappi odu (Flee), Installation, 2025. மூலம்: Ulster Museum.

**7. ஒரு கலைஞராக, தற்போதைய சமூக, அரசியல் நிகழ்வுகள் உங்கள் கலை பார்வையை எப்படி பாதிக்கின்றன? குறிப்பாக உலகளாவிய புலப்பெயர்வு நெருக்கடிகள் உங்கள் படைப்புகளில் எவ்வாறு எதிரொலிக்கின்றன?**

நான் என்னுடைய படைப்புக்களில் எனது நோக்கம் எதிரொலிக்கும் வண்ணமே படைப்புகளை பிரசவிக்கின்றேன். அவ்வாறு படைத்த படைப்புகளில், படைப்புக்களின் நோக்கம் வலுவாக எதிரொலிக்கின்றன என்றே நான் கூறுவேன். தற்போது என்னுடைய படைப்புக்கள் சர்வதேச அரசியலை பற்றியதாகவே உள்ளது. இலங்கையில் தற்போதைய அரசியல் மற்றும் சமூகம் சார்ந்த விடயங்களில் காணப்படும் தன்மையில் எவ்வித ஈடுபாடும் தற்போது இல்லை. எவ்வாறாயினும் நான் தற்கால நிகழ்வை பற்றி கதைக்கின்றேனா? அல்லது ஆரம்ப கால நிகழ்வினை விவரிக்கின்றேனா? என்பது ஒரு தனி பொருட்கள் அல்ல காரணம் நிகழ்காலத்திலும் ஆரம்ப கால பிரச்சனைகள் எல்லோருடைய வாழ்க்கையில் இடம் பெற்று கொண்டு தான் உள்ளது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. நானும் அவ்வாறே எண்ணுகிறேன். எங்களுடைய கலாசாரமும் எங்களுடைய அடையாளமும் ஒரு நிலையான தன்மையினை கொண்டு அமையவில்லை. இத்தகைய செல்வாக்கு என்னுடைய படைப்பில் எதிரொலிக்கின்றன.

**8. நீங்கள் தொடர்ந்தும் கலைக்கூடங்களுடன் சேர்ந்து பணியாற்றுகிறீர்கள் அது கலைப்படைப்புக்கு எவ்வாறு புதிய பரிமாணங்களை சேர்க் கிறது?**

கலைக்கூடங்கள் என்றால் என்னை பொறுத்த வரையில் சவாலாகவே காணப்பட்டது. ஏனென்றால் எழுத்தாளுகையாளர்களுடன் வேலை செய்யும் போது ஒரு சவாலை எதிர்கொள்கிறோம். நான் எத்தனையோ படைப்புக்களை காட்சிகளை செய்துள்ளேன். கலைக்கூடம் என்னுடைய படைப்புகளை சுலபமாக அனுமதிக்கிறது. இருப்பினும் எழுத்தாளுகையோடு வேலை செய்து கலைக்கூடங்களில் காட்சிக்கு கொண்டு செல்கின்ற போது அதனை வித்தியாசமானதாக உணர்கிறேன். அது என்னை மாற்றத்திற்கு உள்ளாக்குகிறது. ஆதலால் நானே என்னுடைய படைப்புக்களை சவாலுக்கு உட்படுத்துகின்றேன். நான் படைப்பை செய்யும் போது கலைக்கூடத்தின் வெளிக்காக (space) செய்தேன். சில நேரம் படைப்பை செய்துவிட்டு அது கலைக்கூட வெளிக்கு ஏற்றார் போல சூழ்நிலவரப்படுதததுகின்றேன். இன்னும் ஒரு பக்கம் நிதி உதவிகளின் கீழ் வேலை செய்யும் போது அது ஒரு சவாலாக அமைகிறது. இங்கு கண்காட்சிக்காக முன்மொழிவுகள் (proposal) மேற கொள்ள வேண்டும். அதே சமயம் அவர்களின் கீழ் செயல்படுவதால் எங்களுடைய படைப்பை அவர்களுக்கு ஏற்றார் போல செய்ய வேண்டி இருக்கும். அதே நேரம் செய்த படைப்பை திரும்ப செய்ய இயலாது. காரணம் அவ்வாறு செய்யும் சந்தர்ப்பங்களில் நிதி உதவி கிடைக்காது. ஆக மொத்தத்தில் கலைக்கூடங்களுடன், நிறுவனங்கள், நிதி உதவிகள் கீழ் வேலை செய்யும் போது பல்வேறு சவால்களை எதிர்கொள்கிறோம்.

**9. உங்கள் கலைப்படைப்புகள் பார்வையாளர்களுக்கு புதிய புரிதல்களை அல்லது கேள்விகளை உருவாக்கின்றனவா?**

ஆம். என்னுடைய படைப்புகளை காட்சிப் படுத்திய அனைத்து சந்தர்ப்பங்களிலும் அதனை பார்வையிடும் பார்வையாளர்களிடமிருந்து சாதகமான கருத்துக்களையே இதுவரை பெற்றுள்ளேன். இன்னும் சிலர் என்னுடைய படைப்புக்களை பார்வையிட்டு உணர்ச்சி மிகுதியால் உணர்வினை அழுகையாகவும் வெளிப்படுத்தி உள்ளார்கள். சமீபத்தில் ஜப்பானில் இடம் பெற்ற கலை நிகழ்வு ஒன்றிற்கு என்னுடைய படைப்புக்களை அனுப்பி இருந்தேன். அதனை பார்வையிட்ட ஒருவரிடம் இருந்து எனக்கு ஒரு குறுஞ்செய்தியும் கிடைத்திருந்தது. அவ்வாறே "தப்பி ஓடு" என்ற படைப்பினை பார்வையிட்ட மூவர் உங்கள் படைப்புக்களின் வழியை உணர்வு ரீதியாக அறிய முடிகிறது என கூறினார்கள். என் படைப்பினை பார்வையிடும் ஒவ்வொருவரும் இப்படைப்பினுடைய ஏதோ ஒரு படிப்பினையையோ அனுபவத்தினையோ அல்லது உணர்வினையோ பெற்றுக் கொள்கின்றார்கள்.

**10. ஆரம்பம் முதல் இன்று வரை உங்கள் படைப்புகள் எதை வெவ் வேறு காலகட்டத்தில் கதைத்துள்ளன என கூற முடியுமா?**

நான் அதிகளவான படைப்புகளை இயற்கை அடிப்படையாகக் கொண்டே செய்தேன். 1995 ஆம் ஆண்டு இலங்கைக்கு பயணித்த எனது பயண அனுபவத்தையும் ஒரு படைப்பாக உருவாக்கினேன். அதனைத் தொடர்ந்து கலாச்சாரத்தை வைத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு படைப்புகளையும் படைத்திருந்தேன். அத்தோடு கிராமிய வாழ்க்கை சார்ந்த படைப்புக்களையும் செய்துள்ளேன். முன்னர் உருவகம் சார்ந்த படைப்புக்களையும் படைத்துள்ளேன். தற்போது அதிகளவாக அரூபமான படைப்புகளையே உருவாக்கி வருகிறேன். நீங்கள் அறிந்தது போன்று படகு தொடரை செய்யும் போது அரூபமாகவே உருவாக்கி இருந்தேன். இருப்பினும் அதனை பார்க்கும்போது அதனை படகு என்று அடையாளப்படுத்திக் கொள்ள முடியும். எனினும் அது வெறுமனே யதார்த்தமான படகின் உருவம் அல்ல. நான் அந்த படத்தின் மூலம் உள்நாட்டு யுத்தத்தால் ஏற்பட்ட அனைத்து விதமான பிரச்சினைகளையும் வலிகளையும் பற்றிய விபரிக்கின்றேன். இவ்வாறு காணப்பட்டாலும் எனது ஆரம்பகால படைப்புகள் இயற்கையை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. அதனைப் போன்றே கலாச்சாரத்தை மையப்படுத்தியும் படைப்புகளை படைத்தேன். பின்பு இயற்கை ஓவியங்களில் போராட்டம், வலி போன்றவற்றை உணர்ந்து படைப்புகளை உருவாக்கினேன். மேலும் வேர்களை வைத்தும் வேலைபாடுகளை செய்துள்ளேன். இவை தற்போது அதிகளவான வளர்ச்சியை காட்டுகிறது. மேலும் எனது பயண அனுபவம் மற்றும் உலக மக்களின் பயண அனுபவங்கள் போன்றவற்றைக் கொண்டு படைப்புகளை ஆற்றும் தன்மையை கொண்டுள்ளேன்.

**11. இறுதியாக நீங்கள் இலங்கையின் பத்து படைப்பாளிகளுடன் இணைந்து A-Z வரையான புத்தக கலை வடிவங்களில் செய்துள்ளீர்கள் அதைப் பற்றி குறிப்பிட முடியுமா?**

என்னுடைய A-Z படைப்பின் தொடக்க அமைப்பானது நிறைவு கட்டத்தில் இருந்து முற்றிலும் மாற்றமானதொரு அமைப்பை கொண்டே விளங்குகின்றது. A-Z புத்தகத்தை உருவாக்க ஆரம்பித்த தொடக்க காலத்தில் எமது பிரச்சினைகளை வைத்து படைப்பை உருவாக்குமாறு கூறினர். என்னிடம் அரூபமான படைப்புகளையே கேட்டனர். நான் என்னுடைய வரலாற்றை அடிப்படையாகக் கொண்டே படைப்புகளை செய்தேன். அதே சமயம் கோடுகளை வைத்துக்கொண்டு செய்த வேலைகள் என அனைத்தும் சொற்களோடு இணைக்கப்பட்டது. அதனை போன்றே மும் மொழிகளிலும் வேலைகளைச் செய்தேன்.

**12. A-Z புத்தகத்தில் அதிகம் அரூபமாக உள்ளன. உங்களுடைய இந்த அரூபத்தனத்திற்கு பின்னால் காரணங்கள் ஏதேனும் உள்ளதா?**

ஆம் காரணம் இருக்கின்றது. என்னுடைய இந்தப் படைப்புகளை பார்த்தால் உள்நாட்டு யுத்தத்தின் விளைவினை ஏதோ ஒரு வகையில் உள்ளடக்கியுள்ளேன். என்பதனை அறிந்து கொள்ள முடியும். யுதத்தின் போது செல் வந்து விழுந்தால் சிதறி கிடக்கும். அதேநேரம் நான் எதிர்கொண்ட அனுபவங்கள், நினைவுகள், என்னுடைய அடையாளங்களை பிரதிபலிப்பதில் கவனம் செலுத்தினேன். நான் அந்தப் படைப்புகள் படைத்தமைக்கு ஒரு அர்த்தம் உள்ளது. Every Image Has a Meaning. என்னுடைய ஒவ்வொரு படைப்புக்களும் ஒவ்வொரு கருத்துக்களை கொண்ட அமைந்துள்ளது.



A TO Z OF CONFLICT O Orange March. The book. *2019.* **மூலம்:** Qss artist's studios & gallery.

O - Orange march என்ற படைப்பானது வடக்கு அயர்லாந்தின் பிரிவினவாதம் மோதலை பிரதிபலிக்கின்றது. வட அயர்லாந்தின் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு ஒரு படைப்பினை படைக்குமாறு கேட்டுக் கொண்டதன் இணங்கவே இதனை படைத்தேன்.

# இவர்கள் எனது நண்பர்கள்

சத்தியமாகச் சொல்கிறேன்
இவர்கள் எனது நண்பர்கள்
நீங்கள் நம்பினாலும்
நம்பாவிட்டாலும்
இவர்கள் எனது நண்பர்கள்

வகை வகையான நண்பர்கள்
வித விதமான நண்பர்கள்
தினிசு தினிசான நண்பர்கள்
புதிசு புதிசான நண்பர்கள்

எனக்குத் தெரிந்த நண்பர்கள்
என்னைத் தெரிந்த நண்பர்கள்
ஒத்த கருத்துடைய நண்பர்கள்
மாற்றுக் கருத்துடைய நண்பர்கள்

கௌரவ நண்பர்கள்
அகமறியும் நண்பர்கள்
புகழ் விரும்பும் நண்பர்கள்
பெருமை பேசும் நண்பர்கள்

எல்லை தாண்டும் நண்பர்கள்
கல்லை எறியும் நண்பர்கள்
தொல்லை தரும் நண்பர்கள்
பல்லைக் காட்டும் நண்பர்கள்

முகம் காட்டும் நண்பர்கள்
முகத்தை மறைகும் நண்பர்கள்
அகம்பாவ நண்பர்கள்
மதம் பிடித்த நண்பர்கள்

புரளி பேசும் நண்பர்கள்
பரணி பாடும் நண்பர்கள்
அரட்டை அடிக்கும் நண்பர்கள்
குறட்டை விடும் நண்பர்கள்

பாங்கான படங்களுடன்
பவனி வரும் நண்பர்கள்
சிங்காரச் சிறுக்கிகளால்
சீரழியும் நண்பர்கள்

தற்பெருமை பேசும் நண்பர்கள்
தம்பட்டம் அடிக்கும் நண்பர்கள்
பொய்பரப்பும் நண்பர்கள்
புகழ் பாடும் நண்பர்கள்

லைக் போடாத நண்பர்கள்
வாழ்த்து சொல்லாத நண்பர்கள்
அனுதாபம் சொல்லாத நண்பர்கள்
பின்னூட்டம் போடாத நண்பர்கள்

எட்டாம் வகுப்பை எட்டாதவனும்
பத்தாம் வகுப்பை தாண்டாதவனும்
பல்கலைக் கழக பட்டதாரி என
பந்தா காட்டும் நண்பர்கள்

சத்தியமாகச் சொல்கிறேன்
இவர்கள் எனது நண்பர்கள்
நீங்கள் நம்பினாலும்
நம்பாவிட்டாலும்
இவர்கள் எனது நண்பர்கள்

கூரன்.ஏ.ரவிவர்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகள்



உங்கள் பிள்ளைகள் உங்கள் பிள்ளைகள் அல்லர்
வாழ்க்கை தன்னை நித்தியமாக்க ஆசைப்படும்
விளைவுகள் அவர்கள்
அவர்கள் உங்களிடமிருந்தால், உங்களூடாக வருகிறார்கள்
அவர்கள் உங்களோடு வாழ்ந்தாலும் உங்களுக்கு
உரியவர்கள் அல்லர்!

உங்கள் அன்பை அவர்களுக்கு வழங்கலாம் - உங்கள்
சிந்தனையை அல்ல
அவர்களுக்கென்று சொந்த சிந்தனைகள் உள
அவர்கள் உடல்களுக்கு நீங்கள் உறையுள் தரலாம்,
அவர்கள் ஆத்மாக்களுக்கல்ல!
ஏனெனில் அவர்கள் ஆத்மாக்கள் நாளைய இல்லங்களில்
வாழ வேண்டியவை!
அங்கு நீங்கள் கனவிலும் போகமுடியாது
அவர்களைப் போல இருக்க நீங்கள் முயல்வீர்கள்
ஆனால் அவர்களை உங்கள் பிரதிகள் ஆக்காதீர்கள்
ஏனெனில் வாழ்க்கை பின்னோக்கிப் போவதில்லை
நேற்றைப் பொழுதோடு தரிப்பதில்லை!

நீங்கள் விற்கள் : அவற்றிலிருந்து பாயும் அம்புகளே
உங்கள் பிள்ளைகள்
வில்லாளி முடிவிலியின் பாதையிலுள்ள இலக்கைக்
காண்கிறான்
முழுப்பலத்தோடு உன்னை வளைக்கிறான். அவன்
அம்புகள்
விரைந்து தூரப் போக வேண்டும்
வில்லாளியின் கையில் நீ வளைவது மகிழ்ச்சிக்காக அல்ல
சீறிப்பாயும் அம்பை அவன் நேசித்த போதும்
நிலையாக இருக்கும் வில்லையும் அவன் நேசிக்கிறான்.

மூலம் : கலில் கிப்றான்
தமிழாக்கம் : சோ.ப

# குட்டி இளவரசன்

ஒரு முள் கீறிவிட்டதென்பதால்
எல்லா ரோஜாக்களையும் வெறுப்பதோ,
ஒரு கனவு மெய்ப்படாததால்
கனவு காணாமல் இருப்பதோ
ஒரு பிரார்த்தனைக்குப் பலன் கிடைக்காததால்
பிரார்த்தனைகளில் நம்பிக்கை இழப்பதோ

ஒரு நண்பன் துரோகம் செய்ததால்
எல்லா நண்பர்களையும் தூற்றுவதோ
யாரோ ஒருத்தி ∴ ஒருவன் விசுவாசமாயில்லாமல்
அல்லது உங்கள் காதலை ஏற்றுக்கொள்ளாததால்
உன் முதல் முயற்சி தோற்றதால்
உனக்கு வரக்கூடிய மகிழ்ச்சி முழுவதையும் நிராகரிப்பதோ
பைத்தியக்காரத்தனம்!
எப்பொழுதும் இன்னொரு சந்தர்ப்பம் இருக்கும்
இன்னொரு நண்பன் வருவான்
இன்னொரு, காதலி ∴ காதலன் கிடைப்பான் ∴ ள்
புதிய பலம் கிடைக்கும்!
ஒவ்வொரு முடிவைத் தொடர்ந்து
எப்பொழுதும் ஒரு புதிய தொடக்கம் வரும்!

இதோ எனது ரகசியம்
மிக எளிமையான ரகசியம்
இதயத்தினூடாகத்தான்
ஒருவரால் சரியாகப் பார்க்கமுடியும்
அத்தியாவசியமானவை கண்ணுக்குத் தெரிவதில்லை!

ஃப்ரெஞ் மூலம் : ஒந்துவான் த சாந் எக்சுபெரி
தமிழாக்கம் : சோ.ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோகிலா மகேந்திரன்

2

# ஆளுமையின் ஆட்சி, அகற்சியும் ஆழமும்



"மிக மென்மையான முறையில் நீங்கள் உலகை உலுக்கலாம்." என்றார் மகாத்மா காந்தி. அது அவரது தனித்துவமான ஆளுமையின் கூற்று. உயிர்கள் ஒவ்வொன்றுமே தனித்துவமான, தனிப்பட்ட ஆளுமை உடையவை. ஆயினும் மகாத்மா "அகமுகி" என்பதை அவரது மேற்படி கூற்றுச் சுட்டி நிற்கும் .மனிதர்களை அகமுகி என்றும் புற முகி என்றும் இரண்டு பெரிய வகைக்குள் மேலோட்டமாகப் பிரித்து நோக்கியவர் கார்ல் யுங்.(1921)இந்த இரண்டு எல்லைக்கும் இடையில் பலர் வருவார்கள் என்பது வேறு.

அகமுகி கள் பொதுவாகத் தனித்திருக்க விரும்புபவர்கள். அர்த்தமுள்ள தொடர்புகளில் மட்டும் மகிழ்பவர்கள். வாய் திறப்பதற்கு முன் நிறையவே யோசித்துப் பேசுபவர்கள். எந்த விடயத்தையும் அணுகு வதற்கு முன் அவதானிப்பவர்கள். மனம், ஆன்மா போன்ற விடயங்களின் ஆழத்தில் வாழ விருப்புபவர்கள். சத்தமும் குழப்பமும் நிறைந்த இடங்களில் இவர்கள் சுருங்கிப்போவார்கள். விடயங்களை உள்வாங்குவதில் கவனம் கொண்ட இவர்கள் நுண் உணர்திறன் உடைய வர்கள். மென்மையான போக்குடன், இலகுவில் பிரதி பலிக்கும் மனமும் கொண்டவர்கள். பொதுவாகத் திரைக்குப்பின்னே இவர்களின் செயற்பாடுகள் நிறைய இருக்கும். தமது சக்தியைக் கவனமாகச் சேமித்து வைக்கும் இவர்களால் உலகத்தின் மீது அமைதியான அதேநேரம் மிக வலுவான செல்வாக்கைச் செலுத்த முடியும். ஐன்ஸ்டீன், மேரி கியூரி, சார்ல்ஸ் டார்வின், ஐசக் நியூட்டன் போன்ற விஞ்ஞானிகள் கட் டாயமாக அகமுகிகளாகவே இருப்பார்.

புறமுகிகள் சமூக ஒன்றுகூடல்களில் அதிகம் வெளித்தெரிவார்கள். அதிகம் பேச விரும்புவார்கள். பேசு வார்கள். மற்ற மனிதர்களோடு உறவாடுதல் அவர்களின் சக்தியை அதிகரிக்கும். எப்போதும் உறுதியான வெளிப் பாடுகளைக் காண்பிப்பார்கள். எப்போதும் துடிப்பாக இருப்பதோடு, புதிய அனுபவங்களைத் தேடுவதிலும் குறியாய் இருப்பார்கள். விருந்துகளில் கலந்துகொள்வது இவர்களுக்கு நிறையவே பிடிக்கும். கிளர்ச்சியும் எழுச்சி யும் கொள்ளுதல், விடயங்களில் ஆர்வமும் அக்கறை யும் காட்டுதல் ஆகிய விடயங்களில் உணர்வுச் செறிவு கூடுதலாய் இருக்கும். பாராட்டுக்கள் இவர்களிடம் நிறையவே வேலை செய்யும். பெரிய மனிதக் கூட்டுகளில் இணைந்து செயற்படுவதை எப்போதும் விரும்புவர். மயிர்க்கூச்செறியும் விடயங்களைச் செய்வதில் எப்போதும் விருப்பம் இருக்கும். குத்துச்சண்டை வீரர் முகமட் அலி, வின்ஸ்டன் சேர்ச்சில், மாகிரட் தச்சர், ஐஸ்வர்யா ராய் போன்றவர்களை புறமுகிகளுக்கான சிறந்த உதாரணமாகக் கொள்ளலாம்.

1940களில் இரண்டாம் உலகப்போர் நடந்து கொண்டிருந்த அல்லது முடிவுற்ற காலங்களில், போர் வீரர்கள் பலர் உலகம் முழுதும் சிதறி ஓடியபோது அவர் களில் யாருக்கு என்ன வேலை கொடுக்கலாம் என்பது பற்றி அறிவதில் குழப்பம் இருந்த சூழ்நிலையில் மனிதர் களின் ஆளுமையை 16வகையாகப் பிரிக்கும் மேயர் அன்ட் பிரிஜ் (Myer and Brigg 's)கருத்துநிலை (MBTI )பிரபலம் பெற்றது. அவ்வகைப்பாட்டின்படி மனித ஆளுமை முதலில் நாலு வேறு பிரிவுக்குள் அடக்கப்பட்டுப் பின்னர் ஒவ்வொன்றும் நாலுநாலாக வகுக்கப்படும்.

1.ஆய்வாளர் -உள்ளுணர்வுள்ளவர், எண்ணித் துணிபவர், பகுத்தறிவுள்ளவர், பக்கம் சாராதவர், புத்திக் கூர்மை உள்ளவர்.

அ)கட்டிடக்கலைஞர் -அகமுகி, உள்ளுணர் வுள்ளவர், எண்ணித்துணிபவர், நீதியானவர்

ஆ)தர்க்கவாதி -அகமுகி, உள்ளுணர்வுள்ள வர், எண்ணித் துணிபவர், வருங்காலம் பற்றி ஓரளவு கணிக்கக் கூடியவர்"

இ)தளபதி ஆளுமை - புறமுகி, உள்ளுணர் வுள்ளவர், எண்ணித்துணிபவர், நீதியானவர்.

ஈ)விவாதிக்கும் ஆளுமை - புறமுகி, உள்ளுணர் வுள்ளவர், எண்ணித்துணிபவர், வருங்காலம் பற்றிக் கூறக் கூடியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.இராஜதந்திரி - உள்ளுணர்வுடன் உணர்ச்சிகள் நிறைந்தவர், ஒத்துணர்வுள்ளவர், சாமர்த்தியசாலி, மிகை உணர்ச்சிகளை வெளிப்படுத்து பவர்

அ)வழக்கறிஞர் ஆளுமை -அகமுகி, உள்ளுணர்வுள்ளவர், உணர்ச்சிமிக்கவர், நீதியானவர்

ஆ)மத்தியஸ்தர் ஆளுமை - அகமுகி, உள்ளுணர்வுள்ளவர், உணர்ச்சிமிக்கவர், வருங்காலம் கணக்கக் கூடியவர்.

இ)கதாநாயக ஆளுமை - புறமுகி, உள்ளுணர்வுள்ளவர், உணர்ச்சிமிக்கவர், நீதியானவர்.

ஈ)பிரசாரகர் ஆளுமை - புறமுகி, உள்ளுணர்வுள்ளவர், உணர்ச்சிமிக்கவர், வருங்காலம் கணிக்கக் கூடியவர்.

3.காவலர் -அவதானம் மிக்கவர், நீதியானவர், செயற்படுபவர், ஒழுங்கில் குவியம் கொள்பவர், நிலையானவர், பாதுகாப்பு வழங்கக் கூடியவர்.

அ)நடைமுறை ஒத்துழைப்பாளர் - அகமுகி, புலனுணர்வு கூர்மையானவர், எண்ணித்துணிபவர், உணர்ச்சி மிக்கவர்.

ஆ)பாதுகாவலர் - அகமுகி, புலனுணர்வு கூர்மை கொண்டவர், உணர்ச்சி மிக்கவர், நீதியானவர்.

இ)நிர்வாகி - புறமுகி, புலனுணர்வு கூர்மையானவர், எண்ணித்துணிபவர், நீதியானவர்

ஈ)ஆலோசகர் - புறமுகி, புலனுணர்வு கூர்மையானவர், உணர்ச்சி மிக்கவர், நீதியானவர்

4.கண்டுபிடிப்பாளர் - அவதானம் மிக்கவர், வருங் காலம் கணிக்கக் கூடியவர், வளைந்து கொடுப்பவர், தன்னிச்சையாகச் செயற்படக் கூடியவர், திறமையுள்ளவர்.

அ) நேர்மையாளர் - அகமுகி, புலனுணர்வு கூர்மையாளர், எண்ணித்துணிபவர், வருங்காலம் கணிக்கக் கூடியவர்.

ஆ) சாகசக்காரர்-அகமுகி, புலனுணர்வுக் கூர்மையாளர், உணர்ச்சி மிக்கவர், வருங்காலம் கணிக்கக் கூடியவர்.

இ) தொழிலதிபர் - புறமுகி, புலனுணர்வுக் கூர்மையாளர், எண்ணித்துணிபவர், வருங்காலம் கணிக்கக் கூடியவர்.

ஈ)பொழுபோக்காளர் - புறமுகி, புலனுணர்வுக் கூர்மையாளர், உணர்ச்சி மிக்கவர், வருங்காலம் கணிக்கக் கூடியவர்.

உலக சரித்திரத்தை ஒருமுறை திரும்பிப் பார்த்தால் பலவேறு ஆளுமை வகைகளைக் கொண்டவர்களும் சரித்திரத்தில் புகழ் பெற்றிருக்கிறார்கள். ஆய்வாளர் என்ற வகுதிக்குள் பார்த்தால் நியூட்டன் கட்டிடக் கலைஞர் வகைக்குள் வருவார். கியூரி அம்மையார் தர்க்க வாதி ஆளுமை கொண்டவர். தளபதி ஆளுமை கொண்டவர் யூலியஸ் சீசர். லியனாடோ டாவின்சிக்கு விவாதிக்கும் ஆளுமை. இராஜதந்திரி என்ற பிரிவில் ஹிட்லர் வழக்கறிஞர் ஆளுமை கொண்டவர். ஷேக்ஸ்பியர், எட்கார் அலன்போ போன்ற சிறந்த எழுத்தாளர்கள் மத்தியஸ்தர் ஆளுமை கொண்டவர்கள். பராக் ஒபாமா போன்ற அரசியல்வாதிகளோடு மாயா ஏஞ்சலோ போன்ற கவிஞர்களும், மாஸ்லோ போன்ற உளவியலாளர்களும்கூட கதாநாயகர் ஆளுமை கொண்டவர்கள். சார்ள்ஸ் டிக்கின்ஸ் அதே பிரதான தொகுதியில் பிரசாரகர் ஆளுமை கொண்டவராம்.

மூன்றாவதாக நாங்கள் பார்த்த பிரதான வகையில் பாதுகாவலர் என்ற உப பிரிவில் வருவார் உலகம் முழுதையும் கவர்ந்த அன்னை திரேசா அம்மையார் .பில் கிளிங்டன் என்ற அரசியல் தலைவர் ஆலோசகர் ஆளுமை கொண்டவர்.

நாலாவது பிரதான வகையாகிய கண்டு பிடிப்பாளர் தொகுதியில் ஹெம்மிங்வே தொழிலதிபர் ஆளுமை கொண்டவராயும் மார்லின் மன்றோ பொழுது போக்காளர் பகுதியில் வரக்கூடியவராகவும் நோக்கப்படுகின்றனர்.

ஆகவே எமது பரம்பரை அலகுகள் எமக்கு ஒரு நிலைத்த வகுதியைத் தந்திருந்தாலும் (trait)அதை நாங்கள் உச்சத்திற்குப் பயன்படுத்தலாம்.

காவியங்களையும் உலகப் புகழ் பெற்ற நாடகங்களையும் படைத்தவர்கள் தமது கதாபாத்திரங்களுக்கு மிக அவதானமாக ஒரு ஆளுமை வகையை வழங்கியிருப்பதை அதை ஊன்றிப் படிக்கும்போது உணர்ந்து கொள்ளலாம். ஷேக்ஸ்பியரின் ஒதெல்லோ நாடகத்தில் ஒதெல்லோ என்ற பாத்திரம் வீரமும் நம்பிக்கையும், உடல் வலிமையும் சுறுசுறுப்பும் கொண்டமைந்தது. கரவில்லாத மனம் கொண்ட அதேநேரத்தில் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவதில் பலவீனமானவர். தனக்குள்ளே ஒரு பாதுகாப்பற்ற தன்மை கொண்டவர். கடைசியாகக் கூறப்பட்ட அந்த இரண்டு பலவீனங்களுமே அவரது விதியைத் தீர்மானித்தன. தனது புத்திக் கூர்மையினால் எல்லோரையும் தனது தேவைக்கேற்றபடி பாவித்துக்கொள்ளும் மோசமான பாத்திரம் இயாகோ. இப்படி ஒவ்வொரு காவியங்களையும் ஆராயமுடியும்.

ஒவ்வொருவருடைய தனித்தனி ஆளுமையும் ஒவ்வொரு தனித்தனி நட்ஷத்திரங்களைப் போன்றவையே என்று கூறும் ஒரு கவிதை இது.

பரந்து விரியும் நிறங்கள் கொண்ட தட்டு
ஒவ்வொரு ஆன்மாவிலும்
பெருமையின் கோடுகளும் தைரியத்தின்
நிழல்களும் சூழ்ந்து
சிரிப்பின் சுழற்சிகளும்
வலியின் சாயல்களும் கூடவே!
தனித்தனி நின்று முரண்டு பிடிக்கும் அழகு!

பேரார்வச் சிவப்பு அமைதியின் நீலம்
நிறைவு காணாத் தங்கநிற மகிழ்வு
சத்தமின்றி இருக்கும் மர்மச் சாம்பல்
சித்தமாய் இருப்போம் நிறங்களைக் காக்க!

வாழ்வுக்கு வர்ணம் வடிவாய்க் கொடுப்போம்
சாயல் ஒவ்வொன்றையும்
அவதானித்திருப்போம்.
ஒவ்வொரு நிழலும் எங்களின் பகுதி
தனித்துவ நிறக் கலவை கொண்டாடும்
ஒரு ஆளுமை ஒரு நட்ஷத்திரம்!
மொழிபெயர்ப்பு் விழி

இப்படியே ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தனித்துவ ஆளுமை, நீண்ட காலம் நிலைபெற்றிருப்பது, இருந்தாலும் இருக்கின்ற ஆளுமையை மேலும் விருத்தி செய்யும் வழிகள் மிகப்பல இருக்கத்தான் செய்கின்றன. மனிதன் ஒரு சமூக விலங்கு என்பதால், ஆளுக்காளான தொடர்பாடல் திறன்களை வளர்த்துக்கொள்ளுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன்மையா னதும் முக்கியமானதுமான வழி. மற்றவர் கள் சொல்வதை எப்போதும் உற்றுக்கேட்டல், தனது சொந்த உடல் மொழியில் கவனம் செலுத்துதல் (நாங்கள் பொய் சொல்கிறபோது உடல் மொழி எங் களைக் காட்டிக்கொடுத்துவிடும் )உடல் அசைவுகளில் கவனம் செலுத்துதல், உரையாடும்போது எமது கருத்தைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் முன்வைத்தல் ஆகியவை தொடர்பாடல் திறனை வளர்க்க உதவும். மேடையில் பேசும்போது எமது ஆளுமையின் ஒரு பகுதி எல்லோருக்கும் தெரிந்துபோகிறது என்று எமக்குத் தெரியுமா ?

நாங்கள் நடக்கும்போது எங்கள் நடை எமது ஆளுமையின் ஒரு பகுதியைக்காட்டும். கால்களை நேராக வைத்து நடக்கிறோமா, விரித்து வைத்து நடக்கிறோமா, அடிகளை ஆறுதலாக வைக்கிறோமா, மிக வேகமாக வைத்துச் செல்கிறோமா என்பதெல்லாம் தான்! ஒருவரோடு கதைக்கும்போது கண்பார்த்துக் கதைக்க முடிகிறதா, அல்லது தலையைக் கீழே போட்டுக் கொள்கிறோமா?" நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை" என்றான் பாரதி

வழக்கமாக இருந்துகொள்ளும் உணர்வுப் பாதுகாப்பு வலயத்திலிருந்து வெளியேறித் தொழிற்படு தல் ஆளுமை விருத்திக்கான மற்றோர் வழி .

வாழ்க்கையின் ஆரம்பத்தில் ஒரு தேக்க நிலை இருக்கலாம். யாரைத் திருமணம் செய்யப்போகிறோம், என்ன தொழில் பார்க்கப்போகிறோம் ஒன்றும் தெரியாத நிலை. அல்லது படித்துப் பட் டம் பெற்றாயிற்று. தொழில் ஒன்றும் இன்னும் இல்லாத நிலை. இது மெல்ல மாறி, தொழில் ஒன்று கிடைத்தாயிற்று. வருமானம் போதும் . துணை ஒன்று வந்தாயிற்று. பிள்ளைகள் பிறந்தாயிற்று, பிள்ளைகள் படிக்கிறார்கள். இப்போது இருக்கும் நிலை ஒழுங்கமைக்கப்பட்ட பாதுகாப்பான ஒரு வலயம். வழக்க மான வேலைகளைக்கொண்ட ஒரு நேர அட்டவணை .இந்தப் பாதுகாப்பு வலயத்தை விட்டு விலகப் பொதுவாக மனிதர்கள் விரும்புவதில்லை. விலகினால்? அல்லது விலக நேர்ந்தால் ?

கிணற்றுத்தவளையும், மீன்தொட்டிப் பொன் மீனும் பாதுகாப்பாய் இருக்கும். ஆயினும் அவற்றின் வளர்ச்சி பூரணமாய் இருக்காது. எமது நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்கள் தந்த வலிகள் மிக மோசமானவைதான் என்றாலும் அதுவே பலர் நாட்டை விட்டு வெளியேறி, வெளிநாட்டில் மிக உன்னத பதவிகளில் அமரவும் எமது பொருளாதாரத்திற்குக் கை கொடுக்கவும் உதவியது. மாஸ்லோவின் தேவைக் கூம்பில் மிக உயரிய படி நிலை சுயதிறன் நிறைவு பெறுதல். மாந்தர்களில் சுய திறன் நிறைவுத் தேவையைப் பூர்த்தி செய்பவர்கள் மிகக் குறைவு. அப்படி நிறைவு செய்வதற்கு இந்த ஆறுதல் வலயத்திலிருந்து வெளியேறுதல் அவசியமாயி ருக்கலாம்.

அதே நேரத்தில் எமது ஒவ்வொரு செயற் பாட்டையும் நாம் பணத்தோடு பொருத்திப்பார்க்க வேண்டிய தில்லை. சில வேளைகளில் மிகக் கடினமான ஒரு செயற்றிட்டத்தில் தொண்டராகப் பணி புரிதல் ஆளுமையை நிறையவே விருத்திசெய்யும் .

ஆளுமை விருத்திக்காக ஆறுதல் வலயத்தி லிருந்து வெளிவந்து நாம் செய்யக்கூடிய இன்னொரு விடயம், ஒரு நாளும் அறிமுகமில்லாதவர்களுடன் உரையாட விரும்புதலும் உரையாடலுமாகும். அவர்கள் கதைக்கும் மன நிலையில் இருக்கிறார்களா? கதைக்க விரும்புகிறார்களா? தெரியாது. ஒருவேளை அவர்கள் ஏதோ ஒரு வேலையில் மனமொன்றி ஈடுபட்டிருந்தால் அவர்கள் பெரும்பாலும் கதைக்க விரும்பமாட்டார்கள். கொஞ்சம் ஆறுதலாக இருப்பதுபோல் தெரிந்தால் நாங்கள் அவர்களைப் பார்க்கலாம். கண் சந்திப்பு நிகழ்ந் தால் சிரிக்கலாம். சிரிப்புக்கு மறு தாக்கமாக இன்னொரு சிரிப்பு வந்தால் நாம் கதையைத் தொடக்கலாம். "இன்று சரியான வெயில்" என்று கூறலாம். எடுத்தவுடன் நாங்கள் அவர்களைப் பற்றி எதுவும் கேட்கவில்லை. அவர்கள் பதில் சொல்லும் முறை சினேக பூர்வமாக இருந்தால், தொடர்ந்து "நீங்கள் கிட் டத்தான் இருக்கிறீங்களோ?" என்று தொடரலாம். இப்போது அவருக்கு எம்மோடு உரையாட விருப்பமா இல்லையா என்பது நிச்சயம் தெரிந்துவிடும். விருப்பம் என்றாலும் மிகவும் தனிப்பட்ட கேள்விகளை முதல் நாளில் கேட் காதிருப்பதே உகந்தது. "என்ன மாதிரி விஷயங்களிலை ஈடுபடுறது உங்களுக்குப் பிடிக்கும்?" போன்ற கேள்விகளை எப் போதும் கேட்கலாம். அவர்கள் எங்களைப் பற்றிக்கேட் டால் சில விடயங்களைக் கூறலாம். ஆயினும் அளவுக்கு மிஞ்சி முதல் நாளில் கொட்டித்தள்ளிவிடுவது ஆளுமைச் சிறப்புக்கு வழி காட்டாது.

எம்மைச் சுற்றி ஆரோக்கியமான எல்லைகளை உறுதியாக வளர்த்துக்கொள்ளல் ஆளுமையை விருத்தி செய்யும் இன்னொரு வழி எனலாம். எம்மைச் சுற்றி, இதுவரை இல்லாதிருந்த எல்லையைப் போடும்போது யார் கவலைப்படுவார்? ஒழுங்கான உறுதியான உறவு கொள்பவர்கள் அதனால் பாதிக்கப்படுவதில்லை. எம்மை நன்றாகப் பாவித்து எம்மிடம் பல நன்மைகளைப் பெற்றுக்கொண்டவர்கள் மட்டுமே பாதிக்கப்படுவர். அவர்களே அந்த எல்லைகள் பற்றிக் கோபப்படுவர் அல்லது கவலைப்படுவர். எம்மை நாம் காதலிப்பவராக இருந்தால், எமது சக்தியும் நேரமும் பெறுமதி மிக்கவை என்பது எமக்குத் தெரிந்தால் கட்டாயம் நாங்கள் எல்லை களை வகுத்துக்கொள்ள வேண்டும் .எல்லோரும் கேட்கும் எல்லா விடயங்களுக்கும் "ஆமாம்" போட முடியாது. சிலவற்றிற்கு "இல்லை" என்று சொல்லும் பழக்கத்திற்கு வந்துவிட்டால் சக்தி தீய்தலுக்கு இடம் கொடுக்க வேண்டியதில்லை ஒருபோதும் !

ஏதோ ஒரு வகைத் தியானத்தில் நாள்தோறும் ஐந்து நிமிடமாவது ஈடுபடுவது ஆளுமைச் சிறப்புக்கு உதவும். எமக்கு விருப்பமான கடவுளின் திரு உருவில் மனதை நிலை நிறுத்தலாம் அல்லது எமக்கு மிகப்பிடித்த ஒரு மலரில் கூடக் கவனம் கொள்ளலாம். இல்லை யெனில் சிறிது நேரம் எமது சொந்தச் சுவாசத்தை அவதானிக்கலாம். இப்படி முயலுகிறபோது சிலவேளை எண்ணங்கள் வெளியே போகக்கூடும். பரவாயில்லை. திரும்பவும் மனதை அந்த விடயத்திற்குக் கொண்டு வருவோம், பழகப் பழகப் படியும் மனம். 40Hz காமா இசை யின் பின்னணி இந்தத் தியானத்திற்கு உதவக்கூடும். தியானத்தில் ஈடுபடுவது எமது உளநலத்தை விருத்தி செய்யும். உண்மைதான். எமது சொந்த உடல், உள, சமூக, ஆன்மிக நலத்தில் அக்கறை கொள்ளல் கூட ஆளுமை விருத்திதானே! நலமில்லாத மனிதரில் ஆளுமையை எப்படித்தரிசிப்பது ?

(தொடருவோம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடுலாவு காதை பாகம் 2
நாவல் தொடர்

தமிழ்க்கவி

# காடுலாவுகாதை 2



*32*

அந்த மந்தாகாரமான பொழுதில் அமைதியாக இருந்த கொந்தைக்காரன் குளம் கிராமம் தனது வேலைகளை விடுத்து மிக கவனமாகவே இருந்தது. நகரத்தை... இல்லை இராணுவ வலயத்தின் அண்மித்த பகுதியில் இருந்த இந்தக்கிராமத்திலிருந்து நேற்று முன்தினமே இரு குடும்பங்கள் தப்பியோடியிருந்தன. சிறு பற்றைக்காடுகளின் ஊடாக அவர்கள் இராணுவ வலயத்திற்குள் போயிருப்பர் என்பதில் யாருக்கும் சந்தேகமே இல்லை அந்தக்காடுகள் அப்படியொன்றும் இருண்ட வனமும் அல்ல. குருமன் பற்றைகளுடன் கூடிய விளாமரக்காடுகளும் விடத்தல், காரைப்பதர்களும் தான்.

விடுதலைப்புலிகள் அல்லாத மாற்று இயக்கத்தில் அவர்களது பிள்ளைகளோ உறவினர்களோ இருந்தார்கள். அவர்களது வீடுகளே இப்போது இயக்கத்தின் தேவைக்காக சுவீகரிக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர்களுக்கு வேறு இடம் தற்காலிகமாக வழங்கப்பட்டிருந்தது. அவர்கள் அங்கு வசிக்காமல் இரவோடு இரவாக ஓடிவிட்டனர். அவர்களால் இந்தப்பிரதேசம் காட்டிக் கொடுக்கப்படலாம் அப்படி நடந்தால் எறிகணைகளோ விமானமோ வரலாம் என்பது சாதாரணமான விடயம். ஆனால் ஏனோஇயக்கம் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு இந்த ஏற்பாடுகளை செய்தது. லெச்சிமிக்கும் இது புரியவில்லைத்தான். ஆனால் பின்னாளில் இதுபற்றி ஒரு தளபதியோடு பேசிக் கொண்டிருந்த போது அவர் அவளுக்கு சொன்னதாவது "சாவுகளின் மீது நாங்கள் அச்சப்பட முடியாது. சாவுகளின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க எமக்கு ஆதரவுகளும் அதிகரிக்கும்." வீரபாண்டிய கட்டப்பொம்மனில் வரும் ஒருவசனம் லெச்சிமிக்கு பளிச்சிட்டது. "படுகளத்தில் ஒப்பாரி ஏது"

ஒரு வாரமாக இயக்கம் அந்தக்கிராமத்தில் செய்து கொண்டிருந்த ஏற்பாடுகள் பாடசாலை கொட்டகை சமையலுக்கான முன்னேற்பாடுகள் எல்லாம் ஏதோ யுத்த நகர்வாக இருக்குமோ என்ற சந்தேகம் விலகியது, காரணம் நேற்று மாலை அங்கு இளம்பெண்கள் வந்து கொண்டிருந்தார்கள். திருவிழாவில் கூடிய குழுக்கள் போல அங்குமிங்கும் பட்டாம் பூச்சிகள் போல அலைந்தார்கள். அப்படி வந்தவர்கள் தம்மை ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து கொள்வதும், தமக்கென நட்புகளை சேர்ப்பவர்களுமாக கலகலத்துக் கொண்டிருந்தனர். வெளி வாசலிலேயே இவர்களைப்பதிவு செய்து கொண்டிருந்ததால் அவர்களை அழைத்து வந்த பெற்றோர் அல்லது உறவினர்கள் மனம் நோகாமல் பண்பாக பேசி வாசலுடன் திருப்பி அனுப்பப்பட்டனர். கொஞ்சம் நேரங்கழித்து வந்தவர்கள் பிள்ளைகளின் தொகையை கண்டதும் திருப்தியுடன் திரும்பிச் சென்றனர்.

இப்படி இரண்டு விதமான சூழ்நிலைகளுடன் காலையில் வகுப்புகள் ஆரம்பமாகியது. அங்கிருந்த ஆரம்பப்பாடசாலை பிள்ளைகள் முற்றத்தில் நின்று காலைப்பிரார்த்தனையில் ஈடுபட்ட வேளை சுப்பர் சொனிக்கின் முதலாவது குண்டு அவர்களை அண்மித்ததான வளவொன்றில் விழுந்து வெடித்தது. யாரும் கட்டளை இடாமலே பிள்ளைகள் பெரும் கூச்சலுடன் நிலத்தில் விழுந்து படுத்தனர். ஏராளமான தெய்வங்களை பிள்ளைகள் அழைத்தபடி கிடக்க அடுத்த குண்டு கொஞ்சம் தள்ளியிருந்த ஆண்போராளிகளின் சமையல் கூடத்தின் முகப்பு வாசலை நொருக்கியது. இன்னுமொரு குண்டு சுற்றியிருந்த வயல்வெளிக்கு அருகே விழுந்தது. சுப்பர்சொனிக் போய்விட்டது.

படுத்திருந்த பாடசாலைப் பிள்ளைகளின் மேல் நின்ற இத்திமரத்தின் கிளைகள் சில்லம்பல்லமாக முறிந்து வீழ்ந்திருந்தாலும் அவை யாரையும் காயப்படுத்தவில்லை. மூன்று குண்டுகளும் யாரையும் சேதப்படுத்தவில்லை என்றாலும் பயிற்சிக்கென வந்திருந்த பிள்ளைகளின் மன உறுதியை முற்றாக அழித்துவிட்டது அவர்களில் சிலர் வாய்விட்டு அழுதனர். "அக்கா நான் வீட்ட போகப்போறன்" என்ற குழப்பமான பிள்ளைகளை முதலில் தனிப்படுத்தினார்கள் அவர்களை வெளியிலிருந்து யாரும் சந்திக்காதபடி காவல் போட்டார்கள். உட்புறமாக அமைந்த ஒரு வீட்டிற்கு அவர்கள் மாற்றப்பட்டார்கள். அங்கிருந்து அவர்களுடைய புலம்பல் எதுவும் வெளியில் வராமல் பார்த்துக் கொண்டார்கள். ஆயினும் ஒரு மணித்தியாலம் இரண்டு மணித்தியாலம் ஆனதும், தொலைவுக்கேற்ப பெற்றார்கள் படையெடுக்க ஆரம்பித்தனர். அவர்கள் பிள்ளைகளை சந்திக்க அனுமதிக்கப்படவில்லை. "எவருக்கும் பிரச்சினையில்லை அவர்களை வேறிடத்துக்கு அனுப்பி விட்டோம். தயவு செய்து வீட்டிற்குப் போங்கள் உங்கள் பிள்ளைகள் பத்திரமாக இருக்கிறார்கள். அவர்கள் இருக்குமிடத்தை பாதுகாப்பு கருதி இப்போது சொல்ல முடியாது நாங்கள் அறிவித்தபடி உங்களை கூப்பிடுவோம் அப்போது வாருங்கள்" என்று பலவாறு சமாதானம் செய்து திருப்பி அனுப்பினார்கள். அவர்களில் சிலரும், அழுது கொண்டே திரும்பிச் சென்றார்கள். பகல் உணவு எங்கிருந்தோ வந்தது. பலர் சாப்பிடவில்லை அவர்கள் இன்னும் பயந்து போய் இருந்தார்கள். திடீரென வானம் இருண்டது. ஒருமணியளவில் பெருமழை பிடித்துக்கொண்டது. மாலைவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுவிட்டுத் தொடர்ந்தது மழை.

மாலை ஐந்துமணி கடந்து ஊரடங்கியதும் இரண்டு பார ஊர்திகள் வந்தன. இருட்டியதும் பிள்ளைகளை அதில் ஏற்றினார்கள் பல வருடங்களாக செப்பனிடாத பழைய வீதியில் வண்டி குலுங்கிக்குலுங்கி அசைந்தவாறே சென்றது ஊரை நன்கு அறிந்திருந்த லெச்சிமி அந்த வாகனத்தில் நடுவே இருந்தாள். எனவே அவளுக்கும் தாங்கள் எங்கே கொண்டு செல்லப்படு கிறோம் என்பது தெரியவில்லை. நளாயினி எங்கும் காணப்படவில்லை. ஓமந்தைப்பிரதேசத்தை சேர்ந்த ஆண் போராளிகள் இருவர் அந்த வாகனத்தை வழி நடத்தினார்கள். இரவோடு இரவாக அவர் கொண்டு வரப்பட்ட இடம் கனகராயன் குளம் பாடசாலையும் அதன் அருகே இருந்த நெற் களஞ்சியமுமாகும். நளாயினி அங்கே நின்றாள் அவளுடன் ஏனைய போராளிகளும் பெண்களை இறங்கி அந்த களஞ்சி யத்துள் அமர வசதி செய்தனர்.

இரவு நெடு நேரமாகி இருந்தது. பிளாஸ்டிக் வாளிகளில் குழைத்த சோறு வந்தது. ஒருவர் அள்ளிக் கொடுக்க மற்றவர்கள் கையிலேயே வாங்கி உண்டனர். பாய்களை தாறுமாறாக விரித்து படுத்தனர். காலையில் எழுந்த போதுதான் தாம் எங்கிருக்கிறோம் என்பதை அறிந்தனர். பாடசாலையின் ஒரு புற மண்டபம் வகுப்பு களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. ஊருக்கு மூன்று வீடுகள் பகுதிகளாக வாங்கி பிள்ளைகளை பிரி பத்து பதினைந்து பேராக தங்க வைக்கப்பட்டனர். உணவு சுமார் இருநூறு மீட்டர்களுக்கப்பால் ஒரு வீட்டில் சமைக்கப்பட்டது. முறை வைத்து ஒவ்வொரு வேளை யும் இருவர் போய் உணவைக் கொண்டுவந்தனர்.

ஒரு மாதப்பயிற்சி முடிவில் விளையாட்டுப் போட்டிகள் கலை நிகழ்வுகள் என நடத்தி விழாவாக அதை முடித்தனர். ஆனால் அந்த பயிற்சியை பெற்றவர்கள் அது சமூகமேம்பாட்டுப்பயிற்சி என அழைக்கப்பட்டாலும், எந்த சமூக மேம்பாட்டிலும் அமர்த்தப்படவில்லை. அதில் பலர் போராட்டத்தில் இணைய விரும்பினாலும் சேர்த்துக் கொள்ளப்பட வில்லை. பயிற்சி முடிவில் நளாயினி விசேட அழைப்பின் பெயரில் யாழ்ப்பாணத்திற்கு சென்றாள். அவள் கரும் புலியாக செல்வதற்கு அனுமதி கோரியிருந்தாள். ஆனால் அவளுக்காக வேறு ஒரு வேலை காத்திருந்தது.

அதுவரை பெண்கள் கரும்புலிகளாக இல்லை. அது மட்டுமன்றி கடல்புலிகளிலும் பெண்கள் இல்லை. பெண்கள் படகோட்டுவதைப்பற்றி பெருமளவாலன ஆண்போராளிகளிடமே நல்ல அபிப்பாராயம் இல்லை அவர்களை முதலில் சேர்த்துக் கொண்டு என்ன செய்வது. ஆண்கள் உள்ளாடையுடன் கடலில் நிற்போம் பெண்களை அப்படி நிற்க வைக்க முடியுமா? கனதியான ஆடைகளுடன அடிக்கடி நனைவது முடியுமா என்ப தெல்லாம் பெண்களை நிராகரிக்க காரணமாயிற்று. அதையெல்லாம் சுட்டிக்காட்டிய தலைவர் கடலோரக் கிராமங்களில் சேரும் போராளிகள் கடற்புலிகளாக மாற்ற வேண்டும் பெண்களை நளாயினியின் தலைமை யில் சேர்க்க கேட்டுக்கொண்டார். இது தனிக்கதையாக எழுதப்பட்டுவிட்டது எனவே தவிர்ப்போம்.

பொறுப்பில் பானு வந்தாள். லெச்சிமியும் சில பல காரணங்களுக்காக இயக்கத்தில் இணைந் திருந்தாலும் பயிற்சி பெறாத போராளி என்ற வகையில் சில இடங்களில் ஓரங்கட்டப்பட்டாள். அது தவிரவும் அவளுடைய இலக்கு தான் அடைக்கலமாக கொடுத்த மகனின் நிலையை அறிவதுதான் எனவே அது வன்னியில் நடவாது. யாழ்ப்பாணத்தில்தான் முடியும் என்று கருதினாள் சந்தர்ப்பத்துக்காக காத்திருந்தாள்.

தினக்குறிப்பு எழுதுவது அவள் பாடசாலையில் கற்கும் போதே ஏற்பட்ட பழக்கம். தனது அந்தரங்கங் களை துயரங்களை அவமானங்களை ஏமாற்றங்களை எல்லாமே எழுதிவைப்பதால் அவளது மனச்சுமை குறைந்து விடும். அவள் தனது சரணடைய வைக்கப் பட்ட மகனைப்பற்றி நாளாந்தம் அழுதழுது எழுதிய சோகமெல்லாம் அவளது ஆக்கங்களின் மத்தியில் கிடந்தது. நாளாந்தும் வாசித்து தன்மகனை எண்ணி அழுது தீர்ப்பது தவறாத வழக்கம். ஒவ்வொரு கணமும் அவனை நினைத்து வருந்தும் போதெல்லாம் கைது செய்யப்பட்ட, சரணடைந்த மாற்று இயக்கங்களில் பயிற்சி எடுத்த போராளிகள் மட்டுமல்லாமல் இந்தியப் படையின் ஆதரவுடன் பிடிக்கப்பட்டு பயிற்சி கொடுக்கப்பட்ட ஏராளமான சிறுவர்களை அவர்களின் பெற்றோரை நினைத்து நினைத்து வேதனைப்பட்டாள் எனினும் பலிகளை நம்பி மோசம் போன தன் மகனை கருணையற்றவர்களின் கையில் கொடுத்த சம்பவங் களையும் அவள் கண்ணீர்பெருக, தன் நாட்குறிப்பில் எழுதி வைத்தாள். தைமாதம் இருபதாவது பிறந்ததினம் கொண்டாடிய மறுநாள் கொண்டுபோய் அவனை கொடுத்தாள். “அவர்கள் பிடித்துச்சென்றார்கள் நான் மீட்டு வந்தேன் எனக்கூற”

“ஓமம்மா நாங்கள் விசாரிச்சிட்டு வீட்ட கொணந்து விடுறம்” என்று சொன்னதை நம்பி. மண மேடைக்கு அனுப்புவது போல பிணமேடைக்கு அனுப்பி வைத்த கொடுமையை பக்கம் பக்கமா எழுதி வருந்தி யிருந்தாள். திடீரென ஒருநாள் அவளது எழுத்துக்கள் அடங்கிய பையை எடுத்து வெளியே போட்டிருந்தார்கள். “ஏன்” என்று கேட்டாள். “அது அலுவலக அறை அங்கே இதை வைக்க வேண்டாம் உங்கட ஏனைய உடைமை களோட வையுங்க” என்றாள் புதிய பொறுப்பாளர். இதற்கு முன் இங்கிருந்த போராளிகள் கொடுத்த மரியாதையை இப்போது தர புதியவள் மறுத்தாள். அவள் பேசாமல் தனது பொருட்களை கொண்டு சென்று மறுபடி அடுக்கினாள். அப்போதுதான் கவனித்தாள் தனது காணாமற் போன... இல்லை காணாமல் ஆக்கப் பட்ட மகனைப்பற்றிய நாட்குறிப்பு தொலைந்து போயிருந்தது. அவளுக்கு மனம் துணுக்கென்றிருந்தது. இதுவரை இருந்தது போலல்லாமல் இப்போது அவளுக்கு இயக்கத்தின் உண்மைமுகம் தெரியத் தொடங்கியிருந்தது. அற்ப விடயங்களுக்காக அதிகூடிய தண்டனையாக மரணதண்டனை வழங்குவதையும் அதுவும் சரியான காரணமில்லாமல் நடப்பதாகவும் அறிந்திருந்தாள். இப்போது காணாமற்போன அந்தக் குறிப்பேட்டில் அவள் முழுக்க முழுக்க இயக்கத்தின் மீது வசைபாடியிருந்தாள். அது தவிர்க்க முடியாதது ஏனெனில் அது அவளது டயறி, அதை எடுத்து படிக்கு மளவுக்கு வாசிப்பில் காதல் கொண்ட எவரும் இங் கில்லை. எனவே அது அவர்களுடைய கோப்புகளுடன் எங்காவது கிடக்கும் சரி பொறுப்பாளர் இல்லாத நேரம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய்த் தேடிப்பாப்பம். என்று தன்னை சமாதானப் படுத்திக் கொண்டாள். அந்த நேரத்தில் அந்த குறிப்பேடு வேலுப்பிள்ளை பிரபாகரனின் கையிலிருந்தது. அதை அவர் கவனமாக வாசித்துக் கொண்டிருந்தார்.

33

அவள் மிகவும் சோர்ந்து போனாள் முகாமின் நடவடிக்கைகள் அவள் வந்தபோது இருந்த மாதிரி இப்போது இல்லை. எனவே அவள் மருத்துவனைச் செயற்பாடுகளுடன் தன் செயல்களை மட்டுப்படுத்திக் கொண்டாள். புதிதாக பயிற்சி இல்லாமலே அரசியல் வேலைகளுக்காக அனுப்பப்பட்ட போராளிகளில் மூவர், ஒன்றாக துண்டு கொடுத்தனர். அதனால் பொறுப் பாளரின் நடவடிக்கைகள் பற்றிய சந்தேகம் மேலிடத் திற்கு ஏற்பட்டது. யாழ்ப்பாணத்திலிருந்து மகளிர் அரசியற்றுறை போராளி தன் பரிவாரங்களுடன் வன்னிக் கான விஜயத்தை மேற்கொண்டாள். ஆனையிறவுச் சமரில் சேர்ந்த பயிற்சியில்லாமல் நிறுத்தி வைக்கப்பட்ட பெண்களில் ஒரு தொகுதியினரை முதற்கட்டமாக பயிற்சிக்கு அனுப்பி வைத்தனர். துண்டு கொடுத்த பெண் களை வேறு முகாமுக்கு முகாம் வேலைகளுக்காக அனுப்பி வைத்தனர்.

"நளாயினி வருவாவா" என்று கேட்டாள் லெச்சிமி. அவள் பணிவாக,

"வாங்க அன்ரி இருங்க, நாளாயினி இனி இங்க வர மாட்டா... உங்கட கொழும்புப்பயணமும் அண்ணை வேண்டாமெண்டிட்டார், அவங்கட பாது காப்பு சரியில்லை எண்டிட்டார். அதோட பிரேமதாஸ வுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையும் நிறுத்தப்பட்டிட்டுது." என்றவள். சற்று நிதானித்து விட்டு... "ஏனன்ரி நீங்களும் பயிற்சி எடுத்தா என்ன? நீங்கள் ஒரு கடின உழைப்பாளி. உவளவு தூரம் சைக்கி ளெல்லாம் ஓடுறியள். உங்களால ஏலும். யோசிச்சுப் பாருங்க" என்றாள்.

சைக்கிளோடியதே பெரும் போராட்டமாகத் தானே அப்போது இருந்தது. பெண்கள் சைக்கிளோடு வதா என்று அதட்டிய அந்த பெருந்தகைகள் பெண்களா கவே இருந்தார்கள். இன்று ஏராளமான பெண்கள் சைக் கிளோடவேண்டிய தேவை ஏற்பட்டபின் குடும்பச்சுமை ஆண்களுக்கு வெகுவாகக் குறைந்துவிட்டது. இந்த சைக்கிளைப்பற்றி அவள் பேசப்புகுந்தால் அதற்கு கோவில் கட்டி கும்பிட வேண்டியேற்படும். அது செய்த சேவைகளும் மிக அதிகம். தொந்தரவுகளும் அதே யளவுக்கு மிக அதிகம்தான் இப்போது பயிற்சிக்கு வரும் போது அதை முகாமில் வைத்து பூட்டிவிட்டே போகலாம். வவுனியா முகாமில் அதை ஒருவரும் எடுக்க மாட்டார்கள் என்ற துணிவும் இருந்தது காரணம் அது ஆண்களுக்கான சைக்கிள். அங்கே யாரும் தொட மாட்டார்கள். சைக்கிளை அங்கே வைத்துவிட்டு தாரணி யிடம் அதை எப்படியாவது வீட்டில் சேர்த்துவிடும்படி சொன்னாள். அவள்தான் அவர்களுடைய கிராமத்தின் பிரதேச பொறுப்பிலிருந்தாள்

அவளுக்கு இப்போது ஏதும் பொறுப்பு களில்லை. இருந்த மகனும் போராடப்போக முடிவெடுத்த போது, அவளும் கூடவே வந்துவிட்டாள். ஆனால் அண்மையில் சில நாட்களாக முகாம் வாழ்க்கை அவளுக்கு பிடிக்கவில்லை. அவள் எநதப் பிள்ளைகளின் பண்பையும் அன்பையும் பார்த்து வியந்து இயக்கத்துக்கு வந்தாளோ அந்தப்பிள்ளைகள் போல எல்லோரும் இல்லை.. இங்கே அதிகாரம், பெருமை, ஒரு அளவில் திமிர்கூட ஆட்சி செய்தது. சாதாரண போராளிகளிடம் எதிர்பார்க்கப்பட்ட நேர்மை ஒழுக்கம் என்பவை பொறுப்பாளர்களிடம் இல்லை. அவள் மனம் சோர்ந்து கிடந்த இந்த நேரத்தில் இந்த கோரிக்கை வந்து விழுகிறது. இராணுவப் பயிற்சி எடுக்காது போராளி என்ற ஒன்று இல்லவேயில்லை. பதிலாக அவள் ஒரு வேலைக்காரி, உதவியாள், அல்லது தங்கி வாழ்பவள். எனவே சவாலாக ஏற்றுக்கொண்டு இந்த பயிற்சியை எடுத்து அவள் போராளியானால்... அவளுக்கென் றொரு அங்கீகாரம், மரியாதை கிடைக்கும். இயலாது என்பது எனது அதிகாரத்தில் இல்லை என்ற நெப்போலியனை அவள் வாசித்திருக்கிறாள். அதைவிட பெருந்துயரத்தையும், கஸ்டத்தையும் அனுபவித்து அவற்றைக்கடந்து வந்தவள்தான். மாலையில் அவள் பொறுப்பாளரிடம் தனது சம்மதத்தை தெரிவித்தாள்.

"நாளைக்கு புறப்படுகிறோம். நீங்களும் ரெடியாகுங்க எங்களோட வாங்க." என்றாள். லெச்சிமி தன்னிடமிருந்த இரண்டு செழலைகளையும் தான் எழுதிவைத்தவற்றில் முக்கியமானவற்றையும் எடுத்துக் கொண்டாள் மீதியை தோட்டப்பக்கம் கொண்டு சென்று தீயிட்டு அழித்தாள் அப்போது பானு ஒரு கொப்பியை கொண்டுவந்து கொடுத்தாள். "அன்ரீ இது உங்கடயா பாருங்க உங்கட எழுத்துப் போலதான் கிடக்கு" என்று கொடுத்தாள். லெச்சிமி அதிசயித்தாள். "அட இது எங்க கிடந்தது." அதை மார்போடு அணைத்து ஒரு பெருமூச்சு விட்டாள் பின்னர் தனது உடைமைகளடங்கிய பையில கொண்டுபோய் வைத்துவிட்டு வந்தாள்.

மறுநாள் காலை தத்தமது பொதிகளோடு எல்லோரும் வரவேற்புக் கூடத்தருகே நின்றனர். திடீரென பொறுப்பாளர் "அன்ரீ நீங்கள் தொலைத்த கொப்பியை பானு தந்திட்டாவா? என்று கேட்டாள்."

"அட அது தொலைந்து போனது உங்களுக்கு எப்பிடி தெரியும்" என்று கேட்டாள்.

" மன்னிச்சுக் கொள்ளுங்க அன்ரி அதை பானு உங்களுக்கு தெரியாம எடுத்து எனக்குத்தான் அனுப்பினவா, அதை நான் வாசிச்சு பாத்திட்டு அண்ணைக்கு அனுப்பினனான். அவரும் முற்றா வாசிச்சிட்டு எங்களட்ட இது எப்பிடி கிடைச்சது என்று கேட்டார். நான் சொல்லிப்போட்டன் பானு உங்களுக்கு தெரியாம எடுத்து எனக்கு அனுப்பினதா... அண்ணைக்கு சரியான கோவம் ஒரு தாய்க்கு இதைவிட பெரிய துயரத்தை குடுக்க முடியாது. அவவின்ர ஒவ் வொரு வரியும் என்னையறியாம கீழ்க்கோடு குறிப்பெல் லாம் போட்டிருக்கிறன். நீங்கள் செய்தது பெரிய தவறு. அவவிட்ட மன்னிப்புக் கேட்டு இதை அவவிட்ட திருப்பிக் குடுங்க.. எனக்கு படிக்க முடியேல்ல இவ்வளவு கேவலமாவா நடப்பீங்க என்று பேசினார். பானு மன்னிப்பு கேட்டவவா?"

"இல்ல உங்கட கொப்பி இங்கதான் மறைஞ்சு கிடந்தது எண்டு சொல்லித்தந்தா" என்றாள் லெச்சிமி. அவள் ஏற்கெனவே தலைவரை சந்தித்து உரையாடியிருக்கிறாள். அப்போதே அவர்மீது ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியாதை பிறந்திருந்தது. அது இப்போது சிகரத்தில் ஏறியது. மறுபடியும் "எங்களை மன்னிச்சுக் கொள்ளுங்க" என்றாள் அவள். லெச்சிமிக்கு வார்த்தை வரவில்லை.

***

யாழ்ப்பாணம் பஸ்தரிப்பு நிலையத்தை மட்டுமே அவளுக்குத் தெரியும் அதுவும் அவள் திருமணமான புதிதில் அவளுடைய கணவனின் பெற்றோர் இருந்த ஊருக்கு வந்திருக்கிறாள்". அது சுமார் முப்பது வருடங்களுக்குமுன். இப்போது அவர்கள் நேராக திருநெல்வேலிக்கு வந்திறங்கினர் அவளை பலாலி வீதியிலிருந்தஒரு மகளிர் முகாமில் கொண்டு வந்து விட்டனர். அங்கு மேலும் பல பெண்கள் இருந்தனர் அவர்கள் எதிர்வரும் பயிற்சிக்காக வந்திருந்தனர். அதை விட அது தையல்தைக்கும் ஒரு கூடமாகவும் இருந்தது. உணவு வேறெங்கோஇருந்து வேளா வேளைக்கு வந்தது. மற்றப்படி பெண்கள் வேலைகளின்றி பேசிக் கொண்டும் விளையாடிக்கொண்டுமிருந்தனர். அந்த முகாமில்தான் ஒரு வருடத்திற்கு முன் தன் மகனைப் பற்றி தெரிந்து கொள்ள வந்திருந்தாள். அப்போது இது சலீமுடைய முகாம் என்று பேசப்பட்டது. இப்போது இதற்கு மாலதி முகாம் என்று பெயர். இங்கு வந்த வலிகாமம் பிரதேச பொறுப்பாளர் அவளுக்கு முன்பே தெரிந்தவள், முன்னமே வன்னிப்பகுதியிலிருந்து வந்த பல பெண்கள் முன்னணி பொறுப்பில் இருக்கிறார்கள்.

அவளுக்கான துணையாக இரு ஆசிரியைகள், அவரும் கிளிநொச்சியை சேர்ந்தவர்தான் பயிற்சிக்கு வந்திருந்தனர். அவர்களுக்கான சீருடை சாதாரண காற்சட்டைத்துணியில் தைக்கப்பட்டு வந்தது ஒரு சாம்பல் நிற நீளக்காற்சட்டையும் இருபுறம் பொக்கற் வைத்து தைத்த சேட்டும். இடையில் கட்டும் பட்டியும் தரப்பட்டது. அதை மாற்றிக் கொள்ளும் போது லெச்சிமிக்கு மகிழ்ச்சியாக இருந்தது காரணம் அவள் இந்த ஆறுயார் சேலையை கட்டிக்கொண்டு ஆண்கள் ஓடும் மிதிவண்டியில் டபுள் ஏற்றி ஓடாதபோது காற்றில் அள்ளுப்படும் சேலையோடு மிகவும் போராடுவாள். அப்போதெல்லாம் போராளிகள் போல இந்த காற் சட்டையை தானும் அணிந்தால் எவ்வளவு இலகுவாக இருக்கும் என நினைத்துக் கொள்வாள்.

இப்போது தனது நாற்பத்தைந்தாவது வயதில் சேலையைக் கழற்றி விட்டு காற்சட்டையில் கால்களை நுழைத்து போட்டுக்கொண்டாள். முழுமையான ஒரு ராணுவப்பயிற்சிக்கு தயாரானாள். அவளுடைய மகன் சுதன் தன் நண்பர்களுடன் வந்தான். அவள் வந்து நிற்பதை பொறுப்பாளர், அவனுடைய பொறுப் பாளருக்கு சொல்லியிருந்தாள். அது ஒரு அதிசயமான செய்திதான் மகன் ஒருவன் போராளி, ஒருவன் மாவீரன். தாயும் பயிற்சிக்கு வந்திருக்கிறாள். மகளிர் அமைப்பினர் இதை பேசிப் பேசி அதிசயித்தனர். தாயை இயக்க சீருடையில் பார்த்த சுதன் வியந்தான். "அப்ப துணிஞ் சிட்டீங்க?" என்றான்.

அவனும் அவனது நண்பர்களும் சட்டக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தார்கள். விடுதலைப் புலிகளின் பாதுகாப்பு மற்றும் நீதிக்கான தனி அமைப்பை ஆரம்பமாக்கும் நோக்குடன் போராளிகள் தெரிவு செய்யப்பட்டு சட்டம் படிக்க வைத்துக் கொண்டிருந் தார்கள் அதில் சுதனும் இணைக்கப்பட்டிருந்தான். அதற்கு முன்பாகவே காவற்றுறை உருவாக்கப்பட்டு யாழ்நகரில் கடமையிலிருந்தது. இப்போது நீதியையும் அவர்களே வழங்குவதால். மக்கள் சலனப்பட்டனர். எனவே முறையாக ஒரு நீதித்துறையை உருவாக்கும் முயற்சி நடந்தது. அதனை மிகமிக ஆற்றலுள்ள பெரிய ஆசிரியர்கள் விரிவுரையாளர்கள் வழிநடத்தினார்கள். தமிழீழத்தின் தலை சிறந்த கல்விக்கூடம் பொற்பதி வீதியில் இயங்கியது. இதுவரைகாலமும் மூக்குப்போன செம்மைக்கு நடந்த விசாரணைகளை முறையான சட்டப்படி நடாத்தப் போவதாக தலைமை அறிவித்தது. அதற்காக சட்டப்புத்தகங்களையும் உருவாக்கினார்கள் அதில் முழுக்க பொதுவாக இலங்கையின் சட்டக் கல்லூரிக்கு சமதையான சட்டங்களே இருந்தன என்றா லும் தண்டனைச்சட்டக்கோவை (இது ஓறுப்புச்சட்டம் என தமிழில் வழங்கியது.) தேசவழமைச்சட்டம் இரண்டி லும் சிறு திருத்தம் செய்யப்பட்டது. ஈரோஸிலிருந்து இணைந்துகொண்ட பரா அவர்கள் இந்தத்துறைக்கு பொறுப்பாளரானார். அடுத்தவாரமே அவர்கள் பயிற்சிக் காக கொண்டு செல்லவிருந்தார்கள். அவளுக்கு மட்டு மல்ல ஆனையிறவுச் சமரின்போது இயக்கத்தில் இணைந்து பயிற்சி இல்லாமலே அரசியற்பணிகளை செய்து கொண்டிருந்த எழுபது பிள்ளைகள் அவளுடன் சேர்ந்து கொண்டார்கள்.

பயிற்சி முகாமை அடைந்தபின் அங்கும் ஏராள மான பிள்ளைகள் இருப்பதை கண்டார்கள். அங்கே இவள் வந்திருப்பதை அறிந்து நளாயினி வந்து இவளைப் பார்த்தாள். விசேட அனுமதிதான் எவரையும் எவரும் பயிற்சி முகாமில் பார்க்க அனுமதியில்லை. எனினும் நாளாயினின் படையணியை கருத்தில் கொண்டு அவளை லெச்சிமியை பார்க்க அனுமதி வழங்கப் பட்டது. யாருக்கும் தெரியாமல் ரகசியமாக நடந்த சந்திப்பு. தான் கடற்புலிகள் மகளிர் அமைப்பு ஒன்றை உருவாக்கி இருப்பதாக நளாயினி சொன்னாள். அது வரை விடுதலைப்புலிகள் அமைப்பில் கடற்புலி கரும்புலி இரண்டிலும் பெண்கள் இல்லை. இப்போது முப்பத் தைந்து பெண்களுடன் ஆரம்பித்தோம் என்றாள். பயிற்சி முகாம்களில் கடற்புலிஏரியா எனப்படும் கரையோரப் பிரதேச போராளிகள் இருந்தால் அவர்கள் கடற்புலி களுக்கே சொந்தமாவார்கள் அதையும் பார்த்து தமக் குரிய பெண்களை கூட்டிச்செல்லவும் நளாயினி வந்திருந்தாள். அவளுடன் சுகன்யாவும் வந்திருந்தாள். அவளுடன் உரையாடும் போது "அக்கா பயிற்சி கஸ்ட மெண்டு விட்டிராதையுங்க வன்னியின்ர மானத்தை காப்பாத்துவீங்க எண்டு நினைக்கிறன்." என்றாள் லெச்சிமி சிரித்தாள்.

வெயிலறியாமல் குளிர்மையாக வளர்ந்து நகரத்தின் உச்சபட்ச வசதிகள் நிறைந்த பாடசாலை களில் படித்து முகத்தில் பொலிவு குறையாத அழகிய பணக்காரவீட்டுப் பெண்களும் அந்த கூட்டத்தில் இருந்தார்கள். அவர்களாலேயே முடியுமென்றால் நான் செய்ய மாட்டேனா? லேச்சிமி மனதுக்குள் இறுகினாள். பயிற்சி முகாமின் வாழ்க்கை ஒரு கம்பஸ் வாழ்க்கை என்று பயிற்சி ஆசிரியர் சொன்னது போல அது கம்பஸ் வாழ்க்கையல்ல நஞ்சுண்டகாடு நாவலில் குணா கவியழகன் அதை திறம்பட விபரித்திருக்கிறார் எனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே வேண்டாம்.

லெச்சிமி எல்லா பயிற்சிகளிலும் திறமையாக செயற்பட்டு முதன்முதலாக பயிற்சி முகாமிலேயே ஒரு "ரீ சிக்ஸ்ரீன்" ரக துப்பாக்கியை பரிசாக பெற்றாள். ஏழு மாதங்கள் நடந்த பயிற்சிக்காலத்தில் வெளியுலகம் தெரியாமலே வாழ்ந்து முடித்தார்கள் வெளியே வந்த போது, சனாதிபதி பிரேமதாஸ, தளபதி கிட்டுவுடன் பன்னிருவர், இறந்து போன செய்தி கிடைத்தது. மேலும், அவர்களுடைய அரசியற்றுறைப் பொறுப்பாளர் மாற்றப் பட்டு, வன்னிப்பிராந்திய பொறுப்பில் இருந்த சுருதி ஒட்டுமொத்த மகளிர் அமைப்பின் பொறுப்பாளராகி யிருந்தாள்.

இயக்கமும் சினிமா உலகமும் ஒரு விசயத்தில் ஒற்றுமையாக இருந்தன. ஒரு பெண் எவ்வளவு திறமை சாலியாக இருந்தாலும், அவள் காதலித்தால் முதல் நடவடிக்கையாக அவள் முன்னரங்க காவல் நிலைக்கு அனுப்பப்படுவாள். குறைந்த பட்சம் மூன்று மாதங் களாவது. அங்கிருந்து அவள் தப்பிவந்தாலும் திரு மணத்தை சாட்டி அவளது பதவி பறிபோகும். எங்காவது ஒரு ஓரமாக பணிசெய்ய வேண்டியதாகிவிடும். அவளுக்குப்பின்னுள்ள போராளி பதவிக்கு வருவாள். வந்தவுடன் அவள் செய்யும் முக்கியமான வேலைகள் இன்னும் வியப்பாக இருக்கும்.

(தொடரும்)

---

# குவளையாற் பட்டது



உயர் இரக மூலப் பொருளில்
இயந்திர வித்தையில்
செய்த
நல்ல வனப்பான
குவளை

பார்த்தால்
பளிச்சென
பக்கம் எல்லாம் தெரியும்
பார்க்கும்
முகமும் தெரியும்

குவளையை வாங்க
சிரமப் பரிகாரம் செய்து
சிரசுகள் அலைமோதும்
சீரான வியாபாரம்
சிறப்புற நடந்தேறும்

உழைத்து ஓய்ந்த உடம்பிற்கு
ஒரு குவளை வேணுமா?
இல்லை இல்லை
ஒரு குவளைதான் போதுமா?

உழைத்தவர்தான் யாரோ...?

ஓய்வெடுக்க
ஒரு கவலை மறக்க
ஓயாமல்
பந்தியில் முந்தி அடிப்பவர்
யார் யாரோ...?

பாத்திரம் தேய்த்து
பசியினை ஒழித்துவைத்து
கையில் ரேகைகள் தேய
இரைப்பைக்குத் தீனி போட
ஏச்சுப் பேச்சுகள் தாங்கி
எச்சில் சோறு உண்டு
உழைத்த பணம்
பிள்ளையைத் தவிர

ஏதும் பரிசளிக்காத
உத்தம புத்திரன் - என்
கண்ணில் அகப்பட்டதால்
கையில் கைதியாகி
எமன் கடைக்கு
இலக்குமியாய்ப் போய்விட்டதே...
அவள் உடல் தேய்ந்து
உழைத்த பணம்

குவளைக்குள்
மூழ்கி எழுந்த நான்
குதூகலிப்பில்
குடிசை வந்தேன்

கவனிக்காமற்
கற்றுக்கொண்டிருந்தான்
என் சாயலில் ஒருத்தன்
எட்டி உதைத்தேன்
சேய்மையில் விழுந்து
சிரச்சேதமானான்
அய்யோ...
அழுகுரலில் ஓடிவந்தாள்
வாய்க்கும் அவ்வப்போது வயிற்றுக்குக்
கீழும்
பசியாற்றும் பாவை
வலிமை உந்த
வயிற்றில் பாதம் புதைத்தேன்
பட்ட பொழுதே
சுருண்டுவிட்டாள்

வேறென்ன கிடக்கு?
விழுந்து ஆழ்ந்தேன்
நித்திரையில்
ஓய்வெடுக்க...

விழித்துப் பார்த்தேன்
விழி பிதுங்கிப் போனேன்
அந்தோ...!
குலவிளக்கு அணைந்துவிட்டது
குலத்தளை பேதலித்துவிட்டது
நான்...நான் மட்டும்
இன்னும் மனிதனாய்?

அந்தோ...!
என் குடும்ப விருட்சம்
பட்டதே குவளையால்.
............

-தமிழ்க்கீரன்
கல்மடு,கல்குடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவநதி வெளியீடுகள்




அருண்மொழிவர்மன்
கட்டுரைகள்
400.00




கோகிலா மகேந்திரன்
கட்டுரைகள்
600.00




க.பரணீதரன்
கட்டுரைகள்
500.00




பா.இரகுவரன்
கட்டுரைகள்
750.00




சங்கரி சிவகணேசன்
கவிதை
750.00




ச.பூபாலபிள்ளை
கட்டுரை
1500.00

இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாமணி பரணீதரன் அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org